இருக்கிறது	(it) is; occasionally, as here, this may be used with a plural irrational subject to mean "they are."

வாசனை	fragrance, odor
புதிய, புது	new
போய் விட்டு வருகிறேன்	goodbye (literally, "I'll go and come")
போய் விட்டு வாருங்கள்	goodbye (literally, "Go and come")

Grammar

5.1. Oblique forms. The case suffixes, which you will learn in the next few lessons, are added onto what is called the oblique form of a noun or pronoun. These oblique forms may also be used unaugmented as genitives (especially pronouns and proper nouns -- see 3.2); the oblique form of a noun may be used as the first element of a compound noun, as in "*well* water" (see 5.4). When a noun or pronoun is used as a subject or as a predicate noun (e.g. "He is a *man*"), the nominative (i.e. nonoblique) form is used.

5.2. The oblique forms of pronouns. The following nominative and oblique forms must be memorized:

Nominative		Oblique
நான்	I	என்
நாங்கள்	we (excl.)	எங்கள்
நாம்	we (incl.)	நம்
நீ	you (familar)	உன்
நீங்கள்	you (resp. + pl.)	உங்கள்
நீர்	you (resp.)	உம்
அது	that	அதன், (அத் -)
இது	this	இதன் (இத் -)
அவை	those things	அவற்று-
அவைகள்	those things	அவைகள்
இவை	these things	இவற்று -
இவைகள்	these things	இவைகள்

For the other pronouns (அவன், அவள், அவர்கள், இவர், etc.), the oblique form is the same as the nominative form.

5.3. The oblique forms of nouns. For most nouns, the nominative and oblique form is the same. The exceptions are all nouns ending in -am, -Vṭu and -Vṟu.

Nouns in -am have the oblique form in -attu; nouns in -Vṭu, in -Vṭṭu; and nouns in -Vṟu, in -Vṟṟu.

Nominative		Oblique
மரம்	tree	மரத்து -
வீடு	house	வீட்டு -
ஆறு	river	ஆற்று -

Note that even those nouns that have different nominative and oblique forms in the singular use the same form in the plural:

மரங்கள்	மரங்கள்
வீடுகள்	வீடுகள்
ஆறுகள்	ஆறுகள்.

5.4. The use of the oblique. As has already been stated, the primary use of the oblique is as a base to which to add the case endings and as a genitive. In this latter use, என் means "my," உன் means "your," அவன் means "his," etc.

Like English, Tamil can make compound nouns (for example, ice cream). When it does this, the first of the two nouns is put into the oblique:

கிணற்றுத்தண்ணீர் well water, from கிணறு, well, and தண்ணீர், water.

காட்டுப்பூனை wildcat, from காடு, forest, and பூனை cat.

பக்கத்து வீடு the next house, from பக்கம், area nearby, and வீடு, house.

If, however, the first member of the compound noun ends in -am, the -m is often dropped: ஆங்கிலப்புஸ்தகம், English book, from ஆங்கிலம், English, and புஸ்தகம், book. Note that in these compounds, the first letter of the second word is doubled after a vowel if it is k-, c-, t-, or p-. The rules for doubling will be given in lesson 18.

5.5. The genitive case. Though for pronouns the simple oblique form may be used for the genitive, the case ending - உடைய, - அது, or - இன், may be added to the oblique to make the genitive. These endings are also added to nouns (in their oblique forms) to form their genitives. Note that when -atu is added to a noun or pronoun of one short syllable, rule 2.5 is not observed; that is, the final consonant of the noun or pronoun is not doubled. But when -uṭaiya is added, the rule is observed. Thus எனது, but என்னுடைய. For nouns whose oblique is different from the nominative, the endings - இன் இனது, இனுடைய, or simply - உடைய are used. The words அது and இது usually take the genitive ending - அன். Thus, அதன், இதன். The genitive must be placed *before the word it modifies.* Thus அப்பாவுடைய வீடு, "father's house," "the house of father." It is *not* permissible to say வீடு அப்பாவுடைய The genitive is translated by an English "of" clause, by a possessive in "'s," or, if it is a pronoun, by a possessive pronoun.

நான்	I	என்னுடைய, எனது, என்	my
நாய்	dog	நாயுடைய	the dog's, of the dog
அவன்	he	அவனுடைய, அவனது, அவன்	his
மரம்	tree	மரத்துடைய, மரத்தின்	the tree's, of the tree
அது	that, it	அதனுடைய, அதன்	its
வீடு	house	வீட்டுடைய, வீட்டின், வீட்டு	of the house

The plural of a noun that has a different nominative and oblique in the singular is treated like a noun that is the same in the nominative and oblique. This is because the plural of nouns does not change between theose two forms. Thus

வீடுகள்	houses	வீடுகளுடைய, வீடுகளது	of the houses.

Grammar Summary

5.2S. The oblique forms of pronouns. You must memorize these forms:

என், எங்கள், நம், உன், உங்கள், உம், அதன் (அத்)

5.3S. The oblique forms of nouns. இதன் (இத்) அவற்று-, இவற்று-

-am → -attu

-Vṭu → -Vṭṭu

-Vr̲u → -Vr̲r̲u.

5.5S. The genitive case.

For pronouns, the unaltered oblique stem, or the oblique stem + -uṭaiya or -atu.

For nouns that have the same nominative and oblique, the oblique stem + -uṭaiya or -atu.

For nouns that have different nominatives and obliques, the oblique stem + -in̲, -in̲uṭaiya, -in̲atu, or simply -uṭaiya.

For atu, itu: atan̲, itan̲.

EXERCISES

I. Give the genitive forms for the following:

நான், நாங்கள், நீ, நீங்கள், அது, அவை, அவன், அவர்

II. Match A to B.

A	B
1. அது எங்கள்	யார்?
2. அவன்	வராதீர்கள்.
3. அவர்கள்	வீடு
4. இப்போது	பார்க்க வாருங்கள்
5. தோட்டம்	நல்ல மாணவர்கள்

III. Fill in the blanks.

1. அது ______ பள்ளிக்கூடம். (good)
2. நீங்கள் ______? (who)
3. அங்கே ______. (போ neg)
4. இது ______ தோட்டம். (our)
5. அவர்கள் வீடு ______. (come to see)
6. அது ______ பாடமா? (your)
7. அவைகள் ______ புஸ்தகங்கள்? (whose)
8. அப்படி ______. (don't study)
9. அவைகள் ______ பூக்கள். (big)

IV. Translate into Tamil.

1. This is my school.
2. She is our mother.
3. Is he your father or their father?
4. That is not our garden. Do not go to study there.
5. This is my father's house.
6. These are his friend's books.

பாடம் 6 பழக்கடை

ஜி: கண்ணன், அங்கே ஒரு பழக்கடை இருக்கிறது. எனக்குக் கொஞ்சம் பழம் வாங்குங்கள்.

கடைக்காரர்: வாருங்கள். இவைகள் எல்லாம் புதிய பழங்கள். இதைப் பாருங்கள்.

க : மாம்பழம் டஜன் என்ன விலை?

கடை : மாம்பழம் டஜன் நான்கு ரூபாய். இது மிகவும் நல்ல பழம், ஸார்.

க : அந்த விலை மிகவும் அதிகம். மூன்று ரூபாய்க்குக் கொடுங்கள்.

கடை : இல்லை, மூன்றரை ரூபாய் கொடுங்கள்.

ஜி : சரி, எனக்கு அரை டஜன் மாம்பழம் கொடுங்கள்.

க : ஜிம், இந்த ஆரஞ்சுப் பழத்தைப் பாருங்கள். உங்களுக்கு ஆரஞ்சுப் பழம் இஷ்டமா?

ஜி : ஆமாம், எனக்கு ஆரஞ்சுப்பழம் மிகவும் இஷ்டம். கடைக்காரர், ஆரஞ்சுப்பழம் டஜன் என்ன விலை?

கடை : ஆரஞ்சுப்பழ விலை இப்போது மிகவும் அதிகம். ஒரு டஜன் ஆறு ரூபாய், ஸார்.

க : இல்லை, பக்கத்துக் கடையில் ஆரஞ்சுப்பழம் டஜன் ஐந்து ரூபாய் தான்.

கடை : என்ன ஸார், பொறுங்கள். இந்தாருங்கள் ஒரு டஜன். ஐந்து ரூபாய் கொடுங்கள்.

க : சரி, போய்விட்டு வருகிறோம்.

கடை : போய்விட்டு வாருங்கள்.

Basic Vocabulary

திற	(7) open
பழம்	fruit
கடை	store
வாங்கு	(3) buy, get
விலை	price
ஒன்று	one (noun)
இரண்டு	two
மூன்று	three
நான்கு	four
ஐந்து	five
அரை, பாதி	half
ரூபாய்	rupee
அதிகம்	excess; excessive, too much
இஷ்டம்	desired, what is desired (see 6.2)
வில்	(5d) sell

Vocabulary for Story

இருக்கிறது	(it) is, (there) is
கடைக்காரர்	shopkeeper
மாம்பழம்	mango
டஜன்	dozen
ஸார்	sir
பொறுங்கள்	be patient
இந்தாருங்கள்	here! here is!
போய்விட்டு வருகிறோம்	goodbye (literally, "we will go and come")
போய்விட்டு வாருங்கள்	goodbye (literally, "go and come")
மிகவும்	very, very much

Grammar

6.1. Formation of the dative case. Like the other case suffixes, the dative suffix is added to the oblique form of the singular or plural noun or pronoun to which it is to be suffixed. The dative is formed by adding -க்கு to an oblique form ending in -i, -ī, or -ai, and -உக்கு to one ending in any other letter. In addition to their regular forms, அது and இது make அதற்கு and இதற்கு

Nominative		Oblique	Dative
கண்	eye	கண்	கண்ணுக்கு
கறி	curry	கறி	கறிக்கு
ஈ.	fly	ஈ.	ஈ.க்கு
யானை	elephant	யானை	யானைக்கு
வீடு	house	வீட்டு	வீட்டுக்கு
பூ	flower	பூ	பூவுக்கு
அப்பா	father	அப்பா	அப்பாவுக்கு
ஆறு	river	ஆற்று	ஆற்றுக்கு
தெரு	street	தெரு	தெருவுக்கு
படம்	picture	படத்து	படத்துக்கு
படங்கள்	pictures	படங்கள்	படங்களுக்கு

The pronouns of the first and second persons* that do not end in -kaḷ take the dative ending -அக்கு. For these forms, the final consonant of the stem is not doubled, even though it should be according to rule 2.5.

	நான்	I	எனக்கு
	நாம்	we (incl.)	நமக்கு
	நீ	you (sg., nonresp.)	உனக்கு
	நீர்	you (sg., resp.)	உமக்கு
But	நீங்கள்	you (resp. sg., pl.)	உங்களுக்கு

---

*This also applies to the reflexive pronoun, தான் and its old plural, தம். You will have this form in lesson 22.

6.2. Uses of the dative. The dative has four main uses. 1. It may indicate "for," "for the sake of." 2. It is added to a word to which motion is expressed. 3. It is added to a noun to indicate that the noun is governed by a postposition that directly follows it. 4. It is added to the subject of most of the impersonal verbs. The third usage will be exemplified in lesson 8; the fourth, in lessons 9-11.

In the first of these usages, the dative is often used for the indirect object. In the sentence "She gave me a fruit," for example, the word "me" may be put in the dative. But if the action is not performed *for the sake of* the indirect object -- if she gave me the fruit so that I could give it to someone else -- then the suffix - இடம் is used instead of the dative. (Like other case endings, - இடம் is added to the oblique stem).

எனக்கு பழம் கொடுங்கள்.

Give me the fruit (so that I can eat it).

என்னிடம் பழம் கொடுங்கள்.

Give me the fruit (so that I can give it to someone else).

எனக்கு புஸ்தகம் கொண்டுவாருங்கள்

Bring me the book (so that I can read it).

என்னிடம் புஸ்தகம் கொண்டுவாருங்கள்.

Bring me the book (so that I can give it to someone else).

In informal Tamil, the dative is often used with the word இஷ்டம் (literally, "desired," "what is desired") to express wish or desire:

அது அவனுக்கு இஷ்டம்

He wants that.

அவனுக்கு மதுரைக்குப் போக இஷ்டம்.

He wants to go to Madurai.

இது தான் எனக்கு இஷ்டம்.

This is just what I want.

The second use of the dative is as the case of a word to which motion is expressed. *If the word is rational,* -இடம் *is used instead of the dative.*

அந்த வீட்டுக்குப் போகாதீர்கள்.
Do not go to that house.

என்னிடம் வாருங்கள்.
Come to me.

அவர்களிடம் போங்கள்.
Go to them.

6.3. The accusative case. This case is used for direct objects. It is formed by adding -ஐ to the oblique form of nouns and pronouns. *If the direct object is rational (i.e. is a human being), the accusative case form must be used; however, if the direct object is irrational (a non-human), the nominative or accusative form may be used.*

Nominative	Accusative		
நான்	என்னை		
அவள்	அவளை		
கண்ணன்	கண்ணனை		
வீடு	வீட்டை	or	வீடு
புஸ்தகம்	புஸ்தகத்தை	or	புஸ்தகம்
மாணவர்கள்	மாணவர்களை		
ஆறுகள் rivers	ஆறுகளை	or	ஆறுகள்.

The following are examples of the accusative:

அவனுக்கு இந்தப் பழத்தைக் கொடுங்கள்.
Give him this fruit.

இந்த புஸ்தகத்தைப் படிக்காதே.
Do not read this book.

The verb சொல் used with an infinitive and accusative means "Tell ___ to ___." Thus அவனைத் தண்ணீர் கொண்டுவரச் சொல்லுங்கள். "Tell him to bring water."

Grammar Summary

6.1S. Formation of the dative.

Nouns ending in -i, -ī, -ai: oblique form + க்கு .

Other nouns: oblique form + உக்கு .

Pronouns of the first and second person that do not end in -kaḷ: oblique form + அக்கு , without doubling the final consonant of the oblique form.

6.3S. The accusative case.

Oblique form + ஐ . Irrational nouns in the accusative may omit the case ending, so that their form is the same as the nominative.

EXERCISES

I. Give the accusative form of each word below.

நான், நீங்கள், நாங்கள், நீ, கடை, பழம்,
வீடு, விலை, ஆறு, சிநேகிதன்

II. Give the dative form of each word below.

நான், நாங்கள், நீ, நீங்கள், அது, அவை,
பூ, அப்பா, ரூபாய், வீடு, கடை, பழம்

III. Match the following:

1. அவனைப்	இஷ்டம்
2. அவர்களுக்கு பழம்	இல்லை
3. அது என் புஸ்தகம்	வாங்குங்கள்
4. இது அவள்	பாருங்கள்
5. எனக்கு பூ	கொடுங்கள்

IV. Fill in the blanks.

1. இது என்ன ________? (price)
2. ________ வாங்குங்கள். (பழம் accus.)
3. ________ பேனா கொடுங்கள். (அவர் dative)
4. உங்களுக்கு என்ன மிகவும் ________? (like)
6. ________ சினிமா பாருங்கள். (now)

V. Translate into Tamil.

1. Do not bring the books to our garden.

2. Do not give the flowers to my friend. Give them to mother.

3. Do not buy those fruits for mother.

4. Bring the Tamil books and the pen to my friend.

5. The price of that pen is five rupees. That is excessive.

6. Come to my store to see the flowers.

பாடம் 7 கோவில்

க: ஜிம், உங்களுக்கு எங்களோடு கோவிலுக்கு வர இஷ்டமா?

ஜி: ஆமாம், எனக்கு உங்களோடு கோவிலுக்கு வர மிகவும் இஷ்டம்.
இது என்ன கோவில்?

க: இது சிவன் கோவில்

ஜி: இதன் பெயர் என்ன?

க: இதன் பெயர் கபாலீஸ்வரர் கோவில்.

ஜி: இவர் என் சிநேகிதர். இவர் பெயர் டாம். இவருக்கு
இந்த கோவிலைப் பார்க்க மிகவும் இஷ்டம்.

க: சரி, டாம், நீங்களும் வாருங்கள். எங்கள் கோவிலைப்
பாருங்கள்.

ஜி: கண்ணன், இது என்ன?

க: இது கோவிலுடைய குளம். இங்கே கை, கால் கழுவுங்கள்.

ஜி: எனக்கு நீங்கள் கடவுள்களின் பெயர்களை எல்லாம் சொல்லுங்கள்

க: சரி, இவர் தான் கணேசர். இவரை முதலில் கும்பிடுங்கள்.
அப்புறம் உள்ளே போங்கள்.

ஜி: கோவிலுக்கு வெளியே என்ன? கோபுரங்களா?

க: ஆமாம், இந்த கோவிலுக்கு நான்கு கோபுரங்கள்.
உள்ளே வாருங்கள். மற்ற எல்லாக் கடவுள்களையும்
பாருங்கள்.

Basic Vocabulary

கோவில்	temple
கை	hand
கால்	leg, foot
கடவுள்	God
எல்லாம்	all (see 7.3)
சொல்	(3, irregular in the past, given in 14.3) say
முதல்	first. முதலில் at first.
உள்ளே	inside
வெளியே	outside
ஆறு	six
ஏழு	seven
எட்டு	eight
ஒன்பது	nine
பத்து	ten
பாடு	(3) sing

Vocabulary for Story

சிவன்	Siva
குளம்	tank, pond
கழுவு	(3) clean, wash
கணேசர்	Ganesha, the elephant-headed god who is the elder son of Siva and Parvati.
கும்பிடு 4	bow to
கோவிலுக்கு வெளியே	outside the temple (see 8.3)
கோபுரம்	gopura, entrance tower of a temple
இந்த கோவிலுக்கு நான்கு கோபுரங்கள்	This temple has four gopuras (cf. 8.4).
மற்ற	other

Grammar

7.1. Formation and use of the sociative case. Like the other case suffixes, the sociative suffix is added to the oblique form of the singular or plural noun or pronoun to which it is to be attached. The suffix added is - ஓடு or - உடன் (the latter being more formal.) The sociative indicates that an action was performed in the company of a person; it translates English *with* when that word means "in the company of."

அவனோடு போங்கள்.

Go with him.

கண்ணனோடு பேசுங்கள்.

Speak with Kaṉṉaṉ.

என்னோடு வராதீர்கள்.

Do not come with me.

7.2. Formation and use of the instrumental case. To form the instrumental case, add -ஆல் to the oblique form of the word to be inflected. The ending - இனால் may also be used (also added to the oblique form), especially for those nouns whose oblique forms are different from their nominatives (that is, nouns in -am, -ṭu, and -ṟu). The instrumental indicates that an action was performed by means of something: it translates English *with* when that word means "by means of." Since both the sociative and instrumental may be translated into English by the word "with," it is important to distinguish their meanings.

அந்தப் பென்சிலால் எழுதுங்கள்.

Write with that pencil.

இந்தப் பணத்தால் அங்கே போங்கள்.

Go there with this money.

உங்கள் கண்களால் பாருங்கள்.

Look with your eyes.

7.3. The use of ellām, ellārum, ellōrum. In Tamil, the word "all" is expressed by the word எல்லாம் (irrational), and எல்லாரும் or எல்லோரும் (rational). The oblique form of எல்லாம் is எல்லாவற்று – உம் (cf. the oblique form of அவை). Endings are placed before the -உம் for both the rational and irrational forms. Thus,

Case	Irrational	Rational
Nominative	எல்லாம்	எல்லாரும், எல்லோரும்
Accusative	எல்லாவற்றையும்	எல்லாரையும்
Dative	எல்லாவற்றுக்கும்	எல்லாருக்கும்.

When any of these forms is used, it is placed directly after the word modified by *all* in English. Thus the declension of "all the stores" and "all the men" is as follows:

Nominative	கடைகள் எல்லாம், மனிதர்கள் எல்லாரும்
Accusative	கடைகள் எல்லாவற்றையும், மனிதர்கள் எல்லாரையும்
Dative	கடைகள் எல்லாவற்றுக்கும், மனிதர்கள் எல்லாவற்றுக்கும்

It is also possible (and at least as common) to place the word எல்லா - before the word modified by "all," and then to put - உம் on the modified word. "All the stores" and "all the men" may also be written:

Nominative	எல்லா கடைகளும், எல்லா மனிதர்களும்
Accusative	எல்லா கடைகளையும், எல்லா மனிதர்களையும்
Dative	எல்லா கடைகளுக்கும், எல்லா மனிதர்களுக்கும்

Grammar Summary

7.1S. Formation of the sociative case.

Oblique form + - ஓடு or (more formal) - உடன்.

7.2S. Formation of the instrumental case.

Oblique form + - இல் or - அக்குல்.

7.3S. Inflection of ellām.

Nominative: எல்லாம், எல்லாரும், எல்லோரும்

Oblique: எல்லாவற்று + உம்

Cases: எல்லாவற்று + case ending + - உம்.

EXERCISES

I. Give the instrumental form of each word below.

நான், நாங்கள், நீங்கள், நீ, அது, அவை,
கடவுள், எல்லாம், கோவில், அம்மா

II. Give the sociative form of each word below.

கை, கால், சிநேகிதர், எல்லாம், நீ, நாங்கள்,
நீங்கள், நான், தலை, கண், அப்பா

III. Match the following:

1. அவரோடு	பாருங்கள்
2. அதற்கு	சாப்பிடுங்கள்
3. கையால்	வரச் சொல்லுங்கள்
4. அவரை	கொடுக்காதீர்கள்
5. எல்லாரையும்	பேசுங்கள்

IV. Translate into Tamil.

1. Come to the temple now with them.

2. Do not eat with your hands with us.

3. Tell younger brother to bring the pen here.

4. Tell mother to go to the garden with my friend.

5. Open the store for them.

6. Tell the student to eat with father.

பாடம் 8 விருந்து

சண்முகம்: ஜிம், நான் உன்னுடைய சிநேகிதன். என் பெயர் சண்முகம். நாளைக்கு எங்கள் வீட்டில் ஒரு விருந்து. நீங்கள் அதற்கு கட்டாயம் வாருங்கள்.

ஜி: விருந்து உங்கள் வீட்டுக்கு உள்ளேயா?

ச: இல்லை, எங்கள் வீட்டுக்கு வெளியே ஒரு அழகான தோட்டம் இருக்கிறது. அந்தத் தோட்டத்தில் தான் விருந்து.

ஜி: உங்கள் வீடு எங்கே இருக்கிறது?

ச: எங்கள் வீடு அடையாற்றில் இருக்கிறது.

ஜி: அடையாறு என் வீட்டிலிருந்து மிகவும் தூரம்.

ச: உங்களிடம் கார் இல்லையா?

ஜி: இல்லை, ஆனால் எங்கள் வீட்டிலிருந்து உங்கள் வீட்டுக்கு வர ஒரு நல்ல பஸ் இருக்கிறது. விருந்து எத்தனை மணிக்கு?

ச: விருந்து மத்தியானம் ஒரு மணிக்கு.

ஜி: விருந்தில் என்ன சாப்பாடு?

ச: அப்பளம், பாயசம், வடை எல்லாம். உங்களுக்கு இந்திய சாப்பாடு இஷ்டமா?

ஜி: மிகவும் இஷ்டம். மிக்க நன்றி.

ச: கட்டாயம் நாளைக்கு வாருங்கள். போய்விட்டு வருகிறேன்.

ஜி: போய்விட்டு வாருங்கள், வணக்கம்.

Basic Vocabulary

விருந்து	feast (especially as a sign of hospitality), food for a guest
கட்டாயம்	certainly
அழகு	beauty
அழகான	beautiful
இருக்கிறது	(there) is, (it) is
வரை, வரைக்கும்	(after nominative of word governed) up to, until
தூரம்	far, long distance
ஆனால்	but
மணி	o'clock. Used in the dative after the number to indicate "at ___ o'clock." Thus இரண்டு மணிக்கு, at two o'clock. This word may also mean "hour."
சாப்பாடு	food
மிக்க	very much, much (adjective only)
நன்றி	thanks
பாட்டு	song

Vocabulary for Story

அடையாறு	Adaiyar, a suburb of Madras
எத்தனை	how many
எத்தனை மணிக்கு	at what o'clock, at what time?
மத்தியானம்	daytime (as opposed to morning, evening, night)
ஒரு மணிக்கு	at one o'clock
அப்பளம்	poppadum, a kind of fried accompaniment to meals
வடை	dahl soaked, ground up, and fried in balls the size of dumplings
இந்திய	Indian (adj.)
போய்விட்டு வரு-கிறேன்	goodbye (literally, "I'll go and come")
போய்விட்டு வாருங்கள்.	goodbye (literally, "go and come")

LESSON 8

Grammar

8.1. Formation and use of the locative case. The locative is formed by adding the suffix -இல் to the oblique form of the word to be inflected. It means "in," or, sometimes, "on." (Note that "on" is usually translated by the dative + மேல் -- see 8.3 below).

வீட்டில்	in the house
தெருவில்	on (or on) the street
பெட்டியில்	in the box
கையில்	in (the) hand

8.2. Formation and use of the ablative case. The ablative is made by adding the suffix -இலிருந்து to irrational nouns and -இடமிருந்து to rational nouns, both suffixes being affixed to the oblique stem. It means "from."

வீட்டிலிருந்து	from the house
தெருவிலிருந்து	from the street
கண்ணிலிருந்து	from the eye
வீடுகளிலிருந்து	from the houses
என்னிடமிருந்து	from me

Another way to look at the ablative form is the locative + - இருந்து . There are some adverbs, like அங்கே "there," இங்கே , "here" that have a locative sense. The suffix - இருந்து may be added to such words to mean "from." Thus, அங்கேயிருந்து , from there.

8.3. Postpositions. Such English prepositions as "above," "below," "on," "before," "behind," and "after" are translated by putting a postposition after the dative of the noun. Thus,

மேசைக்கு மேல் (or மேலே)	on (or above) the table
மேசைக்கு கீழ் (or கீழே)	below (beneath, under) the table

அவனுக்கு முன்னால் (or முன்)	in front of him
அதற்கு முன்	before that
அதற்கு அப்புறம் (பின்னால்)	after that
எனக்குப் பின்னால்.	behind me.

In more formal Tamil, these postpositions may be placed after the unmodified oblique of the noun if no motion is implied.

The English preposition "into" is translated by affixing - உள்ளே to the dative of the noun:

வீட்டுக்குள்ளே	into the house
தோட்டத்துக்குள்ளே	into the garden.

Similarly, "outside of" is translated by putting வெளியே after the dative:

வீட்டுக்கு வெளியே	outside the house.

If no motion is implied, உள்ளே and வெளியே may be placed after the simple oblique.

8.4. Irukkiratu / illai meaning "have," "have not." The word இருக்கிறது means "it is"; இல்லை means "is (are) not." The sense of "have" is expressed by using these words (or, occasionally, similar words) with the dative or the noun + - இடம், the Tamil construction meaning literally "To ___ ___ is / is not." Thus the thing possessed is in the nominative. If the thing possessed is not a lasting and valued possession, the possessor is in the oblique and - இடம் is added to it. If the thing possessed is a permanent, lasting, and valued possession, the possessor is in the dative.

எனக்கு புஸ்தகம் இருக்கிறது. / என்னிடம் புஸ்தகம் இருக்கிறது.
I have a book

உனக்குப் பணம் இருக்கிறதா?
Do you have money (i.e. are you rich)?

உன்னிடம் பணம் இருக்கிறதா?
Do you have money (with you)?

அவனுக்குத் தம்பி இல்லை.

He does not have a younger brother.

எனக்கு ஒரு வீடு இருக்கிறது.

I have a house.

Note that இருக்கிறது may sometimes be omitted (see Kaṇṇaṉ's last answer in 7).

Grammar Summary

8.1S. The locative.

Oblique + -இல்.

8.2S. The ablative.

Irrational: oblique + இலிருந்து

Rational: oblique + இடமிருந்து

8.3S. Postpositions.

These are placed after the dative (or, sometimes, if motion is not involved, after the simple oblique).

On, above:	மேல், மேலே
Below, beneath, under:	கீழ், கீழே
In front of, before:	முன், முன்னால், முன்னே.
After, behind:	பின், பின்னால், பின்னே.
Into:	உள்ளே
Outside, outside of:	வெளியே.

8.4S. Irukkiṟatu/illai meaning "have," "have not."

With a lasting, valued possession:

possessor in the dative + thing possessed in the nominative + இருக்கிறது (have)

possessor in the dative + thing possessed in the nominative + இல்லை. (don't hav

With a possession that is not lasting and valued:

possessor (in oblique + - இடம்) + thing possessed in the nominative
+ இருக்கிறது (have).

possessor (in oblique + -இடம்) + thing possessed in the nominative
+ இல்லை. (don't have).

EXERCISES

I. Give the ablative form of each word below.
விருந்து, தோட்டம், வீடு, சாப்பாடு, மணி, அவர்,
நீங்கள், நாங்கள், அவைகள், எல்லாம்

II. Give the locative form of each word below.
கடை, பாட்டு, மத்தியானம், கோவில், சாப்பாடு,
நீங்கள், அவன், அவைகள், நீ, அது

III. Fill in the blanks, using each word in parentheses in its correct case form.

1. அங்கே __________ பாருங்கள். (he)
2. __________ பெயர் கண்ணன். (he)
3. __________ என் வீட்டுக்கு வாருங்கள். (6 o'clock)
4. அடிக்கடி __________ போங்கள். (temple)
5. நீங்கள் __________ பேசுங்கள். (we)
6. __________ நன்றாக சாப்பிடுங்கள். (our house)
7. __________ சினிமாவுக்கு போங்கள். (with friend)
8. __________ காபி கொடுங்கள். (we)
9. __________ உங்கள் வீடு தூரமா? (from here)
10. __________ தமிழ் படியுங்கள். (வகுப்பு class)

IV. Translate into Tamil.

1. I have a beautiful house.

2. Do not study the lesson in your friend's garden.

3. Tell him to bring me the book from your brother.

4. Do not sing the song for mother.

5. Come to the neighboring garden from your house.

6. Bring all the books inside the school.

Nominative	genitive	accusative	dative	Instrumenta
நான்	என் என்னுடைய	என்னை	எனக்கு	என்னால்
நாங்கள்	எங்கள் எங்களுடைய	எங்களை	எங்களுக்கு	எங்களால்
நாம்	நம் நம்முடைய	நம்மை	நமக்கு	நம்மால்
நீ	உன் உன்னுடைய	உன்னை	உனக்கு	உன்னால்
நீங்கள்	உங்கள் உங்களுடைய	உங்களை	உங்களுக்கு	உங்களால்
அவன்	அவன் அவனுடைய	அவனை	அவனுக்கு	அவனால்
அவள்	அவள் அவளுடைய	அவளை	அவளுக்கு	அவளால்
அவர்	அவர், அவருடைய	அவரை	அவருக்கு	அவரால்
அவர்கள்	அவர்கள் அவர்களுடைய	அவர்களை	அவர்களுக்கு	அவர்களால்
இது,	இதன் இதனுடைய	இதை, இதனை	இதற்கு	இதனால்
இவைகள்	இவைகள் இவைகளுடைய	இவைகளை	இவைகளுக்கு	இவைகளால்
இவை	இவற்று- இவற்றுடைய	இவற்றை	இவற்றுக்கு	இவற்றால்
எல்லாம்	எல்லாவற்றுடைய	எல்லாவற்றை -யும்	எல்லாவற்றுக்கும்	எல்லாவற்றாலும்
வீடு	வீட்டு, வீட்டுடைய	வீட்டை	வீட்டுக்கு	வீட்டால்
மரம்	மரத்து, மரத்துடைய	மரத்தை	மரத்துக்கு	மரத்தால்
கார்	கார், காருடைய	காரை	காருக்கு	காரால்.

Nominative	Sociative	Locative	Ablative.
நான்	என்னோடு	என்னிடம்	என்னிடமிருந்து.
நாங்கள்	எங்களோடு	எங்களிடம்	எங்களிடமிருந்து
நாம்	நம்மோடு	நம்மிடம்	நம்மிடமிருந்து
நீ	உன்னோடு	உன்னிடம்	உன்னிடமிருந்து
நீங்கள்	உங்களோடு	உங்களிடம்	உங்களிடமிருந்து
அவன்	அவனோடு	அவனிடம்	அவனிடமிருந்து
அவள்	அவளோடு	அவளிடம்	அவளிடமிருந்து
அவர்	அவரோடு	அவரிடம்	அவரிடமிருந்து
அவர்கள்	அவர்களோடு	அவர்களிடம்	அவர்களிடமிருந்து
இது	இதோடு, இதனோடு	(இதனிடம்) இதில்	இதிலிருந்து
இவைகள்	இவைகளோடு	இவைகளில்	இவைகளிலிருந்து
இவை	இவற்றோடு	இவற்றில்	இவற்றிலிருந்து
எல்லாம்	எல்லாவற்றோடும்	எல்லாவற்றிலும்	எல்லாவற்றிலிருந்தும்
வீடு	வீட்டோடு	வீட்டில்	வீட்டிலிருந்து
மரம்	மரத்தோடு	மரத்தில்	மரத்திலிருந்து
கார்	காரோடு	காரில்	காரிலிருந்து.

பாடம் 9   ஹோட்டல்

ஹோட்டல்காரர்: என்ன ஸார், கண்ணன், வாருங்கள். இவர்கள் உங்கள் சிநேகிதர்களா?

க: ஆமாம், இவர் பெயர் ஜிம். அவர் பெயர் டாம். இவர்கள் இரண்டு பேரும் என் சிநேகிதர்கள்.

ஹோ: வாருங்கள். எல்லோரும் இங்கே உட்காருங்கள். கண்ணன், இவர்களால் தமிழ் பேச முடியுமா?

க: ஆமாம், ஜிம்மால் நன்றாக தமிழ் பேச முடியும். டாமால் கொஞ்சம் தமிழ் பேச முடியும்.

ஜி: எனக்கு கொஞ்சம் தான் தமிழ் தெரியும்.

ஹோ: மிகவும் நல்லது. நீங்கள் அடிக்கடி இங்கே வாருங்கள்.

சர்வர்: ஸார், உங்களுக்கு என்ன வேண்டும்?

ஜிம்: எனக்கு இரண்டு இட்லியும், சாம்பாரும் வேண்டும்.

சர்: உங்களுக்குத் தமிழ் தெரியுமா?

ஜிம்: கொஞ்சம் தெரியும். டாம், உங்களுக்கு என்ன வேண்டும்?

டாம்: எனக்கு பூரிக்கிழங்கு வேண்டும்.

சர்: உங்களுக்கும் தமிழ் தெரியுமா?

டாம்: ஆமாம், கொஞ்சம் தெரியும்.

க: சர்வர், எனக்கு ஒரு தோசை, சட்னியோடு கொண்டுவா. டாம், ஜிம், உங்களுக்கு காபி வேண்டுமா?

டாம்: இல்லை, எனக்கு பால் வேண்டும்.

ஜி: எனக்கும் காபி வேண்டாம். பால் வேண்டும்.

க: சரி, எல்லோருக்கும் பாலே கொண்டுவா.

Basic Vocabulary

-காரன்	one who is associated with, one who runs. (Respective: -காரர் feminine: -காரி)
வேண்டும்	want, desire, wish (9.2). Negative: வேண்டாம்
தெரியும்	know (9.3). Negative: தெரியாது
முடியும்	can, be able (9.4). Negative: முடியாது
அடிக்கடி	often
ஸார்	sir
பால்	milk
பேசு	(3) speak

Vocabulary for Story

ஹோட்டல்	a restaurant (from the English word "hotel.")
ஹோட்டல்காரர்	restaurant person
நல்லது	a good thing
இட்லி	idli, a steamed rice and dahl cake
சாம்பார்	sambar, a watery mix of dahl, spices, and vegetables eaten with rice
பூரி	puri (fried wheat bread) and spiced potato
தோசை	a pancake made of rice and dahl
சட்னி	chutney, usually ground coconut mixed with water and spices

Grammar

9.1. Impersonal Verbs. These verbs do not agree with their logical subjects. For the most part, they appear in the forms you will learn in the next three lessons. Other possible forms will be given in lesson 16, after you have mastered all of the finite verb forms. It is worth remembering now that all of the verbs given in these three lessons are either positive irrational future singular-plural, or negative irrational future singular-plural. Even though they are future, they are generally used in a present sense.

9.2. Vēṇṭum/Vēṇṭām. This verb may be used in two ways: with and without an infinitive. When used with an infinitive, வேண்டும் means "want," "should," while வேண்டாம் means "do not want," " should not." The subject is placed in the nominative *when this verb is used with an infinitive.*

நான் கடைக்குப் போக வேண்டும்.

I want (or I should) go to the store.

நீ வெளியே போக வேண்டாம்.

You shouldn't go outside.

When this verb is used without an infinitive, the English subject is put in the dative, while the English object is put in the nominative. The verb then means "want/do not want," or "need/do not need."

எனக்கு அது வேண்டும்.

I want that

எனக்கு அந்தப் புஸ்தகம் வேண்டாம்.

I don't want that book

எனக்கு அவ்வளவு சாதம் வேண்டாம்.

I do not want that much rice.

எனக்கு அந்தப் பென்சில் வேண்டும்.

I need that pencil.

9.3. Teriyum/teriyātu. This verb always takes a dative subject, whether used with an infinitive or without one. With an infinitive, தெரியும் means "know how to" and தெரியாது means "do not know how to." When used without an infinitive, தெரியும் means "know" and தெரியாது means "do not know." When used without an infinitive, the English object (the thing or person known) is put in the nominative if irrational and in the accusative if rational.

உங்களுக்கு அவனைத் தெரியுமா?

Do you know him?

உங்களுக்கு அந்தப் புஸ்தகம் தெரியாதா?

Don't you know that book?

உங்களுக்கு தமிழ் பேசத் தெரியுமா?

Do you know how to speak Tamil?

எனக்கு கண்ணனைத் தெரியாது.

I do not know Kaṇṇaṉ.

எனக்கு எழுதத் தெரியாது.

I do not know how to write.

9.4. Muṭiyum/muṭiyātu. This verb is used only with an infinitive. முடியும் means "can"; முடியாது means "cannot." The English subject may be put either in the nominative or (somewhat less commonly) the instrumental.

நான் (என்னால்) அந்தப் புஸ்தகங்களைத் தூக்க முடியும்.

I can carry those books.

நீங்கள் (or உங்களால்) அவனைப் பார்க்க முடியாதா?

Can't you see him?

நான் (or என்னால்) நாளைக்கு வர முடியாது.

I cannot come tomorrow.

நீ (or உன்னால்) அங்கே போக முடியுமா?

Can you go there?

The verb முடியும், முடியாது is used only when "can" may be replaced by "be able to," with the sense of ability stressed. If "can" may be rendered as well by "know how to," then தெரியும் should be used (as "I can read.") If the word "can" may be replaced by a simple future in English, then the simple future should be used in Tamil ("Yes, I can help you tomorrow"; "Can you come tomorrow?")

Grammar Summary

9.2S. Vēṇṭum/vēṇṭām.

+ infinitive: means "want, should; want, should not." English subject is in the nominative.

without infinitive: means "want, need; do not want, do not need." English subject is in the dative.

9.3S. Teriyum/teriyātu.

+ infinitive: means "Know how to; do not know how to." English subject is in the dative.

without infinitive: means "know; do not know." English subject is in the dative, English object in the nominative (if irrational), accusative (if rational).

9.4S. Muṭiyum/muṭiyātu.

Used only with infinitive: means "can; cannot." English subject is in the nominative or instrumental.

Exercises.

I. அவருக்கும், எனக்கும் சாப்பாடு வேண்டும்.

Substitute the following:

1. for her and him
2. for you also
3. for them and us
4. for them (neuter sg.)
5. for this and that

II. Fill in the blanks with correct subjects.

1. ________ வடை வேண்டுமா?
2. ________ தமிழ் பேசத் தெரியும்.
3. ________ இங்கிலிஷ் பாட்டு பாட முடியுமா?
4. ________ ஜெர்மன் பேசத் தெரியாது.
5. ________ அங்கே போக முடியாது.
6. ________ இப்போது சாப்பிட வேண்டும்.

III. Fill in the blanks.

1. எனக்கு பாட ________.
2. அவனுக்கு கோக் ________.
3. அவர்களால் தமிழ் பேச ________.
4. எனக்கு காபி ________.
5. அவளுக்கு பிரெஞ்சு ________.
6. என்னால் இந்தப் பழங்களை ________ முடியும்.
7. நீங்கள் பஸ்ஸுக்கு ________ வேண்டுமா?
8. கடைக்காரர் பழம் ________ வேண்டும்.
9. இப்போது எனக்கு ________ கார் வேண்டும்.
10. நீங்கள் சினிமா ________ வேண்டுமா?

SOME IMPORTANT WORDS FOR FOOD

சாதம்
சாம்பார்
ரசம்
மோர், தயிர்
கறி
அப்பளம்

பருப்பு
ஊறுகாய்
பால்
குழம்பு

கோழிக்கறி (கோழி)
ஆட்டுக்கறி (ஆடு)
முட்டை
மீன்கறி (மீன்)

IV. Translate into Tamil.

1. We need milk.

2. I know how to speak Tamil, but I do not know how to sing.

3. The milkman should bring milk at five o'clock.

4. I cannot run to my friend's store.

5. I know that student's father.

6. You should tell her to come tomorrow.

பாடம் 10 பாங்க்

ஆறுமுகம்: ஜிம், வாருங்கள். உட்காருங்கள். உங்களுக்கு காபி பிடிக்குமா?

ஜி: இல்லை, எனக்கு காபி பிடிக்காது. கொஞ்சம் டீ கொடுங்கள்.

ஆ: உங்களுக்கு இவ்வளவு டீ போதுமா?

ஜி: போதாது; இன்னும் கொஞ்சம் கொடுங்கள்.

ஆ: எங்கள் வீட்டில் கொஞ்சம் ஹல்வா இருக்கிறது. உங்களுக்கு ஹல்வா பிடிக்குமா?

ஜி: எனக்கு ஹல்வா பிடிக்கும். ஆனால் இப்போது ஹல்வா எனக்கு வேண்டாம். நான் பாங்குக்குப் போக வேண்டும்.

ஆ: உங்களிடம் பணம் இல்லையா?

ஜி: இல்லை, என்னிடம் மிகவும் பணம் இல்லை. ஆனால் ஒரு செக் இருக்கிறது. பாங்கில் எனக்கு ஒரு கணக்கு இல்லை. அதனால் ஒரு அக்கௌண்ட் ஆரம்பிக்க வேண்டும்.

ஆ: சரி, இந்தியன் பாங்க் மிகவும் நல்ல பாங்க். அங்கே நீங்கள் அக்கௌண்ட் ஆரம்பிக்க வேண்டும்.

ஜி: எனக்கு தமிழ் இன்னும் நன்றாகப் புரியாது. பாங்கில் தமிழில் பேச வேண்டுமா?

ஆ: இல்லை, பாங்கில் எல்லாருக்கும் இங்கிலீஷ் புரியும். பாங்க் பக்கத்தில் தான் இருக்கிறது. வாருங்கள்.

Basic Vocabulary

புரியும்	understand (10.1). Negative: புரியாது
போதும்	is enough (10.1). Negative: போதாது
பிடிக்கும்	like (verb) (10.1). Negative: பிடிக்காது.
கிடைக்கும்	get, obtain (10.1). Negative: கிடைக்காது.
எவ்வளவு	how much (interrogative)
இவ்வளவு	this much
அவ்வளவு	that much
இன்னும்	still, more
பணம்	money
ஆரம்பி^{6}	begin
நன்றாக	well (adverb)
ஓடு	(3) run

Vocabulary for Story

பாங்க்	bank
ஹல்வா	halva, a sweet
கணக்கு	account ; maths.

Grammar

10.1. Other impersonal verbs. All of the following verbs take dative subjects; none can take infinitives.

புரியும்	understand	புரியாது	do not understand
போதும்	is enough	போதாது	is not enough
பிடிக்கும்	like	பிடிக்காது	do not like
கிடைக்கும்	will get	கிடைக்காது	will not get.

Like தெரியும், தெரியாது, the verb பிடிக்கும், பிடிக்காது puts the English direct object into the nominative if it is irrational and into the accusative if it is rational.

உங்களுக்குத் தமிழ் புரியுமா?

Do you understand Tamil?

உங்களுக்கு அந்த புஸ்தகம் புரியாதா?

Don't you understand that book?

எனக்கு இவ்வளவு சாதம் போதும்.

This much rice is enough for me.

அவருக்கு அவ்வளவு சாப்பாடு போதாது.

That much food is not enough for him.

உங்களுக்கு அவனைப் பிடிக்குமா?

Do you like him?

உங்களுக்கு அந்தப் புஸ்தகம் பிடிக்குமா?

Do you like that book?

இல்லை, எனக்கு அது பிடிக்காது.

No, I do not like it.

எனக்குப் பத்து ரூபாய் கிடைக்கும்.

I will get ten rupees.

அவளுக்கு அந்த வீடு கிடைக்காது.

She will not get the house.

10.2. The adverbial suffix. This suffix may be either ஆக or ஆய், the two forms being interchangeable. *The adverbial suffix is not a case ending; it is added to the nominative form of nouns.* It is generally added to an abstract noun to make it an adverb:

சந்தோஷம்	joy, happiness	சந்தோஷமாக	happily
சத்தம்	noise	சத்தமாக	loudly
வேகம்	speed	வேகமாக	quickly

In many cases, the noun to which the adverbial suffix is added is not in general use. Thus வேகமாக, quickly; மெதுவாக slowly, gently.

10.3. The adverbial suffix with iru. The word "is" in English may be followed by either a predicate noun or a predicate adjective. "He is a boy" is an example of the former; "he is good," of the latter. Generally in Tamil, it is best to translate a sentence with a predicate noun by leaving out the verb for "is." Thus அவன் பையன், "He is a boy." If the verb for "is" is added (something that is not very good stylistically), then the predicate noun must be followed by the adverbial suffix: அவன் பையனாக இருக்கிறான், where இருக்கிறான் means "(he) is." When a predicate adjective occurs, it is necessary to make it into a noun and then to treat it as a predicate noun (see lesson 30 for rules to make a noun from an adjective, a very simple process). Thus the adjective நல்ல, good, gives the masculine sg. noun நல்லவன், a good man (or boy). "He is good" would be rendered அவன் நல்லவன் or அவன் நல்லவனாக இருக்கிறான். When a predicate adjective occurs in English and the subject of "is" is indefinite, the verb இரு must be used. Thus "it is dark" is translated இருட்டாக இருக்கிற where இருட்டு means "darkness."

10.4. The adverbial suffix meaning "as." When added to a non-abstract noun, the adverbial suffix can often be translated by "as." (Of course, this is not the case if the noun is used with இரு, as in 10.3.)

ஆசாரியாக வேலை செய்

Work as a carpenter.

Grammar Summary

10.1S. Other impersonal verbs. All the following take dative subjects, and none can take infinitives. பிடிக்கும், பிடிக்காது puts the English direct object into the nominative if it is irrational and into the accusative if it is rational.

புரியும், புரியாது	understand/do not understand
போதும், போதாது	is/is not enough
பிடிக்கும், பிடிக்காது	like/do not like
கிடைக்கும், கிடைக்காது.	will/will not get

10.2S. The adverbial suffix. ஆக or ஆய், added to the *nominative* form of a noun.

10.3S. The adverbial suffix with iru. The adverbial suffix must be added to a participial noun if the verb இரு is used to translate "is."

10.4S. The adverbial suffix meaning "as." In cases other than 10.3, for a non-abstract noun + the adverbial suffix, the adverbial suffix may often be translated "as."

EXERCISES

I. Change the following to the interrogative.

1. இவ்வளவு பால் போதும்.
2. உங்களுக்கு தமிழ் பேசப் பிடிக்கும்.
3. எனக்கு பாட இஷ்டம்.
4. அவருக்கு இப்படி படிக்கப் பிடிக்காது.
5. அவர்களுக்கு இந்தப் பாடம் புரியாது.

II. Fill in the blanks.

1. என்னிடம் பென்சில் ____________ (not)
2. அதற்கு பால் ____________ (want)

3. உங்களுக்கு இந்த கணக்கு ________? (understand)
4. எனக்கு இன்றைக்கு பத்து ரூபாய் ________. (is enough)
5. நீங்கள் பாடம் ________ வேண்டுமா? (ஆரம்பி)
6. அவர் உங்களுக்கு பணம் ________ வேண்டும். (கொடு)
7. அது எங்கள் ________ . (house)
8. அவன் ________ சிநேகிதனா? (your)
9. நீங்கள் ________ ஓடாதீர்கள். (to mother)
10. எனக்கு ________ ஆங்கிலம் பேசத் தெரியாது. (that much)

III. Expand these sentences:

1. எனக்கு கார் இஷ்டம்.
2. இது வீடு.
3. எனக்கு பாடத் தெரியும்.
4. ஓடுங்கள்.
6. பாடாதீர்கள்.

IV. Translate into Tamil.

1. This much food is enough for me.
2. Where can (one) get a good pen?
3. (One) can go far with money.
4. I like your friend, but he does not like me.
5. Doesn't your mother understand English?
6. You don't need to run to the store.

பாடம் 11 சினிமா

கண்ணன் : ஜிம், நாம் ஒரு சினிமாவுக்குப் போகலாமா?

ஜி : என்ன படம்? தமிழ்ப் படமா? ஆங்கிலப்படமா?

க : தமிழ் சினிமா தான். இதன் பெயர் ஊட்டிவரை உறவு.

ஜி : தமிழ் சினிமா எனக்குப் புரியுமா?

க : கொஞ்சம் புரியும். ஆனால் நீங்கள் நிறைய தமிழ்ப்பாட்டு கேட்கலாம். வாருங்கள், போகலாம்.

ஜி : சினிமாவில் சிகரெட் கிடைக்குமா?

க : இது ஏர்கண்டிஷன் தியேட்டர். இந்த தியேட்டருக்கு உள்ளே சிகரெட் குடிக்கக்கூடாது. ஆனால் வெளியே கடையில் சிகரெட் கிடைக்கும்.

ஜி : எனக்கு இப்போது ஒரு சிகரெட் வேண்டும். உங்களிடம் இருக்கிறதா?

க : இல்லை, பக்கத்துக்கடையில் சிகரெட் கிடைக்கும். வழியில் அங்கே வாங்கலாம்.

தம்பி : நானும் சினிமாவுக்கு வரட்டுமா? இந்த சினிமா எனக்கு மிகவும் இஷ்டம்.

ஜி : கண்ணன், என்னிடம் கொஞ்சம் தான் பணம் இருக்கிறது. நான் உங்களிடம் டிக்கட்டுக்குப் பணம் கடன் வாங்கலாமா?

க : சரி, நீங்கள் நாளைக்கு என்னிடம் பணம் கொடுங்கள். இப்போது என்னிடம் பணம் இருக்கிறது. தம்பி, நீயும் எங்களோடு சினிமாவுக்கு வா.

தம்பி : இதோ, நான் ரெடி.

Basic Vocabulary

-கூடாது	must not (11.2).
படம்	picture
நிறைய	a lot of
எழுது	(3) write
கேள்	(5c) hear; ask
குடி	(6) drink
வழி	way
இதோ!	here! here is...!
அதோ!	there! there is...!

Vocabulary for Story

போகலாம்	see 11.1.
ஊட்டி வரை உறவு	"A Relationship all the way to Ooti," the name of a movie.
வரட்டும்	see 11.3.
கடன்	debt. கடன் வாங்கு (3) borrow

Grammar

11.1. **The potential**. This verb form is unchanging, no matter what its subject is. It is formed by adding அலாம் to the *infinitive stem* (not the infinitive. The infinitive stem is the infinitive minus final -a). It translates English "may," indicating permitted action and possible action.

நீங்கள் படிக்கலாம்.

You may study.

அவன் நாளைக்கு வரலாம்.

He may come tomorrow.

11.2. **The prohibitive**. This form is made by putting the word -கூடாது after the infinitive (*not* the infinitive stem). It is unchanging, no matter what its subject is, and it means "must not."

நீங்கள் உள்ளே வரக்கூடாது.

You must not come in.

நீ அவளோடு பேசக்கூடாது.

You must not talk with her.

அவன் படிக்கக்கூடாது.

He must not read.

11.3. **The permissive**. This form, like the two preceding forms, is unchanging regardless of subject. It is formed by adding - அட்டும் to the *infinitive stem*. It is far less common than the potential, and it is used mostly in three situations. First, it means "Let ____ ____," usually with the connotation "what do I care?" Second, it may be used in the first person with the interrogative suffix -ஆ to mean "May I ____?" Finally, it is sometimes used in addressing an inferior to tell him to let someone do something ("Let him come in.")

அவன் செய்யட்டும்.

Let him do it (it doesn't matter anyway).

நான் சொல்லட்டுமா?

Should I say (it)?

அது இருக்கட்டும்.

Let it be (it doesn't matter).

Grammar Summary

11.1S. The potential. Meaning: "may."

Infinitive stem + அலாம்

11.2S. The prohibitive. Meaning: "must not."

Infinitive + கூடாது

11.3S. The permissive. Meaning "let."

Infinitive stem + அட்டும்.

Exercises

I. Change the negative to positive and vice veesa.

1. எங்களுக்கு சாப்பாடு வேண்டும்.
2. அவனுக்கு தமிழ் தெரியாது.
3. அவர்களால் இப்போது பாட முடியாது.
4. இந்த ஹோட்டலில் சாப்பாடு உங்களுக்கு பிடிக்குமா?
5. அவளுக்கு இவ்வளவு டீ போதாதா?
6. அவர்களுக்கு இந்தக் கடையில் பழம் வாங்கப் பிடிக்காது.
7. இங்கே அதற்கு என்ன கிடைக்கும்?
8. என் வீடு இந்த ஊரில் இல்லை.
9. எனக்கு இங்கிலீஷ் புரியாது.
10. நான் உங்களோடு பாட வேண்டுமா?

II. Expand the sentences with adverbs and adjectives.

1. அது கடை.
2. எனக்கு பழம் வேண்டும்.
3. நீங்கள் ஓடுங்கள்.
4. படிக்காதீர்கள்.
5. அது இட்லியா?

III. Give the Potential, Permissive, and Prohibitive forms.

வா^{I}, பார்^{6}, கேள்^{5}, உட்கார்^{2}, வாங்கு^{3},

போ^{I}, சொல்^{3}, குடி^{6}, ஆரம்பி^{6}

IV. Translate into Tamil.

1. you may study in school, but you must not sing songs.

2. Can you write with my pen?

3. Let mother ask father. I still do not know how to go to the milkman's store.

4. Here. You may write in this book.

5. Mustn't we buy food with that money?

6. Tell all of the students to bring fruits for me.

பாடம் 12　　புடவைக்கடை

நான் புடவைக் கடைக்குப் போகிறேன். அதோ, அங்கே பங்கஜம்மாள் வருகிறார்கள். அவர்களும் என்னோடு புடவைக் கடைக்கு வருகிறார்கள். அவர்களுக்கு புடவை வாங்க இஷ்டமோ, என்னவோ, எனக்குத் தெரியாது. ஆனால் புடவைக் கடைக்கு போக இஷ்டம். புடவைக் கடை செட்டியாரோடு பேச இஷ்டம். நிறைய புடவை பார்க்க இஷ்டம். ஆனால், அவர்களுக்கு புடவை வாங்க இஷ்டமா? எனக்குத் தெரியாது. இதோ, நானும்; அவர்களும் பஸ்ஸில் போகிறோம்.

புடவைக் கடைக்கு உள்ளே நாங்கள் போகிறோம். அவ்வளவு தான். பங்கஜம்மாள் என்னிடம் ஒன்றும் பேசவில்லை. கடைக்கார செட்டியாரோடு பேசுகிறார்கள், பேசுகிறார்கள், பேசுகிறார்கள்--- நிறுத்தவில்லை. நான் ஒரு அழகான மஞ்சள் புடவையைப் பார்க்கிறேன். செட்டியார் இதோ, என் பக்கத்தில் வருகிறார். "இது நல்ல புடவை, அம்மா, நூற்றி ஐம்பது ரூபாய் தான். வாங்குங்கள், என்கிறார். பங்கஜம்மாள், " இது என்ன, இவ்வளவு விலை சொல்லுகிறீர்கள் ? நூற்றி முப்பது இதற்குப் போதாதா ?" என்கிறார்கள். செட்டியார் அந்தப் புடவையை நூற்றி நாற்பது ரூபாய்க்கு எனக்கு கொடுக்கிறார். அது அழகான புடவை. எனக்கு மிகவும் சந்தோஷம். ஆனால் பங்கஜம்மாள் எங்கே? இன்னும் புடவை பார்க்கிறார்கள். அதற்குத் தானே அவர்கள் வந்தார்கள். ஒரு வேளை நாள் வரை நாங்கள் இங்கே இருக்க வேண்டும்.

Basic Vocabulary

அவ்வளவு தான்	that's all there is to it; that's all it takes
ஒன்றும்	(with negative) nothing
என்	(5a) say
சந்தோஷம்	pleasure, happiness
ஒருவேளை	perhaps
இரு	(7) be
மழை	(noun) rain
பெய்	(1a) rain. மழை பெய்கிறது. : it's raining.

Vocabulary for Story

புடவை	saree
பங்கஜம்மாள்	(name of a lady)
அவர்களுக்கு புடவை வாங்க இஷ்டமோ, என்னவோ எனக்குத் தெரியாது	I don't know whether she wants to buy a saree
செட்டியார்	a Chettiyar (Chettiyars are a merchant caste)
புடவைக்கடைச் செட்டியார்	the Saree Store Chettiyar
நிறுத்து	(3) stop
மஞ்சள்	turmeric; yellow
நூற்றிஐம்பது	(colloquial for நூற்றைம்பது) 150 (see 16.3)
நூற்றிமுப்பது	(colloquial for நூற்றுமுப்பது) 130 (see 16.3)
நூற்றிநாற்பது	(colloquial for நூற்றுநாற்பது) 140 (see 16.3)
நாளைக்கு	tomorrow

Grammar

12.1. Personal endings of the verb. To make a root into a simple verb in Tamil (such as "I do," "I will do," "He did"), you must add to it the past, present, or future affix, and then add to that a personal ending that agrees with the subject of the verb. (Note that the forms like those in lesson 11 that do not change, no matter what the subject, are not covered here). The personal endings are the same in all three tenses, except that the third personal irrational endings are different in the past of 3rd-class verbs and in the future of all verbs. Memorize these endings carefully. Each is preceded by the pronoun that is the subject of the verb that takes the ending (of course, third-person pronouns may be replaced by nouns in real use).

PERSON	SINGULAR	PLURAL
1	நான் — ஏன்	நாம், நாங்கள் — ஓம்
2	நீ — ஆய்	, நீங்கள் — ஈர்கள் நீர் — ஈர்
3: Masc. rat.	அவன் — ஆன்	அவர்கள் — ஆர்கள்
Fem. rat.	அவர் — ஆர் அவள் — ஆள்	
Irrat.	இது, அது — அது	அவை, அவைகள் — அன

12.2. The present stem. This is the form of the verb to which the personal endings are added to make the present tense (as "I do"; "you do"; etc.) Take a few minutes now to review 4.2 and 4.6. Classes 1 to 5 make the present stem by adding - கிற் - to the root. In class 5c, the final - ள் of the root changes to - ட் before the present stem, while in class 5d, the final - ல் changes to - ற் (these are the same changes as before the - க of the infinitive for these classes). Classes 6 and 7 add - க்கிற் - to the root. In more fomal Tamil, - கின்ற் - (for classes 1-5) and - க்கின்ற் - (for classes 6-7) may be added.

The only irregularity is that in the third person irrational plural, - கின்ற் *- and -* க்கின்ற்*-, not -* கிற் *- and -* க்கிற் *-, must be used.*

CLASS AND ROOT		PRESENT STEM	PRESENT 1st PERSON SINGULAR
1a. செய்	do	செய்கிற் -	செய்கிறேன்.
1b. கொள்	take	கொள்கிற் -	கொள்கிறேன்
1c. வெல்	conquer	வெல்கிற் -	வெல்கிறேன்
2. உட்கார்	sit down	உட்கார்கிற் -	உட்கார்கிறேன்
3. வாங்கு	buy	வாங்குகிற் -	வாங்குகிறேன்
4. சாப்பிடு	eat	சாப்பிடுகிற் -	சாப்பிடுகிறேன்
5a. உண்	eat	உண்கிற் -	உண்கிறேன்
5b. தின்	eat	தின்கிற்.	தின்கிறேன்.

In class 5c., before the addition of - கிற் (or - கின்ற்), the final - ள் of the root changes to - ட் ; in class 5d., the final - ல் of the root changes to - ற் . (Note that these same changes happen in these classes before the - க of the infinitive).

5c. கேள்	ask, hear	கேட்கிற் -	கேட்கிறேன்
5d. வில்	sell	விற்கிற் -	விற்கிறேன்
6. பார்	see	பார்க்கிற் -	பார்க்கிறேன்
7. நட	walk	நடக்கிற் -	நடக்கிறேன்.

A present paradigm of செய் , do, and நட , walk, is as follows:

I do	நான் செய்கிறேன்.	we do	செய்கிறோம்
you (sg.) do	செய்கிறாய்	you (pl. or resp.) do	செய்கிறீர்கள்
he does	செய்கிறான்	they (masc. and/or fem.) do	செய்கிறார்கள்
she does	செய்கிறாள்		
it does	செய்கிறது	those things do	செய்கின்றன.

I walk	நடக்கிறேன்	we walk	நடக்கிறோம்
you (sg.) walk	நடக்கிறாய்	you (pl. or resp.) walk	நடக்கிறீர்கள்
he walks	நடக்கிறான்	they (masc. and/or fem.) walk	நடக்கிறார்கள்
she walks	நடக்கிறாள்		
it walks	நடக்கிறது	those things walk	நடக்கின்றன.

12.3. The ordinary negative. This form, which is identical for the present and the past, is used whenever the action expressed is *not* habitual -- "I'm not going to the store" as opposed to "I don't go to the store every day." It is formed by adding -இல்லை to the *infinitive* of the verb; a euphonic -வ்- is inserted before -இல்லை in this conctruction. *This form is unchanging, nc matter what its subject is; it does not take the personal endings given above in 12.1.*

CLASS AND ROOT		ORDINARY NEGATIVE	
1a. செய்	do	செய்யவில்லை	I (you, etc.) do not do
1b. கொள்	take	கொள்ளவில்லை	I (you, etc.) do not take
1c. வெல்	conquer	வெல்லவில்லை	I (you, etc.) do not conquer
2. உட்கார்	sit down	உட்காரவில்லை	I (you, etc.) do not sit down
3. வாங்கு	buy	வாங்கவில்லை	
4. சாப்பிடு	eat	சாப்பிடவில்லை	
5a. உண்	eat	உண்ணவில்லை	
5b. தின்	eat	தின்னவில்லை	
5c. கேள்	hear, ask	கேட்கவில்லை	
5d. வில்	sell	விற்கவில்லை.	
6. பார்	see	பார்க்கவில்லை.	
7. நட	walk	நடக்கவில்லை.	

Examples: நான் செய்யவில்லை I do not do, I did not do; அவன் செய்யவில்லை. he does not do, he did not do; அவர்கள் பார்க்கவில்லை they do not see, did not see; நீங்கள் கேட்கவில்லையா? didn't you hear? don't you hear?

12.4. Irregular verbs. Tamil has a very few irregular verbs. Unfortunately, as in most languages, those verbs that are irregular are quite important. Only seven such verbs are commonly encountered, and of those only one (வா) is irregular in the present. Nevertheless, all are given below so that you may familiarize yourself with them:

ROOT AND CLASS		INFINITIVE	PRESENT 1st PERSON SINGULAR
வா	2; come	வர	வருகிறேன்
போ	3; go	போக	போகிறேன்
சொல்	3; say	சொல்ல	சொல்கிறேன்
நில்	5d; stand	நிற்க	நிற்கிறேன்
காண்	5a; see	காண	காண்கிறேன்
ஆகு, ஆ	3; become	ஆக	ஆகிறேன்
சா	2 (?); die	சாக	சாகிறேன்.

GRAMMAR SUMMARY

12.1S. Personal endings of the verb.

PERSON	SINGULAR	PLURAL
1	ஏன்	ஓம்
2	ஆய்	ஈர்கள்
3: Masc. rat.	ஆன்	ஆர்கள்
Fem. rat.	ஆள்	ஆர்கள்
Irrat.	அது	அன.

12.2S. The present stem.

Classes 1-5: root + கிற் (or - கின்ற்). For 5c. and 5d, the final consonant of the root changes as before the - க of the infinitive.

Classes 6-7: root + - க்கிற் (or - க்கின்ற்).

The affix - கின்ற் or - க்கின்ற் must be used in the 3rd irrational plural.

12.3S. The ordinary negative.

Infinitive + - வ் - + - இல்லை .

12.4S. Irregular verb.

The present stem of வா , come, is வருகிற் - .

Exercises.

I. Make each verb agree with the subjects (in parentheses).

1. சாப்பிடுகிறேன் (நான், நாங்கள், நீங்கள், அவர்கள், அது)
2. போகின்றன (அது, நான், நீங்கள், அவர்கள், இவர்)
3. பார்க்கிறது (அவைகள், நீங்கள், நான், நாங்கள், அவன்)
4. குடிக்கிறார்கள் (அவர், அது, அவைகள், நான், நீங்கள்)
5. வருகிறோம் (அது, நீ, அவள், இவர்கள், நான்)

II. Give the present negative forms.

வா,^{I} பேசு,^{3} பெய்,^{1} கேள்,^{5} அனுப்பு.^{3}
இரு,^{I} போ,^{I} உட்கார்,^{2} பார்,^{6} சொல்^{3}

III. Fill in the blanks.

1. எனக்கு வீடு ____________. (இரு^{I})
2. நான் தமிழ் ____________. (பேசு^{3})
3. அது இங்கே ____________. (சாப்பிடு^{4})
4. நீங்கள் நன்றாக ____________. (படி^{6})
5. கடைக்காரர் எண்ண ____________. (வில்^{5})

IV. Translate into Tamil

1. It (lit. rain) is raining, but they are still running outside.

2. Let her give the money to her friend. I don't need anything.

3. We are going to school now. You cannot come with us. (Should you use "cannot" or the prohibitive for "cannot"?)

4. Father tells you to study now.

5. The garden is on this way. We are going to see the flowers.

6. They see us, but we do not see them.

பாடம் 13 காலைநேரம்

இது தான் எங்கள் தெரு. தினமும் காலையில் ஐந்து மணிக்கு கோவில் மணி அடிக்கும். சிலர் ஐந்து மணிக்கே எழுந்திருப்பார்கள். சிலர், என்னைப் போல, சோம்பேறிகள், ஆறு மணிக்கு எழுந்திருப்பார்கள். அதோ, பால்காரர் வருகிறார். தினமும் காலையில் பால்காரர், காய்கறிக்காரி, எல்லோரும் வருவார்கள். அம்மா, பால், காய்கறி வாங்குவாள். அப்புறம் காபி போடுவாள். காலையில் ஆறரை மணிக்கு எல்லோருக்கும் காபி கிடைக்கும். அக்காவும், நானும் படிக்கப் போவோம். அம்மா சமைக்க ஆரம்பிப்பாள். இதோ, நியூஸ் பேப்பர்காரர் வருகிறார். எப்படித் தான் அவருக்கு முடியுமோ, சைக்கிளிலிருந்து ஒரு நியூஸ்பேப்பரை வீட்டுக்குள்ளே வேகமாக எறிவார். அப்புறம் அவர் சைக்கிள் பறக்கும். அவர் ஒருவருக்குத் தான் அந்த வித்தை தெரியும். அப்பா நியூஸ் பேப்பரோடு ஒரு நாற்காலியில் உட்காருவார். இதோ, மணி 8. நாங்கள் எல்லோரும் குளிப்போம். ஒன்பது மணிக்கு சாப்பாடு ரெடியாக இருக்கும். சாப்பாட்டுக்கு அப்புறம் நான் ஸ்கூலுக்குப் போவேன். அக்கா காலேஜுக்குப் போவாள். அப்பா ஆபீஸுக்குப் போவார்.

உங்களுக்கு போர் அடிக்கிறதா? தினமும், காலையில் நாங்கள் இதையே தான், திரும்ப, திரும்ப செய்கிறோம். நீங்கள் உங்களை நினைத்துப் பாருங்கள். தினமும் காலையில் வேறு வேறு செய்கிறீர்கள்? எழுந்திருக்கிறீர்கள், சாப்பிடுகிறீர்கள், உங்கள் வேலை எதுவோ, அதற்குப் போகிறீர்கள், இல்லையா?

Basic Vocabulary

தெரு	street
காலை	morning
போடு	(4) put, put on
அக்கா	elder sister
சமை^{6}	(6) cook
இப்படி	like this, in this way
அப்படி	like that, in that way
எப்படி	how, in what way (interrogative)
வேகம்	speed, swiftness
பற^{7}	(7) fly
ஒருவன்	one person (male, nonrespective)
ஒருவர்	one person (male, respective; may also be female)
ஒருத்தி	one person (female, nonrespective)
குளி^{6}	(6) bathe
செய்^{1}	(1) do, make
நினை^{6}	(6) think
மலை	mountain, hill

Vocabulary for Story

நேரம்	time, a period of less than 24 hours
தினம், தினமும்	every day
மணி	bell
அடி	(6) hit, ring; strike
சிலர்	a few people
எழுந்திரு	(7) get up
காய்கறி	vegetable
எறி	(2) throw

வித்தை	magic, magic trick
நாற்காலி	chair
போர் அடி	(+ dative) (6) to be bored
திரும்ப, திரும்ப	over and over
உங்கள் வேலை எதுவோ	whatever your work is

GRAMMAR

13.1. **The future positive.** As with the present tense, the future is formed by adding the personal endings (12.1) to the future stem, whose formation is described below. *However, the 3rd person irrational singular and plural is formed in a completely different way, described after the future stem.*

For classes 1-4, the future stem is formed by adding - வ் - to the root:

CLASS AND ROOT		FUTURE STEM	FUTURE 1st PERSON SINGULAR
1a. செய்	do	செய்வ் -	செய்வேன்
1b. கொள்	take	கொள்வ் -	கொள்வேன்
1c. வெல்	conquer	வெல்வ் -	வெல்வேன்
2. உட்கார்	sit down	உட்கார்வ் -	உட்கார்வேன்
3. வாங்கு	buy	வாங்குவ் -	வாங்குவேன்
4. சாப்பிடு	eat	சாப்பிடுவ் -	சாப்பிடுவேன்.

The future stem of class 5 verbs is made by adding - ப் - to the root. For classes 5a and 5b, the future stem may also be formed by adding - வ் - to the root which has been augmented with - உ -. In class 5c, - ள் changes to - ட் , and in class 5d - ல் changes to - ற் before the - ப் - of the future stem (the same change that occurs before the - க் of the infinitive and the - கிற் of the present stem).

5a. உண்	eat	உண்ணுவ் உண்ப்	உண்ணுவேன் உண்பேன்
5b. தின்	eat	தின்னுவ் தின்ப்	தின்னுவேன் தின்பேன்
5c. கேள்	hear, ask	கேட்ப்	கேட்பேன்
5d. வில்	sell	விற்ப்	விற்பேன்.

The future stem of class-6 and class-7 verbs is made by adding - - to the root.

6.	பார் see	பார்ப்ப்	பார்ப்பேன்.
7.	நட walk	நடப்ப்	நடப்பேன்.

For a 3rd-person irrational subject, whether singular or plural, the future tense is formed by adding - to the *infinitive stem* for all classes. The form is then complete; it does not take any personal ending.

1a.	செய்யும்	3.	வாங்கும்	5c.	கேட்கும்
1b.	கொள்ளும்	4.	சாப்பிடும்	5d.	விற்கும்
1c.	வெல்லும்	5a.	உண்ணும்	6.	பார்க்கும்
2.	உட்காரும்	5b.	தின்னும்	7.	நடக்கும்.

Thus the future paradigm of , buy, and , see, is as follows:

I will buy	வாங்குவேன்	we will buy	வாங்குவோம்.
you (sg.) will buy	வாங்குவாய்	you (pl. or resp.) will buy	வாங்குவீர்கள்.
he will buy	வாங்குவான்	they (masc. and/or fem.) will buy	வாங்குவார்கள்.
she will buy	வாங்குவாள்		
it will buy	வாங்கி	those things will buy	வாங்கும்.

I will see	பார்ப்பேன்	we will see	பார்ப்போம்.
you (sg.) will see	பார்ப்பாய்	you (pl. or resp.) will see	பார்ப்பீர்கள்.
he will see	பார்ப்பான்	they (masc. and/or fem.) will see	பார்ப்பார்கள்.
she will see	பார்ப்பாள்		
it will see	பார்க்கும்.	those things will see	பார்க்கும்.

13.2. The future negative. The future negative is formed by putting the word மாட்ட் - after the infinitive of the verb. The personal endings (12.1) are then added to மாட்ட் - . *However, in the 3rd-person irrational singular,* the personal ending added to மாட்ட் - is அது , while in the 3rd-person irrat. plural, it is - அ . The future negative 3rd-person irrational singular and plural may also be formed without the word மாட்ட- by simply adding the ending - ஆது in the singular and the ending - ஆ, or, less commonly, - ஆது to the *infinitive stem*. Thus the future negative paradigm of பார்^{6}, see, is as follows:

I will not see	நான்	பார்க்கமாட்டேன்.
you (sg.) will not see	நீ	பார்க்கமாட்டாய்.
he will not see	அவன்	பார்க்கமாட்டான்.
she will not see	அவள்	பார்க்கமாட்டாள்.
it will not see	அது	பார்க்கமாட்டாது or பார்க்காது.
we will not see	நாங்கள்	பார்க்கமாட்டோம்.
you (pl. or resp.) will not see	நீங்கள்	பார்க்கமாட்டீர்கள்.
they (masc. and/or fem.) will not see	அவர்கள்	பார்க்கமாட்டார்கள்.
those things will not see	அவைகள் (அவை)	பார்க்க மாட்டாது. பார்க்க மாட்டா. பார்க்காது. பார்க்கா.

13.3. The future of irregular verbs. Of the seven irregular verbs you must learn, only வா^{I}, come, is irregular in the future. (Note that the negative future forms do not have to be supplied, as they are all made from the infinitive or infinitive stem, which you already know for these verbs. The same is true for the third person irrational positive future forms).

ROOT AND CLASS	FUTURE 1st PERSON SINGULAR
2; come	வருவேன்
3; go	போவேன்
3; say	சொல்வேன்
5d; stand	நிற்பேன்.

காண்	5a; see	காண்பேன்
ஆ, ஆகு	3; become	ஆவேன்
சா	2 (?); die	சாவேன்.

GRAMMAR SUMMARY

13.1S. The future positive.

Classes 1-4: root + -வ்- + personal endings

Classes 5a and 5b: root + - ப் - + personal endings, or root + -உ- + -வ்- + personal endings.

Classes 5c and 5d: root changed as before present affix + -ப்- + personal endings.

Classes 6 and 7: root + -ப்ப்- + personal endings.

EXCEPTION: for all classes, the third person irrational, whether singular or plural, is the infinitive stem + உம் .

13.2S. The future negative.

Infinitive + மாட்ட் - + personal endings.

3rd person irrational singular: infinitive + மாட்ட் + - ஆது OR infinitive stem + ஆது

3rd person irrational plural: infinitive + மாட்ட்+ - ஆ OR infinitive stem + ஆ OR infinitive stem + ஆது.

13.3S. The future of irregular verbs.

வா , come, makes the future வருவேன் etc.

EXERCISES.

I. give the future positive and negative, using any subject.

செய்,^{1} போடு,^{4} வாங்கு,^{3} போ,^{I} படு^{7},
கேள்,^{5} வில்,^{5} பார்,^{6} வா,^{2} இரு^{7}

II. Change to the future form.

1. நான் காலையில் குளிக்கிறேன்.
2. அவர் சாயங்காலம் படுக்கிறார்.
3. நாங்கள் மத்தியானம் சமைக்கிறோம்.
4. நான் கடவுளை தினமும் நினைக்கிறேன்.
5. அவர்கள் அந்தப் பாடத்தை ஆரம்பிக்கிறார்களா?

III. Change to the present form.

1. அவர் சாயங்காலம் சாப்பிடுவார்.
2. நாங்கள் மத்தியானம் கடைக்குப் போகமாட்டோம்.
3. நான் நாளைக்கு பள்ளிக்கு போவேன்.
4. அது காலையில் குளிக்காது.
5. அப்புறம் நீங்கள் என்ன செய்வீர்கள்?

IV. Fill in the blanks.

1. நான் புஸ்தகம் ________. (படி^{6} present)
2. அவர் காலையில் ________ (பேசு^{3} pres. neg.)
3. எனக்கு காபி ________.
4. அவள் வேகமாக ________. (வா^{I} fut.)
5. இப்போது மணி ________.

6. நீங்கள் எங்கே ________ ? (குளி 6 fut.)
7. அவர்கள் காலையில் ________ ? (சாப்பிடு 4 fut.)
8. நாங்கள் நாளைக்கு ________ . (பாடு 3 fut.)
9. அப்பா காபி ________ . (போடு 4 pres.)
10. அது அங்கே ________ . (வா 7 fut. neg.)

SOME IMPORTANT TIMES OF DAY

காலை, காலையில்
மத்தியானம்
சாயந்தரம், சாயங்காலம்
இராத்திரி (இரவு)

நாளைக்கு
நேற்று
இன்றைக்கு
முந்தாநாள் (spoken)
நாளணிக்கு (spoken)

V. Translate into Tamil.

1. I will go to younger brother's store, but you will not come with me.
2. Older sister will cook you food tomorrow.
3. They will sing songs in our house, but they will not eat here.
4. We will not bathe tomorrow in your garden.
5. We will see the god in that temple.
6. They cook food today, but they will not cook anything (ஒன்றும்) tomorrow.

பாடம் 14 விமானநிலையம்

இது தான் பாஸ்டன் விமான நிலையம். நான் சிக்காகோவுக்குப் போக வேண்டும். என் நண்பரும், நானும் விமான நிலையத்திற்கு காரில் வந்தோம். அவரால் காரை பார்க் செய்ய முடியவில்லை. நான் மட்டும் காரிலிருந்து இறங்கினேன். அவர் வீட்டுக்குத் திரும்பினார்.

நான் டிக்கட் கௌண்டருக்குப் போனேன். அங்கே ஒருவரிடம், "சிக்காகோவிற்கு விமானம் எங்கே வரும்?" என்று கேட்டேன். அவர், ' எட்டாவது கேட் " என்று சொன்னார். நான் எட்டாவது கேட்டைத் தேடினேன். வழியில் ஒரு போர்டு இருந்தது. அதில் கேட் 5, 6, 7, 8 என்று எழுதியிருந்தது. நான் அங்கே நுழைந்தேன். உள்ளே ஒரு பக்கத்தில் சில நாற்காலிகள் இருந்தன. ஒன்றில் உட்கார்ந்தேன். விமானம் ஒரு மணி நேரம் வரை வரவில்லை.

அப்புறம் ஒரு டிக்கட் செக்கிங் என் பக்கத்தில் வந்தார். "உங்களுக்கு ஜன்னல் பக்கத்தில் சீட் வேண்டுமா?" என்று கேட்டார். எனக்கு விமானத்தில் ஏறவே பயம். அதில் வேறு ஜன்னல் சீட். "வேண்டாம் " என்று தலையை அசைத்தேன். அவர் என் டிக்கட்டில் ஏதோ கிறுக்கினார். பிறகு, "ஹாவ் எ நைஸ் டிரிப்' என்று சொன்னார். அப்புறம் அடுத்த மனிதரிடம் போனார். நான் விமானத்திற்காக அங்கே காத்திருந்தேன்.

Basic Vocabulary

நண்பர்	friend
இறங்கு	(3) get out, descend
திரும்பு	(3) turn, return
தேடு	(3) search for, search out
சில	a few (adj.)
நேரம்	time (usually used to indicate duration)
ஏறு	(3) climb, climb on
பயம்	fear
பய	(7) be afraid, fear (used only with past stem)
தலை	head
அப்புறம்	afterwards
அடுத்த	next (adj.)
மனிதன்	man
நேற்று	yesterday

Vocabulary for Story

விமானம்	airplane
நிலையம்	station
விமான நிலையம்	airport
-இற்கு	(formal dative)
மட்டும்	only
-ஆவது	(suffix to make ordinal numbers from cardinals -- 16.4)
எட்டாவது	eighth
எழுதியிரு 7	be written
நுழை 2, 6	(2) enter into, penetrate
நாற்காலி	chair

ஜன்னல்	window
வேறு	other; (here) what's more, in addition
அசை	(6) shake
ஏதோ	something
கிறுக்கு	(3) scratch
- ஆக	(after dative): for, for the sake of
காத்திரு	(7) wait

GRAMMAR

14.1. The past tense positive. Because the past tense positive is the most complex of the three tenses to form, two lessons are devoted to it. As with the other positive tenses, the past tense is formed by adding the personal endings (12.1) to the past stem.

Class 1. For class-1 verbs, the past stem is formed by adding - த் - to the root. In class 1b, this - த் - combines with the final - ள் of the root to become - ண்ட் -. In class 1c, this - த் - combines with the final - ல் of the root to become - ன்ற் -.

CLASS AND ROOT			PAST STEM	PAST 1st PERSON SINGULAR
1a.	செய்	do	செய்த் -	செய்தேன்.
1b.	கொள்	take	கொண்ட் -	கொண்டேன்.
1c.	வெல்	conquer	வென்ற் –	வென்றேன்.

Class 2. Class-2 verbs make their past stems by adding - ந்த் - to the root.

2.	உட்கார்	sit down	உட்கார்ந்த்-	உட்கார்ந்தேன்.

Class 3. In this class, verbs add - இன்- to the root.

3.	வாங்கு	buy	வாங்கின்	வாங்கினேன்.

This class, alone among the classes in the past tense, has irregular irrational forms in the third person. The 3rd person irrational singular may be made in three ways: regularly (வாங்கினது), by adding - இயது to the root (வாங்கியது), or by adding - இற்று to the root (வாங்கிற்று). All of these forms are in common use. The irrational plural of this class in the past is made by adding - அ to the past stem: வாங்கின .

Class 4. Verbs of this class form the past stem by doubling the final consonant of the root.

4.	சாப்பிடு	eat	சாப்பிட்ட்	சாப்பிட்டேன்.
4.	பெறு	get	பெற்ற்	பெற்றேன்.

4.	புகு	enter	புக்க்	புக்கேன்.

(This last form is not common in modern Tamil).

Class 5. Verbs of this class form the past stem by adding - த் - to the root. In 5a, this - த் - combines with the final - ண் of the root to become - ண்ட் -. In 5b, it combines with the final - ன் of the root to become - ன்ற் -. In 5c, it combines with the final - ள் of the root to become - ட்ட் -. In 5d, it combines with the final - ல் of the root to become - ற்ற் -.

5a.	உண்	eat	உண்ட்	உண்டேன்
5b.	தின்	eat	தின்ற்	தின்றேன்
5c.	கேள்	ask, hear	கேட்ட்	கேட்டேன்
5d.	வில்	sell	விற்ற்	விற்றேன்.

Class 6. In this class, verbs form the past stem by adding - த்த் - to the root.

6.	பார்	see	பார்த்த் -	பார்த்தேன்.

Class 7. Verbs of this class form their past stem by adding - ந்த் - to the root.

7.	நட	நடந்த்	நடந்தேன்.

The past paradigms of வாங்கு, buy, and பார், see, are as follows.

I bought	நான் வாங்கினேன்	we bought	நாங்கள் வாங்கினோம்.
you (sg.) bought	வாங்கினாய்	you (pl. or resp.) bought	வாங்கினீர்கள்
he bought	வாங்கினான்	they bought	வாங்கினார்கள்
she bought	வாங்கினாள்		
it bought	வாங்கினது வாங்கியது வாங்கிற்று	those things bought	வாங்கின.
I saw	பார்த்தேன்	we saw	பார்த்தோம்.
you (sg.) saw	பார்த்தாய்	you (pl. or resp.) saw	பார்த்தீர்கள்.
he saw	பார்த்தான்	they saw	பார்த்தார்கள்.

she saw அவள் பார்த்தாள்

it saw அது பார்த்தது those things saw அவைகள் பார்த்தன.

14.2. The ordinary negative. This form, made from the infinitive + -வ்- + -இல்லை, was given in 12.3 (which you should review). It is used for both the present and past negative when the action expressed is not habitual.

14.3. The past tense positive of the irregular verbs. All seven of these verbs are irregular in the past tense.

ROOT AND CLASS		PAST 1st PERSON SINGULAR
வா	2; come	வந்தேன்.
போ	3; go	போனேன்
சொல்	3; say	சொன்னேன்
நில்	5d; stand	நின்றேன்
காண்	5a; see	கண்டேன்
ஆகு, ஆ	3; become	ஆனேன்
சா.	2 (?); die	செத்தேன்.

GRAMMAR SUMMARY

14.1S. The past tense positive.

1a: root + -த்- + personal endings.

1b: root (with final -ள்- changed to -ண்-) + -ட்- + personal endings.

1c: root (with final -ல்- changed to -ன்-) + -ற்- + personal endings.

2: root + -ந்த்- + personal endings.

3: root + -இன்- + personal endings.

Exception for 3rd class: 3rd irrat. sg. may be formed regularly, from the root + -இயது or from the root + -இற்று. 3rd irrat. pl. is formed from past stem (i.e. root + -இன்-) + -அ.

4: root, with final consonant doubled, + personal endings.

5a: root + - ட் - + personal endings.

5b: root + - ற் - + personal endings.

5c: root (with final -ள்- changed to - ட் -) + - ட் - + personal endings.

5d: root (with final -ல்- changed to - ற் -) + - ற் - + personal endings.

6: root + - த்த் - + personal endings.

7: root + - ந்த் - + personal endings.

14.3S. The past tense positive of the irregular verbs. For review, all of the tenses of the irregular verbs are given here in the 1st person singular. Irregular forms are starred.

ROOT + CLASS		INFINITIVE	PRESENT	FUTURE	PAST
வா	2; come	வர		வருவேன்	வந்தேன்
போ	3; go	போக		போவேன்	போனேன்
சொல்	3; say	சொல்ல		சொல்வேன்	சொன்னேன்
நில்	5d; stand	நிற்க		நிற்பேன்	நின்றேன்
காண்	5a; see	காண		காண்பேன்	கண்டேன்
ஆ, ஆகு	3; become	ஆக		ஆவேன்	ஆனேன்
சா.	2?; die	சாக		சாவேன்	செத்தேன்.

EXERCISES.

I. give the past positive and negative.

வா,^{I} இரு,^{I} அனுப்பு,^{3} உட்கார்,^{2} நினை,^{6}

போ,^{I} சொல்,^{3} தேடு,^{3} திற,^{7} இறங்கு^{3}

II. Match the following.

1. நாங்கள்
2. அவன்
3. நீங்கள்
4. அவர்கள்
5. நீ

பாடுவாய்

உட்காருவார்கள்

தேடுவோம்

கூப்பிடுவீர்கள்

திறப்பான்

III. Fill in the blanks.

1. நான் காலையில் ______. (குளி^{6} pres.)
2. அவள் அழகான ______. (noun)
3. நீங்கள் நாளைக்கு ______? (பாடு^{3} fut.)
4. அவர்கள் இன்றைக்கு காலையில் ______ (சாப்பிடு^{4} fut. neg.)
5. அது நேற்று ______. (வா^{I} past)
6. அவர் ______. (திரும்பு^{3} past neg.)
7. அவன் விமானத்தில் ______. (ஏறு^{3} past.)
8. நீங்கள் எத்தனை மணிக்கு ______? (குளி^{6} past)
9. அது இங்கே ______? (வா^{I} fut.)
10. நாங்கள் உங்கள்வீட்டில் ______. (சமை^{6}- past)

IV. Translate into Tamil.

1. Why did that girl sing for all her friends?

2. The car went slowly to the students' house.

3. She bought me all the fruits in the store.

4. She got down from the bus. Then she bought me the book.

5. His mother told him to bring water to the house.

6. It rained yesterday. We could not go outside.

பாடம் 15 விமானநிலையம்

விமானம் வந்தது. எல்லோரும் விமானத்தில் ஏறினார்கள். நானும் மெதுவாக ஏறினேன். விமானம் கிளம்ப ஆரம்பித்தது. ஒரு ஹோஸ்டஸ் பிரயாணிகளுக்கு முன்னால் வந்தாள். "வெல் கம். இப்போது மணி பன்னிரண்டு. நாம் ஐந்து மணிக்கு ஸான்பிரான்ஸிஸ்கோ விமான நிலையத்தை அடைவோம். உங்களுக்கு நாங்கள் இரண்டு சாப்பாடு கொடுப்போம். ஹாவ் எ பிளஸண்ட் டிரிப்" என்று சொன்னாள். நான் திடுக்கிட்டேன். இதென்ன! நான் சிக்காகோவிற்குப் போக வேண்டும், இல்லையா? எனக்கு அழுகை வந்தது. எழுந்தேன். ஹோஸ்டஸிடம் ஓடினேன். "இது என்னுடைய விமானம் இல்லை. நான் சிக்காகோவிற்குப் போக வேண்டும்" என்று சொன்னேன். அவள் என்னை ஒரு மாதிரி பார்த்தாள். உடனே பைலட்டிடம் ஓடினாள். விமானம் என்ன செய்தது, தெரியுமா? மெதுவாக விமான நிலையத்திற்குத் திரும்பிவந்தது. விமான நிலையத்தார் ஏணியோடு ஓடிவந்தார்கள். பைலட் அவர்களிடம், "இவள் சிக்காகோவிற்குப் போகிறாள்" என்று கத்தினார். நான் இறங்கினேன். விமானம் மறுபடியும் கிளம்பியது.

எனக்கு அன்று விமானத்தில் மறுபடியும் ஏற, ஒரே பயம். பாஸ்டனில் என் நண்பரைக் கூப்பிட்டேன். பாஸ்டனுக்குப் போனேன். மறு நாள் சிக்காகோவிற்குப் போனேன். நான் ஏன் ஸான்பிரான்ஸிஸ்கோ விமானத்தில் ஏறினேன். உங்களால் கண்டுபிடிக்க முடியுமா?

Basic Vocabulary

மெதுவாக	slowly, gently, softly
கிளம்பு	(3) proceed, set out
முன்னால்	before, in front of
அடை	(2) reach, get to
எழு	(2) get up, rise
பெண்	girl; daughter; woman
மறுபடியும்	again
ஒரே	only (adj.)
கூப்பிடு	(4) call, summon
ஏன்	why (interrogative)
நாய்	dog

Vocabulary for Story

விமானம்	airplane
பிரயாணி	traveler
பன்னிரெண்டு	twelve
விமானநிலையம்	airport
திடுக்கிடு 4	(4) be startled, be taken aback
அழுகை	weeping, crying
ஒரு மாதிரி	in a strange or curious way
திரும்பி வா	return (17.1, 17.2). (Conjugated like வா)
விமானநிலையத்தார்	airport people
ஏணி	ladder
ஓடிவா	come running (17.1, 17.2). (Conjugated like வா)
கத்து	(3) shout
அன்னைக்கு	that day

ஒரே பயம்	only fear
எனக்கு ஒரே பயம்	the only thing I feel is fear; I am really afraid
மறு நாள்	the next day
கண்டுபிடி	(6) find, find out

Exercises

I. Give the past positive and negative.

கேள்,^{5} வில்,^{5} பேசு,^{3} எழு,^{2} குளி,^{6} கூப்பிடு^{4}
பற,^{7} பார்,^{6} கிடை,^{6} சொல்^{I}

II. Change to the past. tense

1. நான் கடைக்கு போகிறேன்.
2. அவர் இப்போது வருவார்.
3. நீங்கள் எப்போது சாப்பிடுவீர்கள்.
4. சினிமா தியேட்டர் எங்கே இருக்கிறது?
5. அவர்கள் நாளைக்கு வேலை செய்வார்களா?

III. Change to the present. tense

1. கண்ணன் உங்களைக் கூப்பிட்டாரா?
2. அந்த போர்டில் என்ன பார்க்கிறீர்கள்.
3. நீங்கள் எப்போது வீட்டிற்குத்* திரும்பினீர்கள்?
4. அவர் நாளைக்கு ஒரு மணிக்கு பேசமாட்டாரா?
5. அந்த நாய் சாப்பிடாதா?

IV. Change to the future tense.

1. நான் அந்த வீட்டில் தேடவில்லை.
2. அவர் எங்கே பாடுறார்?
3. அந்த ரயில் கிளம்பவில்லையா?
4. நீங்கள் என்ன சமைக்கிறீர்கள்?
5. அவர்கள் தமிழ் படிக்கவில்லையா?

---

*A formal dative.

WORDS FOR COLORS

சிவப்பு மஞ்சள் கறுப்பு வெள்ளை
பச்சை நீலம் ஊதா

V. Translate into Tamil.

1. He bathed again. Then he began to eat the food.
2. The car proceeded swiftly to the store.
3. The dog came inside the house. It ran to see my friend.
4. Why did you stand in the rain?
5. She cooked the food, but she did not eat it.
6. She heard the sound of the water but she did not come.

பாடம் 16

கந்தனும், குருவும்

ஒரு ஊரில் ஒரு வாயாடி மனிதன் இருந்தான். அவன் பெயர் கந்தன். அவனுக்கு கடவுள் மீது அவ்வளவு நம்பிக்கை இல்லை. அந்த ஊரில் ஒரு குரு இருந்தார். அவர் எப்பொழுதும் கடவுளைக் கும்பிடுவார். ஆனால் அவர் மனம் பலவிதமான காரியங்களை நினைக்கும். ஒரு நாள் அவர் வேறு ஒரு ஊருக்கு போகக் கிளம்பினார். வழியில் கந்தன் அவரைப் பார்த்தான். அவனைக் கேலி செய்ய நினைத்தான். "ஏ! குருவே! நான் கடவுளைப் பார்க்க வேண்டும். எனக்கு ஒரு வழிகாட்டுங்கள்" என்று கேட்டான். குருவிற்கு கோபம் வந்தது. "நீ இந்தத் தெருவில் இங்கே நில். உன் கைகள் இரண்டையும் உயர்த்து. கண்களை மூடு. அப்படியே நில். கடவுள் உன்னிடம் வருவார்." என்று சொன்னார். அப்புறம் ஊருக்குப் போனார். குரு பத்து நாட்கள் கழித்து, திரும்பிவந்தார். அவர் எதிரில், தெருவில் கந்தன் நின்றான். அவன் கைகள் உயரே இருந்தன. கண்கள் மூடியிருந்தன. அப்போது ஒரு ஆச்சரியம் நடந்தது. கந்தன் உடல் மெதுவாக உயரே கிளம்பியது. கடவுள் அவனை மெதுவாக வான உலகத்திற்கு அழைத்தார். குருவிற்கு ஒன்றும் புரியவில்லை. பிறகு, " கந்தன் இப்படியே தவம் செய்தான். அந்த தவம் ஒன்றே, அவனை வான உலகத்திற்கு அழைக்கிறது" என்று ஞானோதயம் எழுந்தது. அவர் கந்தன் பக்கத்தில் ஓடினார். "அவன் கால்களைப் பிடிக்கலாம். அவனோடு வான உலகத்திற்குப் போகலாம் " என்று நினைத்தார். ஆனால் அவரால் அது முடியவில்லை. கந்தன் மிகவும் உயரத்தில் இருந்தான்.

Basic Vocabulary

ஊர்	city; native place; any place not this place
கும்பிடு	(4) bow to, worship
மனம்	mind; (figuratively) heart
காரியம்	affair, matter
நாள்	day (plural நாட்கள்)
காட்டு	(3) show
கோபம்	anger
நில்	(5d) stand; stop (intransitive). This verb is irregular in the past, having the stem நின்ற்- .
கண்	eye
மூடு	(3) close
நட	(7) walk; happen

Vocabulary for Story

வாயாடி	talkative person
மீது	on, for. With நம்பிக்கை , belief in
நம்பிக்கை	belief
குரு	guru
எப்பொழுதும்	always (எப்போதும்)
பலவிதமான	many sorts of
கேலி	joke, fun (as in make fun of)
உயர்த்து	(3) raise
கழித்து	(lit.: having spent) after
திரும்பி வா	return (conjugated like வா)
எதிரில்	opposite to (preceded by word governed)
உயரே உயரத்தில்	high

மூடியிரு	(7) be closed
ஆச்சரியம்	miracle, wonder
உடல்	body (உடம்பு)
வான உலகம்	sky world, heaven
அழை	(6) invite, summon
தவம்	tapas, self-mortification (as a result of which one is supposed to receive powers)
ஞானோதயம்	a rising or dawning of knowledge
பிடி	(6) grasp
உயரம்	height

Grammar

16.1. Other forms of impersonal verbs. All of the impersonal verbs you have learned except வேண்டும், வேண்டாம் and போதும், போதாது often occur in finite forms other than those you were given in lessons 9 and 10. The two forms you have had of these verbs are the positive and negative irrational future singular/plural. In addition to these forms, one often encounters the 3rd person singular irrational in the past and in the present, as well as the ordinary negative.

ROOT AND CLASS		ORDINARY NEGATIVE	PRESENT 3rd sg. irrat.	PAST 3rd sg. irrat.
2.	தெரி	தெரியவில்லை	தெரிகிறது	தெரிந்தது.
2.	புரி	புரியவில்லை	புரிகிறது	புரிந்தது.
2.	முடி	முடியவில்லை	முடிகிறது	முடிந்தது.
6.	கிடை	கிடைக்கவில்லை	கிடைக்கிறது	கிடைத்தது.
6.	பிடி	பிடிக்கவில்லை.	பிடிக்கிறது.	பிடித்தது.

These forms are used in the same constructions that you have already learned, with only the tense changed:

I did not know that.	அது எனக்குத் தெரியவில்லை.
I know that.	அது எனக்குத் தெரிந்தது.
I liked that house.	எனக்கு அந்த வீடு பிடித்தது.
I did not like him.	எனக்கு அவனைப் பிடிக்கவில்லை.
I understand that.	எனக்கு அது புரிகிறது.

The present positive forms are quite informal and are generally common in spoken (but not written) Tamil.

16.2. Other forms of iru meaning "have." In 8.4, you learned to use இருக்கிறது and இல்லை to mean "have." Of these two verbs, இல்லை is not conjugated and so has no other forms. However, the verb இரு must be made to agree with the subject of the Tamil sentence, which is the thing possessed. The reason for this becomes clear when you consider that the literal Tamil construction is "To A B is." Study the following examples, keeping in mind that இரு belongs to class 7.

I have a father.	எனக்கு அப்பா இருக்கிறார்.
I had a father.	எனக்கு அப்பா இருந்தார்.
I have a mother.	எனக்கு அம்மா இருக்கிறார்கள்.
I will have money (with me).	என்னிடம் பணம் இருக்கும்.
I had money (with me).	என்னிடம் பணம் இருந்தது.
I have money (with me).	என்னிடம் பணம் இருக்கிறது.

16.3. Cardinal numbers. The number "one" has two forms, one adjectival (as in "one book"), ஒரு , and one a noun (as in "give me one"), ஒன்று. In ancient Tamil, the other numbers also had noun and adjective forms, but today the noun form is used universally for these numbers (except in multiplication tables). The adjectival forms have survived in the words for 20, 30, etc., and also for 200, 300, etc., and 2000, 3000, etc., which are the adjectival form of the first digit prefixed to - பது (ten), நூறு (hundred), or ஆயிரம் (thousand).

To build up a large number, all the words for the constituent digits are placed in the oblique except the last. This is a straightforward process, as you already know how to form the oblique of all the numbers except those ending in - பது , whose oblique is - பத்து. As the oblique form is really adjectival, you could say that all of the parts of a number except the last must be adjectives of one type or another. To make the number 7538, you take the words for 7000, 500, 30, and 8, put all but the last into the oblique, and put them together:

NUMBER	NON-OBLIQUE	OBLIQUE
7000	ஏழாயிரம்	ஏழாயிரத்து -
500	ஐந்நூறு	ஐந்நூற்று -
30	முப்பது	முப்பத்து -
8	எட்டு	எண் -

Putting the obliques together, the number 7538 is ஆயிரத்து, ஐந்நூற்று, முப்பத்தெட்டு

In compound numbers ending in 1 (as 21, இருபத்தொன்று, the adjectival or noun form of "one" may be used when the number is an adjective, while when the number is a noun, only the noun form may be used. 21 men may be either இருபத்தொரு மனிதர்கள் or இருபத்தொன்று மனிதர்கள், while "give 21" may only be இருபத்தொன்று கொடு. Note also that when the word "one" is used as an adjective, especially when it means "a" or "an" (as it often does when the indefinite article is stressed in English), may be translated either by ஒரு placed before the noun it modifies or by ஒன்று after the noun (cf. the use of எல்லாம் in 7.3).

On the following two pages, all of the basic Tamil numbers are given. Study them, and be sure you know how to build other more complex numbers from them.

எண்கள்

1. ஒன்று
2. இரண்டு
3. மூன்று
4. நான்கு
5. ஐந்து
6. ஆறு
7. ஏழு
8. எட்டு
9. ஒன்பது.
10. பத்து.
11. பதினொன்று
12. பன்னிரண்டு
13. பதின்மூன்று
14. பதினான்கு
15. பதினைந்து
16. பதினாறு
17. பதினேழு
18. பதினெட்டு
19. பத்தொன்பது
20. இருபது.

21. இருபத்தொன்று, 22. இருபத்திரண்டு. 23. இருபத்து மூன்று. etc.

30. முப்பது. – முப்பத்தொன்று, முப்பத்திரண்டு, முப்பத்து மூன்று etc.

40. நாற்பது – நாற்பத்தொன்று, நாற்பத்திரண்டு, நாற்பத்து மூன்று.

50. ஐம்பது

60. அறுபது

70. எழுபது

80. எண்பது

90. தொண்ணூறு. – தொண்ணூற்றொன்று, தொண்ணூற்றிரண்டு, தொண்ணூற்றுமூன்று.

100. நூறு.

எண்கள்

200.	இருநூறு	இருநூற்றொன்று, இருநூற்றிரண்டு, இருநூற்று மூன்று
300	முந்நூறு	
400.	நானூறு	
500.	ஐந்நூறு	
600.	அறுநூறு	
700.	எழுநூறு	
800.	எண்ணூறு	
900.	தொள்ளாயிரம்	தொள்ளாயிரத்தொன்று, தொள்ளாயிரத்திரண்டு, தொள்ளாயிரத்து மூன்று
1000.	ஆயிரம்.	ஆயிரத்தொன்று, ஆயிரத்திரண்டு, ஆயிரத்து மூன்று.
2000	இரண்டாயிரம்	
3000	மூவாயிரம்	
4000	நாலாயிரம்	
5000	ஐயாயிரம்	
6000	ஆறாயிரம்	
7000	ஏழாயிரம்	
8000	எண்ணாயிரம்	
9000	ஒன்பதாயிரம்	
10,000	பத்தாயிரம்	
1/10 million	லட்சம்	
10 million	கோடி.	

1/2	அரை	3/4	முக்கால்
1/4	கால்	1/8	அரைக்கால்.

16.4. Ordinal numbers. The Tamil ordinal numbers are formed by adding the suffix - ஆம் or the suffix - ஆவது to the cardinal number. The word for "first" is முதல், not ஒண்றுவது. However, in compound numbers ending in "one," the ordinal suffix is added to the noun form of "one." Thus,

21st	இருபத்தொண்றுவது
18th	பதினெட்டாவது
3257th	மூவாயிரத்து, இருநூற்றைம்பத்தேழு.
The first day.	முதல் நாள்.
The 31st day.	முப்பத்தொண்றும் நாள்.

Grammar Summary

16.1S. Other forms of impersonal verbs. Except for வேண்டும், வேண்டாம் and போதும், போதாது, the impersonal verbs may be found, in additional to the forms you have had, in the 3rd sg. irrat. past and present and in the ordinary negative.

16.2S. Other forms of iru meaning "have." Note that must agree with the thing possessed.

16.3S. Cardinal numbers. Numbers are formed by placing all but the last component in the oblique.

16.4S. Ordinal numbers. Number + - ஆம் or - ஆவது.

EXERCISES.

I. Give the positive and negative, in the past tense.

காட்டு,^{3} நில்,^{5} வாங்கு,^{3} கும்பிடு,^{4} திரும்பு,^{3}
கிளம்பு,^{3} ஏறு^{2}, நட^{7} செய்,^{1} கூப்பிடு^{4} மூடு.^{3}

II. Change positives to negatives, and vice versa.

போவேன் இருக்கமாட்டோம் நடக்காது பார்த்தால்
வரவில்லை சொல்கிறோம் திரும்பினான் நிற்கவில்லை

III. Fill in the blanks with impersonal verbs.

1. எனக்கு தமிழ் __________.
2. அவரால் ஆங்கிலம் பேச __________.
3. உங்களுக்கு சாதம்* __________?
4. இந்தக் கடையில் மசாலா சாமான்** __________?
5. எனக்கு பால் __________.

IV. Fill in the blanks. (use the dictionary for words you do not know)

இராமனுக்கு ஒரு மனைவி ______. (இரு^{I}). அவள் சீதா. அவர்கள் இருவரும் காட்டில் ________(வாழ்^{2}). ஒரு நாள் இராவணன் சீதாவை ______________. (தூக்கிக்கொண்டுபோ)*** அதனால் இராமன் இலங்கைக்குப் __________(போ^{3}). இலங்கையை அனுமான் உதவியால் __________(எரி^{6}). அப்புறம் சீதாவோடு அவனுடைய நாட்டிற்கு ______________. (திரும்பிவா^{I})****

---

*cooked rice.

** ingredients for masala (a mixture of spices)

*** pick up and go

****return

V. Translate into Tamil.

1. I did not like mother's native place, but I went there.
2. In this picture, you will see all my friends.
3. She often had money, but now she has nothing.
4. He was able to come yesterday to see the new building, but he did not like it.
5. He became angry (literally: anger came to him). Then he began to run.
6. Mother and father gave 1,278 rupees. They got a good new house.

பாடம் 17　　சாப்பாடு

தமிழர்களுக்கு சாப்பாடு மிகவும் இஷ்டம். காலையில் ஐந்து, ஆறு மணிக்கு ஒரு ஸ்ட்ராங் காபி குடிப்பார்கள். ஒன்பது மணிக்கு, இட்லி அல்லது தோசை சட்னியோடு சாப்பிடுவார்கள். மத்தியானம் ஒரு மணிக்கு சாதம், பருப்பு, சாம்பார், ரசம், மோர், கறி எல்லாம் சாப்பாட்டில் இருக்க வேண்டும். எல்லாம் கலந்து தான் நாங்கள் சாப்பிடுவோம். உங்கள் மொழியில் நீங்கள் அதை என்ன சொல்வீர்கள், தெரியுமா? "ஒரே மெஸ்". அதோடு எங்களுக்கு சாப்பாடு காரமாக இருக்க வேண்டும். உங்களுக்கு காரம் பிடிக்குமா? எங்கள் சாப்பாடு ஜோராக இருக்கும். நீங்கள் என்ன சொன்னீர்கள்? காரம் பிடிக்காதா? எங்கள் சாப்பாட்டிலிருந்து கொஞ்சம் விலகியே நில்லுங்கள்.

சாயந்தரம் ஆபீஸிலிருந்தோ, ஸ்கூலிலிருந்தோ, காலேஜிலிருந்தோ, வீட்டுக்குத் திரும்பி வந்து, உடனே நான்கு மணிக்கு டிபன், காப்பி சாப்பிடுவார்கள். அது என்ன, டிபன்? என்று கேட்கிறீர்கள்? 'டிபன்' என்றால், ஒரு காரம். அதாவது பஜ்ஜி, வடை, பக்கோடா எல்லாம். சில சமயம் டிபனில் ஸ்வீட்டும் இருக்கும். அப்புறம் இராத்திரி சாப்பாட்டிலும், சாதம், சாம்பார், ரசம், மோர், கறி எல்லாம் இருக்கும்.

நீங்கள் எங்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? சாப்பாட்டு ராமன்கள் என்று? உங்கள் மேல் தப்பு இல்லை. நாங்கள் சாப்பாட்டு ராமன்கள் தான்.

Basic Vocabulary

தமிழன்	a Tamilian (masc.). Fem.: தமிழச்சி
மத்தியானம்	daytime (as opposed to morning, evening, and night)
சாதம்	cooked rice
பருப்பு	dahl
சாம்பார்	sambar, a watery mix of dahl, spices, and vegetables eaten with rice
ரசம்	a souplike mix of water, dahl, and spices, eaten with rice.
மோர்	buttermilk
கறி	a vegetable dish
மொழி	language, word
காரம்	hot, spicy; something spicy
சாயந்தரம்	evening
டிபன்	tiffan, snack
இராத்திரி	night
பற்றி	(preceded by accusative object) about
தப்பு	mistake

Vocabulary for Story

இட்லி	idli, a steamed rice and dahl cake
தோசை	a pancake made of rice and dahl
சட்னி	chutney, usually ground coconut mixed with water and spices
கல	(7) mix
ஜோராக	very good
விலகு	(3) be away from
ஓ --- ஓ	or, or

பஜ்ஜி	a fried snack
வடை	dahl soaked, ground up, and fried in balls the size of dumplings
பக்கோடா	a fried snack
சமயம்	time, occasion
சாப்பாட்டு ராமன்	glutton
உங்கள் மேல் தப்பு இல்லை	There is no mistake on you, you are not mistaken.

Grammar

17.1. Formation of the converbial. This form is made for all but class 3 verbs by adding - உ to the past stem. For class-3 verbs, it is made by taking final - ன் from the past stem.

CLASS AND ROOT			PAST STEM	CONVERBIAL
1a.	செய்	do	செய்த் -	செய்து
1b.	கொள்	take	கொண்ட் -	கொண்டு
1c.	வெல்	conquer	வென்ற் -	வென்று
2.	உட்கார்	sit down	உட்கார்ந்த் -	உட்கார்ந்து
3.	வாங்கு	buy	வாங்கின் -	வாங்கி
4.	சாப்பிடு	eat	சாப்பிட்ட் -	சாப்பிட்டு
5a.	உண்	eat	உண்ட் -	உண்டு
5b.	தின்	eat	தின்ற் -	தின்று
5c.	கேள்	hear, ask	கேட்ட் -	கேட்டு
5d.	வில்	sell	விற்ற் -	விற்று
6.	பார்	see	பார்த்த் -	பார்த்து
7.	நட	walk	நடந்த் -	நடந்து

With the exceptions of போ, ஆ, and சா, all of the irregular verbs make the converbial in a regular way from the past stem.

2.	வா	come	வந்த் -	வந்து
3.	போ	go	போன் -	போய்
3.	சொல்	say	சொல்	சொல்லி
5d.	நில்	stand	நின்ற் -	நின்று
5a.	காண்	see	கண்ட் -	கண்டு
3.	ஆகு, ஆ	become	ஆன் -	ஆகி, ஆய்
2?	சா	die	செத்த் -	செத்து

17.2. The use of the converbial. This verb form is one of the distinguishing features of the Dravidian languages, which have no word corresponding to "and" to co-ordinate two sentences.

The converbial is used for all but the last of a series of verbs whose actions are prior to or closely connected with the last verb of the sentence, and which generally have the same subject as the last verb. All of the objects and adverbs dependent on the verb made into a converbial must be placed before it, as when the verb is finite. The subject may either be placed at the beginning of the sentence or after the last converbial and before the main verb.

நான் அவனைப் பார்த்து வீட்டுக்குப் போனேன்.
அவனைப் பார்த்து, நான் வீட்டுக்குப் போனேன்.
I saw him and went home.

அவள் அந்தப் புஸ்தகத்தை என் வீட்டுக்குக் கொண்டுவந்து, என்னிடம் கொடுத்து, பள்ளிக்கூடத்துக்குப் போனாள்.
She brought the book to my house, gave it to me, and went to school.

குழந்தைகள் தெருவில் விளையாடி, நாயைப் பார்த்து, வீட்டுக்குப் போனார்கள்.
The children played in the street, saw the dog, and went home.

These sentences could be translated differently in English. The first, for example, could be "After seeing him, I went home," or "Having seen him, I went home."

The tense of the converbial is determined by the main verb. "I will see him and go home" would be நான் அவனைப் பார்த்து, வீட்டுக்குப் போவேன். The converbial happens before the action of the main verb in such cases, but its real time is the same as that of the main verb -- future if the main verb is future, past if it is past, and present if it is present ("She sees me and goes home" -- என்னைப் பார்த்து, அவள் வீட்டுக்குப் போகிறாள்). The sense can always be derived correctly by using the somewhat clumsy construction "Having..." in English ("Having seen me, she will go home"). When two or more converbials appear together (as in the second and third sentences above), they form a sequence in time, the first occurring before the second, the second before the third, etc.

It is also possible for the connection between the converbial and the main verb to be causal ("She drank poison and died") or for it to be an intimate relation, so that the two verbs together form a sort of compound verb ("Come running" is ஓடிவா).

17.3. Direct discourse: the use of enṟu. Direct discourse is when a quote is reported directly ("He said, 'I will come.'"); indirect discourse, when it is reported indirectly ("He said that he would come.") While there is a clumsy and rarely used construction for indirect discourse in Tamil (see), it is almost always necessary to render a statement of indirect discourse into Tamil by making it direct. This involves putting the discourse into quotes and then translating it with the word என்று (from என், 5b, say, converbial) after the quote, and then putting the main verb (which is generally "say," "exclaim," "think," or something of the like) after என்று. The subject of the main verb may be placed either before the என்று clause or after it and before the main verb. "He said that you should come here" first has to be made direct: "'You should come here,' he said," or "'Come here,' he said." These sentences could be rendered as follows:

"நீங்கள் இங்கே வர வேண்டும்" என்று அவர் சொன்னார்.
"நீங்கள் இங்கே வாருங்கள்" என்று அவர் சொன்னார்.
"இங்கே வாருங்கள்" என்று அவர் சொன்னார்.

The construction with என்று can also be used to signify intent. "She wrote a letter to the effect that you should come quickly" would be translated,

"நீங்கள் சீக்கிரம் வர வேண்டும்" என்று கடிதம் எழுதினாள்.

The literal translation of this sentence is, "'You should come quickly,' என்று she wrote a latter." The என்று construction is used with words for thinking as well as speaking:

அவள் அம்மா நாளைக்கு வருவாள் என்று நினைத்தாள்.

"She thought that her mother would come tomorrow." -- literally, "'My mother will come tomorrow,' என்று she thought."

17.4. The use of enrāl, "If (one) says." என்றால் is a conditional of என் (5b), "say" (see 19.1). It may be used to make a conditional clause (i.e. an "if" clause) by making the verb of the clause past and finite and putting என்றால் after it:

அவர் அங்கே பேசினார் என்றால், நீங்கள் போவீர்களா?

If he speaks there, will you go.

It is, however, more common to find the conditional construction described in 19.1. One often encounters என்றால் used with an interrogative word as an idiom. ஏனென்றால் means literally, "if (you) ask why," with the sense of "because." Thus, அவன் வீட்டுக்குப் போகிறான். ஏனென்றால் அங்கே ஒரு கல்யாணம் நடக்கிறது.

"He is going to his house because a marriage is taking place there." Literally, this would be translated, "He is going to his house. If you ask why, a marriage is taking place there."

Grammar Summary

17.1S. Formation of the converbial.

All classes except 3: past stem + - உ.

Class 3: past stem minus final - ன். (I.e. root + - இ).

17.2S. The use of the converbial.

Used for all but the last of a series of verbs whose actions are prior to or closely connected with the last verb of the sentence, and which generally have the same subject as the last verb. Can be translated by co-ordinate sentences ("... and ..."), by "having...," by "after...," and in other ways.

17.3S. Direct discourse: the use of en̲r̲u.

English sentences with indirect discourse must be rendered in Tamil as direct discourse followed by "என்று."

17.4S. The use of en̲r̲āl, "If (one) says."

A conditional sentence may be translated by making the verb of the clause past and finite and putting என்றால் after it. ஏனென்றால் , literally "if (one) asks," means "because.

EXERCISES.

I. Give the positive converbial.

வா^{I} இரு^{I} கேள்^{5} உட்கார்^{2} பேசு^{3} திற^{7}
போ^{I} சொல்^{3} நில்^{5} வில்^{5} நினை^{6} திரும்பிவா^{I}

II. Expand the following sentences by adding converbials.

1. நான் உட்கார்ந்தேன்.
2. அவர் எழுந்தார்.
3. அவர்கள் பேசினார்கள்.
4. நாங்கள் பாடுகிறோம்.
5. நீங்கள் பார்ப்பீர்கள்.

III. Fill in the blanks.

1. நீங்கள் அவர்களோடு ________ போனீர்களா? (குளி^{6})
2. அங்கே ________ . (பாடு^{3} Imper. neg.)
3. அவரை ________ என்ன சொன்னீர்கள்? (பார்^{6})
4. நீங்கள் நேற்று என்ன ________? (சமை^{6})
5. உங்களுக்கு இந்தப் பாடம் ________? (புரி^{2} past)
6. கார் ________ வரும். (திரும்பு^{3})
7. அவருக்கு இந்த வீடு ________. (பிடி^{6} like-neg.)
8. அவர்கள் இந்தப் பாட்டு ________ முடியுமா? (கேள்^{5})
9. நீங்கள் எப்போது ________? (திரும்பிவா^{2} past)
10. உங்களுக்கு தமிழ் ________?

Names of Some Snacks (not sweets)

இட்லி உப்புமா வடை பக்கோடா ஓமப்பொடி.
தோசை பூரி பஜ்ஜி மிக்ஸர்
சமோசா காராப்பூந்தி போண்டா.

IV. Translate into Tamil.

1. Having bowed (to) god, mother returned home.
2. He is afraid of dogs (dative) and will not go walking outside. (Make "walking" a converbial followed directly by "go.")
3. She said that you should come back at 7:00.
4. He writes that you should bathe, worship god, and go to school.
5. I thought that she would come, but she said that she had to cook food at home.
6. They got down from the bus and ran to the store.

பாடம் 18 கோபம்

எனக்கு இன்றைக்கு காலையில் மிகவும் கோபம். ஸ்கூலுக்கு போகாமல் இருக்க வேண்டும் என்று முதலில் நினைத்தேன். வகுப்பிற்கு போகாமல் இருந்தால், ஒருவேளை ஆசிரியருக்குக் கோபம் வரலாம் என்று நினைத்து வகுப்பிற்குப் போனேன். மத்தியானம் சாப்பிடாமல் இருக்க வேண்டும் என்று நினைத்தேன். ஆனால் என் சிநேகிதன் பாலு பக்கத்தில் வந்து, எண்டா, உர் என்று இருக்கிறாய். பசியோ, என்னவோ, அல்லது பர்ஸ் காலியோ! நான் இன்றைக்குப் பணம் கொடுக்கிறேன். சாப்பிடாமல் இருந்தால் உடம்புக்கு ஒத்துக்கொள்ளாது. வா, கான்டீனுக்குப் போகலாம்" என்று கூப்பிட்டான். அவன் கோபத்துக்கு பயந்து, அவனோடு சாப்பிடப் போனேன். சாயந்தரம், வீட்டுக்கு வந்து அம்மாவிடம், "அம்மா, எனக்குப் பசிக்கவில்லை. அப்பாவை வந்து தொல்லைப்படுத்தச் சொல்லாதே! சாப்பிட மாட்டேன்" என்றேன். அம்மா, "என்னவோ, போ, என் உடம்பா கெட்டுப் போகிறது" என்று சொல்லிவிட்டாள். ஆனால் பாருங்கள், அத்தை கோமதி, "எண்டா சுப்பு, நான் மிளகுக் குழம்பு வைத்து, கத்தரிக்காய் கறி பண்ணினேன். சாப்பிட வா" என்றாள். என்னால் மறுக்க முடியவில்லை. இப்போது நான் என்ன செய்கிறேன், தெரியுமா? தூங்காமல் இருக்க வேண்டும் என்று பார்க்கிறேன். ஆனால் இயற்கை அன்னையின் கோபத்திற்கு முன்னால், என் கோபத்திற்கு பலம் இருக்காது.

Basic Vocabulary

வகுப்பு	class (as in school); class, division
ஆசிரியர்	teacher
பசி	hunger
பசி	(6) be hungry (used impersonally, with dative subject)
காலி	empty
உடம்பு	body
வை	(6) put, place, put on
பண்ணு	(3) do, make
தூங்கு	(3) sleep
பலம்	strength

Vocabulary for Story

இருந்தால்	(here:) if (I) am (without going....) (19.1, 19.2)
எண்டா	why, fellow
'உர்' என்று	grumpy
	(I don't know whether it was) ---, ---, or ---.
ஒத்துக்கொள்	(1b) agree
தொல்லைப்படுத்து	(3) bother
என்னவோ, போ.	(I don't care) whatever (it is)
கெட்டுப்போ	be spoiled (conjugated like போ)
சொல்லிவிடு	say (see 21.6)
அத்தை	aunt, father's sister
கோமதி	(a name)
அப்பு	(a name)
மிளகுக் குழம்பு	pepper stew
கத்தரிக்காய்	eggplant
மறு	(6) refuse
இயற்கை அன்னை	mother nature

Grammar

18.1. Formation and use of the negative converbial. This form is made by adding - ஆமல் (or, less commonly, - ஆது) to the *infinitive stem.*

CLASS AND ROOT			INFINITIVE STEM	NEGATIVE CONVERBIAL	
1a.	செய்	do	செய்ய் -	செய்யாமல்	செய்யாது.
1b.	கொள்	take	கொள்ள் –	கொள்ளாமல்	கொள்ளாது
1c.	வெல்	conquer	வெல்ல் –	வெல்லாமல்	வெல்லாது
2.	உட்கார்	sit down	உட்கார்	உட்காராமல்	உட்காராது
3.	வாங்கு	buy	வாங்க் –	வாங்காமல்	வாங்காது
4.	சாப்பிடு	eat	சாப்பிட் –	சாப்பிடாமல்	சாப்பிடாது
5a.	உண்	eat	உண்ண் -	உண்ணாமல்	உண்ணாது
5b.	தின்	eat	தின்ன் -	தின்னாமல்	தின்னாது
5c.	கேள்	hear, ask	கேட்க்	கேட்காமல்	கேட்காது
5d.	வில்	sell	விற்க் –	விற்காமல்	விற்காது
6.	பார்	see	பார்க்க் –	பார்க்காமல்	பார்க்காது
7.	நட	walk	நடக்க் —	நடக்காமல்	நடக்காது.

The sense of the negative converbial is generally "without ___ing." Thus,

வேலை செய்யாமல், நான் வீட்டுக்குப் போனேன்.

"Without doing (my) work, I went home."

18.2. The use of illāmal. இல்லாமல் placed after a word in the nominative translates the English preposition "without."

நான் பணம் இல்லாமல் வந்தேன்.

I came without money.

18.3. Rules for the doubling of the initial hard consonants k, c, (ṭ), t, and p. You will have noticed in the lessons that these initial letters are often doubled. You have now had all of the forms after which such doubling takes place. The main rules for this process are given below.

1. Initial hard consonants are doubled after the words அந்த, இந்த, எந்த, அப்படி, இப்படி, and எப்படி.

This fruit	இந்தப் பழம்
Just like that	அப்படித் தான்
How does he see?	எப்படிப் பார்க்கிறான்?

2. Initial hard consonants are doubled after the accusative case suffix (- ஐ) and after the dative case suffix (-க்கு or - உக்கு).

Look at me.	என்னைப் பார்.
I give to him.	அவனுக்குக் கொடுத்தேன்.

3. Initial hard consonants are doubled after infinitives.

You must not speak.	நீ பேசக் கூடாது.
He told to come....	அவன் வரச் சொன்னான்.

4. Initial hard consonants are doubled after converbials that end in - இ or - ய் , or which end in a double consonant + - உ (i.e. in - த்து , - ட்டு , or - ற்று). That is to say, they are doubled after converbials of verbs belonging to classes 3 (- இ or - ய்), 4 (- ட்டு , - ற்று , or - க்கு), 5c (- ட்டு), 5d (- ற்று), and 6 (- த்து).

Having gone he arrived	போய்ச் சேர்ந்தான்.
Buy and give	வாங்கிக் கொடு.
Having left come back	விட்டுத் திரும்பு.

5. Initial hard consonants are doubled when they belong to the second of two nouns used in a phrase such that the first modifies the second in an adjectival sense and where the first ends in a vowel or in - ய், - ர், or - ழ் .

Well water	கிணற்றுத் தண்ணீர்
Man of the house	வீட்டுக்காரர்
Plantain fruit	வாழைப்பழம்
Water bubble	நீர்க்குமிழி
A Tamil word	தமிழ்ச் சொல்.

Grammar Summary

18.1S. Formation and use of the negative converbial.

Infinitive stem + -ஆமல் or + -ஆது.

Sense is "without ___ing."

18.2S. The use of illāmal.

After a noun in the nominative, used like the English preposition "without" (except that its object is the noun preceding it).

18.3S. Rules for the doubling of the initial hard consonants k, c, (ṭ), t, and p.

1. After இந்த, அந்த, எந்த, இப்படி, அப்படி, and எப்படி.
2. After the accusative suffix (-ஐ) and the dative suffix (-க்கு, -உக்கு).
3. After an infinitive.
4. After a converbial ending in -இ or -ய் or in a double consonant + -உ.
5. On the second of 2 nouns if the first modifies the second adjectivally, and if the first ends in a vowel or in -ய், -ர், or -ழ்.

EXERCISES.

I. Give the negative converbial.

நினைத்து நின்று சாப்பிட்டு தூங்கி
கேட்டு விற்று சொல்லி என்று

II. Give the positive converbial.

வைக்காமல் கூப்பிடாமல் பசிக்காமல் உட்காராமல்
பண்ணாமல் நடக்காமல் செய்யாமல் தெரியாமல்

III. Fill in the blanks.

1. அங்கே ________ வீட்டுக்குப் போனேன். (வா^I neg.)
2. அவளை ________ சொல்லுங்கள். (சாப்பிடு^4 inf.)
3. அவர்களை மத்தியானம் ________ கேட்டோம். (பார்^6 Conv.)
4. சாயந்தரம் ஒரு பாட்டு ________. (பாடு^3 Imp. neg.)
5. அவள் இங்கே ________. (படு^6 fut. neg.)
6. அது இன்றைக்கு ________. (ஓடு^3 fut. neg.)
7. அவைகள் நேற்று ________. (போ^I past neg.)
8. நாங்கள் வேலை ________. (செய்^1 pres.)
9. நீங்கள் இங்கே ________. (தூங்கு^3 potential)
10. நீங்கள் அதை ________. (தின்^7 past)

IV. Translate into Tamil.

1. She went to her work without showing her anger.
2. She asked about you and got in the car.
3. Are there books in your school?
4. The teacher says that the students should study this book without sleeping.
5. Without another way, I started (கிளம்பு^3) at 5:00 and came here at 7:00.
6. Without standing for the bus, he came (by) walking.

இன்றைக்கு பீச்சில் ஒரு தி.மு.க. கூட்டம் நடக்கிறது. அடேயப்பா! எவ்வளவு கூட்டம்! எவ்வளவு போலீஸ்காரர்கள் என்கிறீர்களா? எங்கள் ஜனங்களுக்கு அரசியல் கூட்டம் என்றால் ஒரு திருவிழா போல. முதல் மந்திரி ராஜா போல. அதோ, பாருங்கள், முதல் மந்திரி பேசுகிறார். பக்கத்தில் போனால் பேச்சு கேட்கலாம். கூட்டத்தில் கொஞ்சம் இடிவாங்கினால் தான் போக முடியும். பரவாயில்லையா, வாருங்கள், போகலாம். உட்கார இடம் இருக்காது. நின்றால் தான் பேச்சுக் கேட்க முடியும்.

உங்களுக்கு முதல் மந்திரி பேச்சு அவ்வளவு புரியவில்லையா? ஆமாம், தி.மு.க. தமிழ் கொஞ்சம் கஷ்டம். மிகவும் ஜனங்கள் அவர்கள் அடுக்குத் தமிழைக் கேட்கவே இங்கே வருகிறார்கள். தமிழ்ப் பேச்சு, தமிழ் ஆர்வம், தமிழ் நாடு இது எல்லாம் தான் தேர்தலில் அவர்களது வெற்றிக்குக் காரணம். அடிக்கடி கேட்டால், உங்களுக்கும் இந்தத் தமிழ் புரியும்.

அங்கே என்ன திடீரென்று சத்தம். ஏதோ கலாட்டா. கவலைப்படாதீர்கள். போலீஸ்காரர்கள் பார்த்துக்கொள்வார்கள். இப்படித்தான், கலாட்டா இல்லாத கூட்டம் இல்லை. உங்களுக்குப் பயமாக இருந்தால், உடனே நாம் போய்விடுவோம். இங்கே நின்றால் பஸ் கிடைக்கும்.

Basic Vocabulary

கூட்டம்	gathering, meeting; crowd
போல	(preceded by object in the accusative) like
ராஜா	king
விளையாடு	(3) play
பரவாயில்லை	it doesn't matter, it's O.K.
இடம்	place
கஷ்டம்	difficult
நாடு	country
காரணம்	cause
திடீரென்று	suddenly
சத்தம்	noise

Vocabulary for Story

திராவிட முன்னேற்றக்கழகம்	D. M. K., Dravidian Advancement Party
அடேயப்பா!	(expression of amazement)
ஜனங்கள்	people
அரசியல்	politics
திருவிழா	festival
மந்திரி	minister
இடி வாங்கு	(3) receive a blow
பேச்சு	talk, speech
அடுக்குத் தமிழ்	ornate Tamil, Tamil (with many phrases) piled up
—ஏ	(an intensifier)
ஆர்வம்	desire, ardent affection
தேர்தல்	election
வெற்றி	victory

ஏதோ	some
கலாட்டா	disturbance
கவலைப்படு	(4) be worried
பார்த்துக்கொள்	(1b) look after (see 21.4)
இல்லாத	without (see 24.1, 24.4)
போய்விடு	go, leave (see 21.6)

Grammar

19.1. Formation of the conditional. This form is made by adding - ஆல் to the past stem.

CLASS AND ROOT			PAST STEM	CONDITIONAL (POSITIVE)
1a.	செய்	do	செய்த் -	செய்தால்
1b.	கொள்	take	கொண்ட் -	கொண்டால்
1c.	வெல்	conquer	வென்ற் —	வென்றால்
2.	உட்கார்	sit down	உட்கார்ந்த்	உட்கார்ந்தால்
3.	வாங்கு	buy	வாங்கின் —	வாங்கினால்
4.	சாப்பிடு	eat	சாப்பிட்ட் —	சாப்பிட்டால்
5a.	உண்	eat	உண்ட் -	உண்டால்
5b.	தின்	eat	தின்ற் -	தின்றால்
5c.	கேள்	hear, ask	கேட்ட் -	கேட்டால்.
5d.	வில்	sell	விற்ற் -	விற்றால்
6.	பார்	see	பார்த்த் -	பார்த்தால்
7.	நட	walk	நடந்த் -	நடந்தால்.

All of the irregular verbs make this form regularly from their past stems.

19.2. Use of the conditional. This form is used to translate "if" clauses in English. It is not conjugated, but is invariant regardless of its subject. As with most other verbal forms in Tamil, it comes at the end of the clause of which it is a part.

நீ வந்தால், என்னைப் பார்ப்பாய்.

If you come, you will see me.

அவர்கள் வெளியே விளையாடினால் கூப்பிடு.

If they play outside, call them.

The English condition of conjecture ("If you had come...") is translated by the conditional on a compound verb, as explained in 21.3.

The sense of "Only if..." is conveyed by placing தான் after the conditional:

நீங்கள் வந்தால் தான், நான் உங்களைப் பார்ப்பேன்.

I will see you only if you come.

Grammar Summary

19.1S. Formation of the conditional.

Past stem + -ஆல்.

19.2S. Use of the conditional.

Placed at the end of the conditional clause, it translates an "if" clause.

Conditional + - தான் = "Only if...."

EXERCISES.

I. Give the positive conditional.

கொண்டுவா^{I}, இரு^{I}, பேசு^{3}, தூங்கு^{3}, போ^{I},
நில்^{5}, கேள்^{5}, நினை^{6}, திற^{7}, பார்^{6}, சொல்^{3}

II. Expand the sentences with a conditional clause.

1. அவன் பேசுவான்.
2. அவர்கள் பாடுவார்கள்.
3. நீங்களும் வரலாம்
4. நான் தூங்குவேன்.
5. நாங்கள் படிப்போம்.

III. Fill in the blanks.

1. நான் ______ . (போ^{I} past)
2. நீங்கள் ______. அவர்களும் விளையாடுவார்கள். (வா^{I}
3. அவர் அடிக்கடி ______ வருவார். (பாடு^{3} inf.)
4. அவர் எங்கள் ______ . (வா^{I} fut.)
5. நீங்கள் அந்த ______ பார்க்க வேண்டாம்.
6. இங்கே வேகமாய் ______ . (நட^{7} imp. neg.)
7. திருவிழா* ______, நீங்கள் போகலாம் (நட^{7} cond.)
8. அவர் இப்போது ______, பரவாயில்லை. (படி^{6} cond.)
9. இங்கே ______, பஸ் வரும் (நில்^{5} cond.)
10. அவர் ஏன் ______ ? (தூங்கு^{3} pre.)

---

*festival.

IV. Translate into Tamil.

1. If you play here, dogs may come.

2. You should eat only if you are hungry.

3. If you call the gardener, he will bring water and give it us.

4. If you write (converbial) a letter and tell her to come, she will certainly get in a car, start out, and come.

5. The king will speak only if you say that a big crowd is here.

6. She thought that the lesson was very difficult and did not write it.

பாடம் 20 சொந்தக்காரர்கள்

இந்தியாவில் சொந்தக்காரர்கள் இல்லாவிட்டால், வாழ்க்கையில் அவ்வளவு ருசி இல்லை. எல்லாருக்கும் வாரத்துக்கு ஒரு தடவையாவது, யாராவது சொந்தக்காரர்கள் வீட்டுக்குப் போகாவிட்டால், தூக்கம் வராது. குடும்பங்களுக்கு இடையே உள்ள சொந்தம், மிகவும் குழப்பமானது.

ஒரு மனிதர் : இவள் யார் அம்மா, உங்கள் மகளா?

ஒரு அம்மா : இல்லை, என் சித்தப்பாவுடைய மாமாவுடைய பேத்தி.

ஒ. ம : இந்தப் பையன் யார் அம்மா?

ஒ. அ : என் பெரியம்மாவுடைய மருமகளுடைய தம்பி.

இது பெரிய விஷயம் இல்லை. இதை விட ருசிகரமான விஷயங்கள் இருக்கின்றன. சொந்தக்காரர்களுக்கிடையே அடிக்கடி சண்டைகள் நடக்கும். சில நாட்கள் ..... சில வாரங்கள் -- சில மாதங்கள் -- சில வருஷங்கள் ஒருவரோடு ஒருவர் பேசமாட்டார்கள். கடைசியில் ஒரு நாள், "அடிக்கிற கை தான் அணைக்கும்" என்று ஏதாவது சொல்லி சேர்ந்து கொள்வார்கள். கல்யாணம் அல்லது ஏதாவது விசேஷம் வந்தால், சொந்தக்காரர்களுக்கு எல்லாம் சாப்பாடு மட்டுமல்ல, துணிமணிகள் எல்லாம் வாங்கித் தர வேண்டும். ஏழைகள் பாடு, திண்டாட்டம் தான். சொந்தக்காரர்கள் தொல்லை தான். ஆனால் அவர்கள் இல்லாவிட்டால் சண்டை இல்லை, சந்தோஷம் இல்லை, கூட்டுறவு இல்லை, காஸிப்பும் இல்லை, சுருக்கமாகச் சொன்னால், வாழ்க்கையில் ருசி இல்லை.

Basic Vocabulary

தடவை	time (as in one time, two times)
வாழ்க்கை	life
வாரம்	week
தூக்கம்	sleep (noun)
குடும்பம்	family
மகள்	daughter
பையன்	boy (plural,)
மாதம்	month
வருஷம்	year
கல்யாணம்	marriage
தா^{2}	give (conjugated like வா)
கடிதம்	letter

Vocabulary for Story

சொந்தக்காரர்	relative
இல்லாவிட்டால்	(negative conditional of இல்-) if there were not
ருசி	taste, flavor, savor
- ஆவது	at least
யாராவது	someone (here: some relatives)
இடையே	(often after dative) among
உள்ள	which is, which are (see 30.1)
சொந்தம்	relation(ship); wealth, property
குழப்பமானது	confused (literally, something that is confused -- 30.2)
சித்தப்பா.	father's younger brother; mother's younger sister's husband
மாமா	maternal uncle
பேத்தி	granddaughter
பெரியம்மா	senior paternal uncle's wife

மருமகன்	a man's sister's son or a woman's brother's son; son-in-law
விஷயம்	matter
இதை விட ருசிகரமான விஷயங்கள்	. matters that are more interesting than this
சண்டை	fight
சிலர்	some people
ஒருவரோடு ஒருவர்	with each other
கடைசியில்	finally
அடி	(6) beat, hit
அணை	(6) embrace
ஏதாவது	something
சேர்ந்து கொள்	(1b) join together (in peace) (see 21.4)
அல்லது	or
விசேஷம்	special occasion
மட்டுமல்ல	not only
துணி, மணி	clothes and jewels (i.e. clothes and ornaments)
ஏழை	poor person
பாடு	condition
திண்டாட்டம்	suffering
தொல்லை	nuisance
இல்லாவிட்டால்	(negative conditional of இல்லை) if (they) were not
கூட்டுறவு	intimate connection
காஸிப்	(an English word)
சுருக்கமாக	in brief

Grammar

20.1. Formation of the negative conditional. Like the other negative verb forms, this form is made from the infinitive stem, to which - ஆவிட்டால் is added. The form is invariant, no matter what the subject, and it is used like the positive conditional.

நீங்கள் போகாவிட்டால், நானும் போகமாட்டேன்.

If you don't go, I also won't go.

CLASS AND ROOT			INFINITIVE STEM	NEGATIVE CONDITIONAL
1a.	செய்	do	செய்ய்	செய்யாவிட்டால்
1b.	கொள்	take	கொள்ள் -	கொள்ளாவிட்டால்
1c.	வெல்	conquer	வெல்ல் -	வெல்லாவிட்டால்
2.	உட்கார்	sit down	உட்கார் -	உட்காராவிட்டால்
3.	வாங்கு	buy	வாங்க் -	வாங்காவிட்டால்
4.	சாப்பிடு	eat	சாப்பிட் -	சாப்பிடாவிட்டால்
5a.	உண்	eat	உண்ண் -	உண்ணாவிட்டால்
5b.	தின்	eat	தின்ன் -	தின்னாவிட்டால்
5c.	கேள்	hear, ask	கேட்க் -	கேட்காவிட்டால்
5d.	வில்	sell	விற்க் -	விற்காவிட்டால்
6.	பார்	see	பார்க்க் -	பார்க்காவிட்டால்
7.	நட	walk	நடக்க் -	நடக்காவிட்டால்

Grammar Summary

20.1S. Formation of the negative conditional.

Infinitive stem + - ஆவிட்டால்.

EXERCISES

I. Give the negative conditional.

ஓடினால் வந்தால் கொடுத்தால் நின்றால் கேட்டால்
பேசினால் அடைந்தால் பார்த்தால் பறந்தால் தூங்கினால்

II. Give the positive conditional.

குளிக்காவிட்டால் நினைக்காவிட்டால் திரும்பாவிட்டால்
படிக்காவிட்டால் கூப்பிடாவிட்டால் செய்யாவிட்டால்
பறக்காவிட்டால் தெரியாவிட்டால் வராவிட்டால்
நினைக்காவிட்டால்

III. Fill in the blanks.

1. நீ பணம் ________, நான் சினிமாவுக்கு போக முடியாது.
2. நீங்கள் அவரை ______, அவர் கட்டாயம் வருவார். (கூப்பிடு, cond.)
3. அந்த மாமா* இங்கே ______ பேச வேண்டும். (வா conv.)
4. இந்த வாரம் நீங்கள் எங்கே ________**? (போ pres.)
5. அவர் கடிதம் ______, நாங்கள் பதில் போடமாட்டோம் (எழுது neg.)
6. நான் அடிக்கடி உங்களை ________ வேண்டும். (நினை inf.)
7. உங்கள் மகளுக்கு சொத்து ______? (இரு^{7} pres.)
8. நேற்று அவர்களால் தமிழ் பேச ______? (முடி)
9. நான் அவரை ______, அவரோடு ஓடவேண்டும். (பார் cond.)
10. அம்மா ______, நான் வருவேன். (தூங்கு)

---

*uncle, used for older males by children.

**answer, reply

IV. Translate into Tamil.

1. If you do not hear me, I will call father.

2. If you do not drink the milk, what will mother do?

3. Only if we do not think about him will he be happy. (Use an impersonal construction, with "he" in the dative and "happy" an adverb).

4. If sleep comes to you, call younger brother and play.

5. If you do not give this price, you won't get the fruit.

6. If you don't show us the picture, we won't come (positive converbial) to your house and eat.

பாடம் 21　　பாப்பு, எங்கள் வேலைக்காரி

இதோ, இவள் தான் பாப்பு. எங்கள் வேலைக்காரி. காலையில் எழு மணிக்கு வருவாள். "ஏன், பாப்பு, கொஞ்சம் சீக்கிரம் வரக்கூடாதா? ஒன்பது மணிக்கு சாப்பாடு தயாராக இருக்க வேண்டுமே! அவர் ஆபீசுக்குப் போக வேண்டும். குழந்தைகள் ஸ்கூலுக்குப் போக வேண்டும்." என்பேன். அவ்வளவு தான்! "ஏம்மா! எங்கள் வீட்டில் உங்கள் வீட்டைப் போல கடியாரமா இருக்கிறது? நீங்கள் கொடுக்கும் பத்து ரூபாய் சம்பளத்துக்கு நான் நான்கு மணிக்கே எழுந்திருக்க வேண்டுமா? இப்போது எல்லாருடைய வீட்டிலும் 15 ரூபாய் சம்பளம் கொடுக்கிறார்கள். தீபாவளி, பொங்கல் என்றால் புதுப்புடவை கொடுக்கிறார்கள். நீங்கள் என்னம்மா கொடுக்கிறீர்கள்?" பாப்பு பேசிக் கொண்டே இருப்பாள். நான் தான் அவளை கவனிக்காதவள் போல வேலை செய்ய வேண்டும். நான் ஏதாவது பேசினால், பேச்சு வளரும். ஏன் அந்தத் தொல்லை! அவள் பாத்திரங்களைக் கழுவ ஆரம்பிப்பாள். அது முடிவதற்கு முன்னால், நான் அவளுக்குக் காபி கொடுக்க வேண்டும். மறந்துவிட்டால், "ஏனம்மா! எனக்குக் காலையில் காபி இல்லாவிட்டால் தலைவலி வந்துவிடும்.' என்று உங்களுக்குத் தெரியுமே. கொஞ்சம் காபி கொடுக்கக் கூடாதா?" என்று கேட்க ஆரம்பித்துவிடுவாள். வேலைக்காரர்கள் என்றால் 'பெரிய தொல்லை' என்று சொல்கிறீர்கள்? அது சரியான வார்த்தை இல்லை. பெரிய பெரிய பெரிய தொல்லை.

Basic Vocabulary

வேலைக்காரன்	servant (male). Fem.: வேலைக்காரி
சீக்கிரம்	quickly
தயார்	ready
குழந்தை	child
சம்பளம்	salary
புது, புதிய	new
புடவை	saree
பேச்சு	speech, talk
வளர்	(2) grow, increase; (6) raise, make grow
தொல்லை	nuisance
கழுவு	(3) clean (dishes)
மற	(7) forget

Vocabulary for Story

பாப்பு	(a name)
அவர்	i.e. my husband. Tamil wives are not supposed to say their husbands' names. They generally refer to them as " அவர் ."
ஏம்மா	"Why, அம்மா." அம்மா is used in addressing superior women
கடியாரம்	clock
எழுந்திரு	from எழு + இரு . See 21.2
தீபாவளி	Dipavali, a festival
பொங்கல்	Pongal, a Tamil festival
—ம்மா	(contraction of அம்மா)
கவனிக்காதவன்	one who does not observe or pay attention to. From கவனி (6), notice (see 29.1)

எதாவது	something, anything
பாத்திரம்	dish
முடிவதற்கு முன்னால்	before that finishes
தலைவலி	headache (வலி , pain)
வந்துவிடும்	See 21.6
சரியான	correct
வார்த்தை	word

Grammar

These lessons concern the compound verbs, of which there are four kinds: durative, resultive, middle, and completive. Each is formed by placing a different verb immediately after a converbial to make the compound verb of that converbial. The resultant compound verb is conjugated like a simple verb and has the meaning of the simple verb with the connotation of the compound tense added to it. The durative gives a continuous sense, as "I am doing." The resultive indicates that the action of the verb is now a result: "I have done." The middle is used when the action is done to or for the subject: "I see myself in the mirror." The completive gives the sense that the action of the verb is complete: "I read the (whole) book yesterday." Keep in mind that this description -- and even the more detailed descriptions below -- are rough and do not describe every conceivable instance of every compound verb. The use of these forms and their connotations are quite complex (as the English perfect tense, "have done"). You must form a more perfect sense of them by reading and hearing Tamil spoken.

21.1. The durative. This form is used to translate continuous action and is almost exactly the counterpart of the English continuous tense "was doing," "am doing," "will be doing." It is made by placing கொண்டிரு (class 7) after the converbial. (Note that கொண்டிரு itself is from கொண்டு, the converbial of கொள், + இரு, be). The entire compound is then treated like a class seven verb.

I am sending.	நான் அனுப்பிக்கொண்டிருக்கிறேன்.
He is going.	அவன் போய்க்கொண்டிருக்கிறான்.
We were sleeping.	நாங்கள் தூங்கிக்கொண்டிருந்தோம்.
They will be asking.	அவர்கள் கேட்டுக்கொண்டிருப்பார்கள்.
I was not asking.	நான் கேட்டுக்கொண்டிருக்கவில்லை.

They were not looking.	அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கவில்லை.
She will not be going.	அவள் போய்க் கொண்டிருக்கமாட்டாள்.

To emphasize the continuity of an action, - ஏ is often added after கொண்டு and before இரு .

They keep asking.	அவர்கள் கேட்டுக் கொண்டேயிருக்கிறார்கள்.
Mother keeps looking at that boy.	அம்மா அந்தப் பையனைப் பார்த்துக் கொண்டே-யிருக்கிறார்கள்.

The durative may be used as a converbial, but in a different form. For this construction, the converbial of the simple verb is placed before கொண்டே, as in the following sentences:

அவர் பேசிக் கொண்டே போனார்.
He went talking (the whole time).

அவள் பின்னால் பார்த்துக் கொண்டே போனாள்.
She went looking behind (the whole time).

In general, the converbial may be used for any finite verb, and for any other verb forms where it fits. You would not ordinarily use it with the potential, since one does not say, "you may be asking." Nor is it used with the infinitive or permissive.

21.2. The resultive. This form indicates that the action of the verb is now a result; it often corresponds to the English perfect ("have done," "had done," "will have done.") More exactly, it could be translated "be in the condition of having____." It is made by putting the verb இரு , 7, directly after the converbial of the verb whose action is expressed:

I had done.	நான் செய்திருந்தேன்.
I have done.	நான் செய்திருக்கிறேன்.
He will have done.	அவன் செய்திருப்பான்.
She had not done.	அவள் செய்திருக்கவில்லை.
They will not have done.	அவர்கள் செய்திருக்கமாட்டார்கள்.

The resultive may also be used to translate a "stative," that is, certain verbs that indicate that something is in a certain condition or state. Literally, these sentences could be rendered "be in a condition of having been____."

The door is closed.	கதவு மூடியிருக்கிறது.
The door was closed.	கதவு மூடியிருந்தது.
The door will be closed.	கதவு மூடியிருக்கும்.
The shop was open.	கடை திறந்திருந்தது.

21.3. Special use of the future resultive. In the future, the resultive has another use not described in 21.2. above. This use is to express possible result, usually rendered in English by "would have," or "might have."

அவள் எவ்வளவு கடிதங்கள் எழுதியிருப்பாள்?

How many letters might she have written?

அவன் இதை எப்படிச் செய்திருப்பான்?

How might he have made this?

நீ இதைச் செய்திருப்பாயா?

Would you have done it?

Another example of this special use is the conditional of conjecture, which is described in detail in 35.5. (See also 19.2).

21.4. The middle. This is formed by putting கொள்(1b) after the converbial. Noting that கொள் means "take hold of," James Lindholm has well described the middle as meaning "do X and take or retain [the object of, consequence of, or responsibility for the act]." He continues, "The range of appropriate circumstances calling for its use can include doing things to or for oneself, taking it upon oneself to do something, doing something willfully or idiosyncratically, etc. A sense of this range will gradually develop from observing many individual instances." Sometimes, the verb in the middle has a quite different meaning than the simple verb: வைத்துக்கொள் means "keep," while வை^{6} means "put."

அவள் தன்னைக் கண்ணாடியில் பார்த்துக்கொண்டாள்.

She looked at herself in the mirror. (தன்னை means "herself." -- see 21.5.)

அவர்கள் அதைப் பற்றிப் பேசிக்கொண்டார்கள்.

They spoke about that (among themselves).

அவர்கள் அடிக்கடி சந்தித்துக்கொண்டார்கள்.

They often met.

அவன் ஏன் அங்கே நின்றுகொண்டான்?

Why did he stand there (without ulterior motive)?

அவள் குழந்தைகளைப் பார்த்துக்கொண்டாள்.

She looked after the children.

21.5. The iterative pronoun. This pronoun is, in the singular, தான் with the oblique தன் . The plural, which is less common, is தாம் (oblique, தம்), or தாங்கள் (oblique தங்கள்). Note the dative of தான் and தாம்: தனக்கு and தமக்கு . Lindholm has described this word well: "It is used, in opposition to அவன் , அவள் , or அது , [or அவர்கள் or அவர்], in order to make clear that the speaker is referring to the same person or thing that is also (explicitly or implicitly) the subject of the main verb in the sentence...." The English sentence "She gave the letter to her father" could refer to a different "she" and "her" or the same. In Tamil, if they are different, the sentence would be

அவள் கடிதம், அவள் அப்பாவுக்குக் கொடுத்தாள்.

If they are the same, it would be

அவள் கடிதம், தன் அப்பாவுக்குக் கொடுத்தாள்.

(Note, however, that if they are the same, the தன் may simply be omitted). Lindholm points out that the distinction between தான் and அவன் is made regardless of how the pronoun functions in the sentence, even when it is subject (see 34.1).

அவள் சாப்பிட வேண்டும் என்று அவள் அப்பாவுக்குச் சொன்னாள்.

She told her father that she (i.e. someone else) needed to eat.

There is only one iterative pronoun regardless of gender. There is no corresponding iterative pronoun for "I," "we," or "you."

The plural form தாங்கள் is often used for the second person when one wishes to show extreme respect. The second person plural ending of the verb is used with it:

தாங்கள் என்ன விரும்புகிறீர்கள்?
தங்களுக்கு என்ன வேண்டும்?
"What do you wish?"

21.6. The completive. This is made by putting விடு (4) after the converbial. விடு means "leave," and Lindholm remarks that the completive means "'Do X and leave or let go of [the object of, or any further involvement in the act, resulting in a significantly altered state of affairs]." He further remarks, "The 'altered state of affairs' may include such cases as the completion of a task, fulfillment of an expectaion, transition from one state to another, etc. A sense of the range of its appropriate use must come from observing many individual instances. When used with reference to an event in the immediate past, it may correspond to the English present perfect ('have ___ed')." One might add that in many instances, the completive is translated into English by a simple verb.

நான் அந்தப் புஸ்தகத்தைப் படித்துவிட்டேன்.
I read (and completed) the book.

அவர் வந்துவிட்டார்.
He has (just now) come.

Note that virtually all verb forms may be put in the definitive, with the exception of the negative conditional and (usually) the other compound verbs.

Grammar Summary

21.1S. The durative. "Be ___ing."

Converbial + கொண்டிரு (7).

To emphasize the continuity of an action: converbial + கொண்டேயிரு

Used as a converbial: converbial + கொண்டே

21.2S. The resultive. "Be in the condition of having ___ed," "Be in the condition of having been ___ed."

Converbial + இரு (7).

21.3S. Special use of the future resultive. Expresses possible result, as "would have," "might have."

21.4S. The middle. Used for action done to or for the subject.

Converbial + கொள் (1b).

21.5S. The iterative pronoun. Used when a 3rd person pronoun is (explicitly or implicitly) also the subject of the main verb in the sentence.

Singular: தான் (nom.), தன் (obl.), தனக்கு (dat.)
Plural: தாங்கள் (nom.), தங்கள் (obl.), தங்களுக்கு (dat.)
தாம் (nom.), தம் (obl.), தமக்கு (dat.)

21.6S. The completive. Indicates that the action of the verb is complete. Converbial + விடு (4).

EXERCISES.

I. Change positive to negative and vice versa.

1. மறந்து கொண்டிருந்தேன்.
2. எழுந்துகொண்டிருக்கமாட்டேன்.
3. விளையாடிக் கொண்டிருக்கும்
4. ஆரம்பித்துக் கொண்டிருக்கமாட்டான்.
5. திறந்து கொண்டிருக்கவில்லை.
6. நின்றுகொண்டிருக்கிறார்கள்.
7. பார்த்துக்கொண்டிருக்கவேண்டாம்

II. Match the following.

1. நான் பாட	தெரியவில்லை
2. அவர்	பேசிக்கொண்டிருந்தது
3. எனக்கு	பாடிக்கொண்டிருந்தார்கள்
4. அவர்கள்	வந்துகொண்டிருக்கவில்லை
5. அது	வேண்டாம்

III. Fill in the blanks.

1. நான் சம்பளம் ____________. (வாங்கு^{3} pres. neg.)
2. வேலைக்காரி காலையில் __________? (பாடு^{3} past cont.)
3. நீங்கள் பாத்திரம்* __________? (கழுவு past)
4. அவர் பாடம் ____________. (ஆரம்பி fut. neg.)
5. அது சாப்பாடு ____________. (சாப்பிடு pres. cont.)
6. அவள் நான்கு மணிக்கு கதை ______. (சொல் cont. potential)
7. அவர்கள் வேலைக்கு __________. (போ pres. cond.)

---

*dish

8. நீங்கள் ஏன் அவருக்கு சொல்லி ________? (கொடு past. neg.)

9. அவர்களுக்கு நான் கடிதம் ________ வேண்டும். (எழுது^{3})

10. அவர் அங்கே ________. (படி^{6} permissive cont.)

IV. Translate into Tamil.

1. What are you doing? You must not play outside.

2. If those students are studying their lessons, you should be studying also.

3. Tell father that he should be eating.

4. He keeps thinking that her letter will come.

5. The students forgot about their lessons and went to a movie (சினிமா).

6. If you buy your servant a new saree, she will come and say thank you.

பாப்பு வீட்டைப் பெருக்கும்போது, ரேடியோவில் அவளுக்குப் பிடித்தமான சினிமாப் பாட்டு வந்தால் போதும். அங்கேயே நின்றுவிடுவாள். நான் அவளிடம், "பாப்பு, கொஞ்சம் சீக்கிரம் பெருக்கேன்," என்று மெதுவாக சொல்வேன். "எம்மா! இந்தப் பாட்டு முடியட்டுமே! என்ன அவசரம்?" என்பாள். எப்படியோ வேலை ஆகட்டும் என்று நினைத்துக்கொண்டு, பேசாமல், இருந்துவிடுவேன்.

பாப்பு துணி துவைத்தால், சத்தம் வீட்டுக்கூரையை கிழித்துக்கொண்டு, மேலே கிளம்பும். பல சமயம் துணிகள் கிழிந்துவிடும். "ஏன் இப்படித் துவைக்கிறாய்?" என்று கேட்டால், "என்னம்மா, சின்ன சோப்பு தானே கொடுக்கிறீர்கள்? நன்றாக அடித்துத் துவைத்தால் தானே அழுக்குப் போகும்." என்பாள். என்னால் எல்லா வேலைகளையும் எப்படி செய்யமுடியும்? அதனால் இது போல, சின்ன குறைகள் எல்லாம் நான் பொறுத்துக் கொள்ளத் தான் வேண்டும்.

நான் என்றாவது "பாப்பு, இன்றைக்குச் சீக்கிரம் வந்துவிடு. நாங்கள் சினிமாவுக்குப் போகலாம், என்று நினைத்துக்கொண்டிருக்கிறோம்" என்று சொல்வேன். உடனே அவள் முகம் மாறும். "எந்த சினிமாவுக்கு அம்மா போகிறீர்கள்?" என்று ஒரு கெஞ்சலோடு கேட்பாள். எனக்குப் புரிந்துவிடும். அவளையும் சினிமாவுக்கு நாங்கள் கூட்டிக்கொண்டு போக வேண்டும்.

என்னவோ, போங்கள், வேலைக்காரி இல்லாமல் வேலை நடக்காது. வேலைக்காரி இருந்தால், எத்தனையோ தொல்லை. என்ன செய்வது?

Basic Vocabulary

அவசரம்	hurry (noun)
கிழி	(6) rip, tear; (2) be ripped
மேலே	up, on, upwards, onwards
சமயம்	time, occasion
அடி	(6) beat, hit, strike
அழுக்கு	dirt
குறை	shortcoming, fault
பொறு	(6) bear, put up with
உடனே	at once
முகம்	face

Vocabulary for Story

பெருக்கு	(3) sweep.
பெருக்கும் போது	when (she) sweeps (see 24.5)
பிடித்தமான	pleasing
பெருக்கேன் ?	(after imperative): "Why don't you (sweep)!"
எப்படியோ	somehow
நினைத்துக்கொள்	(see 21.4)
துணிகள்	clothes
துவை	(6) wash (clothes)
என்றாவது	some day
மலர்	(2) flower
கெஞ்சல்	pleading, cajoling
கூட்டிக்கொள்	(1b) take along with
என்னவோ	for whatever reason
எத்தனையோ	how much!
என்ன செய்வது	what to do? What can one do?

EXERCISES

I. Change to Middle.

1. மூடியிருக்கிறேன்
2. பிடித்திருந்தது
3. நினைத்திருக்கவில்லை
4. உட்கார்ந்திருப்போம்
5. சொல்லியிருந்தால்
6. கிழிந்திருந்து
7. போயிருக்காமல்
8. வந்திருக்கிறான்
9. கிளம்பியிருப்பார்கள்
10. அடித்திருந்தேன்

II. Change to perfect.

1. கேட்டுக் கொள்ளவில்லை.
2. பேசிக்கொண்டோம்.
3. பெய்து கொண்டிருந்தது.
4. புரிந்து கொள்வோம்
5. வைத்துக் கொண்டிருக்கமாட்டேன்.
6. தேடிக்கொண்டான்.
7. சமைத்துக்கொண்டிருக்கவில்லை
8. குளித்துக்கொண்டார்கள்
9. பண்ணிக்கொள்வான்
10. கழுவிக்கொள்ளமாட்டீர்கள்

III. Fill in the blanks, using the following adverbs.

சீக்கிரமாக, அவசரமாக, சத்தமாக, மெதுவாக, வேகமாக

1. ஏன் அவள் ________ கழுவுகிறாள்?
2. நீங்கள் அங்கே ________ ஓடுகிறீர்களா?
3. அவன் அதை ________ சொன்னான்.
4. அவள் கடிதத்தை ________ எழுதுகிறாள்.
5. அவர்கள் ________ போகிறார்கள்.

EXERCISES

IV. Fill in the blanks with compound verbs.

1. அவர் கடிதம் ______________ .(எழுது)
2. நாங்கள் அங்கே ______________ .(உட்கார்)
3. நீங்கள் சாதம் ______________ .(சமை)
4. உங்களுக்கு அந்த சினிமா __________ .(பிடி)
5. நீங்கள் எங்கே ______________ .(நில்)

DIRECTIONS

மேற்கு	வடக்கு	தெண்மேற்கு	வடமேற்கு
கிழக்கு	தெற்கு	தெண்கிழக்கு	வடகிழக்கு

V. Translate into Tamil.

1. If you sit there like that, who will listen to (hear) you?
2. She got up, washed her face, and went to school.
3. I read the book (completely) and gave it back (திரும்பி) to the teacher.
4. Father must be thinking about us.
5. He tore up (completive) the saree and said, "whose is this?"
6. Don't look at (completive) me -- I am bathing.

பாடம் 23 வண்ணான்

அதோ, போகிறான் பாருங்கள், அவன் தான் எங்கள் வண்ணான். அவன் பெயர் பாலு. அவன் வந்த போது, "ஒவ்வொரு திங்கட்கிழமையும் டாண்-ணு இங்கே வந்து நிற்பேன்" என்று சொன்னான். ஆனால் இரண்டு வாரத்துக்கு ஒரு தடவை வந்தால், அதுவே அதிகம். ஆனால் வரும் போதெல்லாம், "பாருங்கள் அம்மா, இன்றைக்கு என்ன கிழமை, திங்கட்கிழமை, இல்லையா? அடுத்த திங்கட்கிழமை டாண்-ணு வந்துவிடுவேன்" என்பான். அது மட்டுமா? போன தடவை 50 துணி போட்டிருந்தால், 40 அல்லது 45 துணி தான் வந்திருக்கும். "ஏன், பாலு, இதில் என் கணக்கு நோட்டில் 50 துணி எழுதியிருக்கிறேன். 45 தானே இருக்கிறது? மீதி எங்கே?" என்று கேட்டால், "இல்லை, அம்மா, அந்த துணிகள் வீட்டில் தான் இருக்கும். அந்த வாரம் அதையும் சேர்த்துக்கொண்டு - வந்துவிடுகிறேன்." என்பான். ஆனால் பொதுவாக தொலைந்த துணிகள் திரும்பி வந்தால், அது ஒரு பெரிய அதிசயம் தான்.

துணிகளை நான் உடுத்துவேன். அங்கங்கே சில துணிகள் கிழிந்திருக்கும். "என்ன, பாலு, பார்த்துத் துவைக்கக்கூடாதா?" என்று கேட்டால், "என்ன அம்மா, நீங்கள் கிழிந்த துணியை போட்டிருப்பீர்கள். மறந்துவிட்டீர்கள் போலிருக்கிறது" என்பான். நான் வேறு வண்ணானைப் பார்த்தால் என்ன? என்று கேட்கிறீர்கள்? அதை ஏன் கேட்கிறீர்கள்! அதனால், இவனை விட மோசமாக ஒருவன் கிடைத்தால், என்ன செய்வது? "ஊமையனுக்கு உளறுவாயன் சண்டப்பிரசண்டம்" இல்லையா?

Basic Vocabulary

ஒவ்வொரு	each
மட்டும்	only (adverb). (Note that the adjective is ஒரே)
துணி	clothes
புறப்படு	(4) start, start out
சேர்	(2) reach; (6) join
பொது	general, public
தொலை	(2) be lost (6) lose
துவை	(6) wash (clothes)
மோசம்	bad
சொந்தம்	wealth, property; something that belongs to one

Vocabulary for Story

வண்ணான்	washerman
வந்தபோது	when he came (see 24.5)
திங்கட்கிழமை	Monday
டாண்-ணு	(literally: with the sound டாண்). So that you can count on me. From டாண் என்று.
வரும்போதெல்லாம்	whenever (he) comes. (see 24.5)
கிழமை	day of the week
மீதி	remainder
தொலைந்த	which were lost (see 24.1, 2)
அதிசயம்	miracle
உடுத்து	(3) put on, wear
அங்கங்கே	here and there
கிழிந்த	ripped (24.1, 2)

போல் இருக்கிறது	it seems that...
இவனைவிட மோசமாக	worse than him
என்ன செய்வது	what to do? What can one do?
"ஊமையனுக்கு, உளறுவாயன் சண்ட- பிரசண்டம்"	(proverb): better someone who talks too much than someone who can't talk at all.

EXERCISES

I. Change to negative.

சேர்ந்துவிட்டோம்
விளையாடிக் கொண்டிருக்கிறார்கள்
மறந்திருந்தான்
துவைத்துவிட்டால்
நின்றுகொண்டாள்

செய்துகொண்டிருக்கும்
கொடுத்திருந்தான்
இருந்துவிடும்
எழுந்து கொண்டேன்
திரும்பியிருந்தால்

II. Change to positive.

பெய்திருக்கவில்லை
தெரிந்துவிடாது
கேட்டுக்கொண்டிருக்கமாட்டான்
வாங்கிக்கொள்ளவில்லை
எழுந்துவிடவில்லை

பார்த்திருக்கமாட்டாது
சாப்பிட்டுவிடவில்லை
பொறுத்துக்கொள்ளவில்லை
விற்றிருக்கவில்லை
எழுதிக்கொண்டிருக்கவில்லை

III. Fill in the blanks.

1. அவர் வந்து __________ போனார். (போக conv. res.)
2. நான் அதை __________. (வாங்கு fut. neg.)
3. ரயில் இப்போது __________. (புறப்படு fut. middle)
4. அம்மா அதை __________. (பார் past res.)
5. நீங்கள் கடிதம் __________. (அனுப்பு past. perf.)
6. நீ எப்போது __________? (திரும்பு fut.)
7. அவர் அதை __________, மிகவும் கஷ்டம். (மற cond.)
8. அவர்கள் அந்த சாமானை* __________. (தொலை neg. res.)
9. அவள் மிகவும் பணம் __________. (கேள் past perf.)
10. நீங்கள் மோசமாக கணக்கு** __________? (போடு fut. res.)

---

*thing, object, luggage
*math, calculations

Some Important words for days, months, etc.

1. திங்கட்கிழமை
2. செவ்வாய்க்கிழமை
3. புதன்கிழமை
4. வியாழக்கிழமை
5. வெள்ளிக்கிழமை
6. சனிக்கிழமை
7. ஞாயிற்றுக்கிழமை.

1. சித்திரை
2. வைகாசி
3. ஆனி
4. ஆடி
5. ஆவணி
6. புரட்டாசி
7. ஐப்பசி
8. கார்த்திகை
9. மார்கழி
10. தை
11. மாசி
12. பங்குனி.

நாள்
கிழமை
தேதி
வாரம்
மாதம்
வருஷம்.

IV. Translate into Tamil.

1. She saw herself and thought, "Who is this?"
2. If the store is open, we will go in and buy fruits.
3. They talked (among themselves) and (then) told the servant to come.
4. If you look after these children, I will give you a salary.
5. She forgot (completive) all her lessons and came (வந்து சேர்) home.
6. This sari is dirty. Wash it without ripping it and bring it to me.

பாடம் 24 சென்னைக் கடற்கரை

இது தான் சென்னைக் கடற்கரை. இது ஏழு மைல் நீளம் இருக்கிறது. மிகவும் அழகாக இருக்கிறது என்கிறீர்களா? வாருங்கள், இங்கே நடந்து பார்க்கலாம்.

இவர் தான் கடலை, சுண்டல் விற்கும் மனிதர். "ஸார், இப்போது தான் ஸார் கடலை, சுண்டல் பண்ணினேன். ஜோராக இருக்கும், வாங்குங்கள்" என்கிறார். எப்போது பண்ணினார் என்று யாருக்குத் தெரியும்? கொஞ்சம் வாங்கிப் பார்க்கலாம். சாப்பிட்ட பிறகு சொல்லுங்கள். நன்றாக இருக்கிறதா? ஐயையோ, மிகவும் காரமாக இருக்கிறதா? எனக்கு மறந்துவிட்டது. உங்களுக்குக் காரமாக சாப்பிட்டுப் பழக்கம் இல்லையா? பரவாயில்லை, தண்ணீரில் எறிந்து விடுங்கள். மீன்கள் சாப்பிட்டு விடும்.

அங்கே பாருங்கள், தண்ணீரில் விளையாடும் குழந்தைகளை! ஆமாம், கடல் தண்ணீரில் வரும் அலைகளில் விளையாட குழந்தைகளுக்கு மிகவும் ஆசை. உங்கள் நாட்டிலும் அப்படித் தான் என்கிறீர்களா? உண்மை தான். ஓ! தண்ணீரில் நிற்கும் குழந்தைகளைப் பார்த்தால், உங்களுக்கும் அலைகளில் நிற்க ஆசை வருகிறதா? வாருங்கள், கொஞ்சம் நின்று பார்க்கலாம். சுறா மீன் வரும் என்று பயமாக இருக்கிறதா? பரவாயில்லை. ஒரு நிமிஷம் மட்டும் நின்று விட்டு, வெளியே வந்துவிடுங்கள்.

Basic Vocabulary

கடல்	ocean
கரை	shore. கடற்கரை ocean shore, beach
முடி	(2) be finished; (6) finish
பழக்கம்	habit, custom(also வழக்கம்)
தண்ணீர்	water
மீன்	fish
நுழை	(2) enter, enter into
அலை	wave (noun)
ஆசை	desire (here used like இஷ்டம்)
உண்மை	truth
நிமிஷம்	moment; minute

Vocabulary for Story

சென்னை	Madras city, *Madras State*.
நீளம்	length
கடலை	peanuts
சுண்டல்	boiled and spiced dahl
சாப்பிட்ட பிறகு	(see 24.5)
ஐயையோ	(exclamation of despair)
எறி	(2) throw
சுறா மீன்	shark

Grammar

24.1. The formation of the positive participle. The past participle is made by adding - அ to the past stem. Class-3 verbs may also change the -இன் of the past stem to -இய் - and then add - அ (but note that irregular class-3 verbs must make their past participle from the unchanged past stem). The present participle is made by adding - அ to the present stem. The future participle is formed by adding - உம் to the *infinitive stem.*

CLASS AND ROOT			PAST PARTICIPLE	PRESENT PARTICIPLE	FUTURE PARTICIPLE
1a	செய்	do	செய்த	செய்கிற	செய்யும்
1b.	கொள்	take	கொண்ட	கொள்கிற	கொள்ளும்
1c.	வெல்	conquer	வென்ற	வெல்கிற	வெல்லும்
2.	உட்கார்	sit down	உட்கார்ந்த	உட்கார்கிற	உட்காரும்
3.	வாங்கு	buy	வாங்கின	வாங்குகிற	வாங்கும்
4.	சாப்பிடு	eat	சாப்பிட்ட	சாப்பிடுகிற	சாப்பிடும்
5a.	உண்	eat	உண்ட	உண்கிற	உண்ணும்
5b.	தின்	eat	தின்ற	தின்கிற	தின்னும்
5c.	கேள்	ask, hear	கேட்ட	கேட்கிற	கேட்கும்
5d.	வில்	sell	விற்ற	விற்கிற	விற்கும்
6.	பார்	see	பார்த்த	பார்க்கிற	பார்க்கும்
7.	நட	walk	நடந்த	நடக்கிற	நடக்கும்
IRREGULAR VERBS					
2.	வா	come	வந்த	வருகிற	வரும்
3.	போ	go	போன	போகிற	போகும்
3.	சொல்	say	சொன்ன	சொல்கிற	சொல்லும்
5d.	நில்	stand	நின்ற	நிற்கிற	நிற்கும்
5a.	காண்	see	கண்ட	காண்கிற	காணும்

3.	ஆ, ஆகு	become	ஆன	ஆகிற	ஆகும்
2?	சா	die	செத்த	சாகிற	சாகும்

24.2. The use of the participle. The participle is used where English has a participle ("the man *writing* the book") or an adjectival relative clause ("the man *who writes* the book"). The relationship between the participle and the noun it modifies (and which in Tamil almost always immediately follows it) may be of several kinds. The noun modified may be the logical subject of the participle, its logical object, its logical indirect object, something on or in which its action is performed, something by which its action is performed, or it may stand in some other logical relationship to the participle.

1. Logical direct object.

அந்த மனிதன் பார்த்த அம்மா.

The lady whom that man saw.

அந்த மனிதன் பார்க்கிற அம்மா.

The lady whom that man sees.

2. Logical subject.

அந்த மனிதனைப் பார்க்கிற அம்மா.

The lady who sees that man.

3. Logical instrumental.

நான் நாயை அடித்த குச்சி.

The stick which which I hit the dog.

4. Logical locative.

அந்த மனிதன், அந்த அம்மாவைப் பார்த்த தெரு

The road on which that man saw the lady.

5. Logical indirect object.

நான் பணம் கொடுத்த மனிதன்.

The man to whom I gave the money.

You will notice that in this construction, all of the words have the same form and order that they would have if they were an independent clause except the verb, whose form changes to the requisite participle, and the word modified, whose case changes to what is demanded by the main sentence and which follows the participle. As an independent clause, the first sentence above would be "The man saw the lady": அந்த மனிதன் அந்த அம்மாளைப் பார்த்தான். To change this to "The lady whom the man saw," you take "lady" out of the independent clause, take it out of the accusative, place it after the verb, and change the verb to a past participle: அந்த மனிதன் பார்த்த அம்மா. The fourth sentence would be "The man saw the lady on the road":

அந்த மனிதன், அந்த அம்மாளைத் தெருவில் பார்த்தான்.

Here, "on the road" is taken out of the locative and placed after the verb, and the verb is made into a past participle:

அந்த மனிதன், அந்த அம்மாளைப் பார்த்த தெரு.

Remember that in Tamil, the participle must be the last word of its clause (except for the noun modified, which immediately follows the participle.)

The noun modified, that is the noun or pronoun immediately after the participle, is inflected according to the main sentence. In the sentence, "I came to the road on which that man saw the lady," "road" must be put in the dative as the place to which the coming takes place:

அந்த மனிதன், அந்த அம்மாளைப் பார்த்த தெரு.

In "I saw the lady who saw the man," the word "lady" must be placed in the accusative as the direct object of "I saw":

மனிதனைப் பார்த்த அம்மாளை, நான் பார்த்தேன்.

It is vitally important to understand this principle, as otherwise you will be likely to put the modified noun into the case that is its logical relationship with the participle. Always remember that this logical case is not expressed, but only implied.

24.3. Use of the future of the participal, verbal noun, and participial noun. For the participal, the verbal noun (27.1), and the participial noun (29.1), formal Tamil generally uses the future form for both present and future action. Spoken (informal) Tamil uses the present form for present action and the infinitive + போ (go), which placed into the requisite participal, verbal noun, or participial noun *in the present.* This form is analogous to the English usage "The man who is going to come tomorrow," that is,

நாளைக்கு வரப் போகிற மனிதன்.

In formal Tamil, this would be நாளைக்கு வரும் மனிதன்.

24.4. Formation of the negative participle. This form is made quite easily by adding - ஆத to the *infinitive stem.* Unlike the positive participle, it does not distinguish tenses. It is used like its positive counterpart.

CLASS AND ROOT			INFINITIVE STEM	NEGATIVE PARTICIPLE
1a.	செய்	do	செய்ய் –	செய்யாத
1b.	கொள்	take	கொள்ள் -	கொள்ளாத
1c.	வெல்	conquer	வெல்ல் -	வெல்லாத
2.	உட்கார்	sit down	உட்கார் -	உட்காராத
3.	வாங்கு	buy	வாங்க் -	வாங்காத
4.	சாப்பிடு	eat	சாப்பிட் -	சாப்பிடாத
5a.	உண்	eat	உண்ண் -	உண்ணாத
5b.	தின்	eat	தின்ன் -	தின்னாத
5c.	கேள்	ask, hear	கேட்க் -	கேட்காத
5d.	வில்	sell	விற்க் -	விற்காத
6.	பார்	see	பார்க்க் -	பார்க்காத
7.	நட	walk	நடக்க் -	நடக்காத

24.5. Participle + postpositions. Several words can be placed after a participle to make a clause meaning "when," "as soon as," "after," and "before."

The word போது or பொழுது is put after a participle to mean "when":

When I went to the store நான் கடைக்குப் போனபோது

When I go to the store நான் கடைக்குப் போகிறபோது

(or, in more formal Tamil, நான் கடைக்குப் போகும்போது.

The word உடனே or உடன் is placed after a past participle to mean "as soon as":

As soon as I came inside நான் உள்ளே வந்த உடனே

The word பின்னால், பின், பின்னே, பின்பு, அப்புறம், பிறகு is placed after a past participle to mean "after."

After I sat down நான் உட்கார்ந்த பின்னால்

The word முன்னால் முன், முன்பு, முன்னே is placed after a future (or present) participle to mean "before."

Before he sees me அவன் என்னைப் பார்க்கும் முன்

The word படி or ஆறு may be put after a participle to mean "as," "in accordance with," "so that":

I did as he said. அவன் சொன்னபடி, நான் செய்தேன்.

I will do as he says. அவன் சொன்னபடி, நான் செய்வேன்.

I spoke so that he heard. அவன் கேட்குமாறு, நான் பேசினேன்.

In formal Tamil, the word பொருட்டு may be placed after a future participle to mean "in order to":

அதை வாங்கும்பொருட்டு, அவன் கடைக்குப் போனான்.

He went to the store in order to buy that.

Grammar Summary

24.1S. The formation of the positive participle.

Past participle: past stem + - அ

Class-3 verbs may also change the -இன் of the past stem to -இய் and then add - அ

Present participle: past stem + - அ

Future participle: infinitive stem + - உம்

24.2S. The use of the participle. Review 24.2 above.

24.3S. Use of the future of the participal, verbal noun, and participial noun.

In formal Tamil, the future of these verbal forms is used for both present and future action.

In spoken Tamil, the present forms are used for present action, while the future is inf. + போ , which takes present forms.

24.4S. Formation of the negative participle.

Infinitive stem + - ஆத .

24.5S. Participle + postpositions.

When: participle + போது or பொழுது

As soon as: past participle + உடனே or உடன்

After: past participle + பின்னால், பின்பு , or பின் , பின்னே, பிறகு, அப்புறம்

Before: future participle (in formal Tamil) + முன்னால் or முன், முன்பு, முன்னே

"As," "in accordance with," "so that": participle + படி, ஆறு

"In order to" (formal Tamil): future participle + பொருட்டு

EXERCISES

I. Participles

1. Change to past and future participles.

சொல்கிற, குளிக்கிற, எடுக்கிற, இருக்கிற, வருகிற

2. Change to present and future participles.

உட்கார்ந்த, பாடின, படித்த, எழுதின, கூப்பிட்ட

3. Change to present and past participles.

போகும், வாங்கும், கேட்கும், பார்க்கும், விளையாடும்

II. Fill in the blanks with participles.

1. நான் ________ கடிதகளை. (பார்)
2. அங்கே ________ மனிதன். (நில்)
3. அவனோடு ________ நாய். (விளையாடு)
4. உங்களிடம் ________ பெண். (பேசு)
5. எனக்கு பணம் ________ அம்மா. (கொடு)

III. Fill in the blanks.

1. நான் பார்த்த பெண்ணை உங்களுக்கு ______? (தெரி)
2. உங்களால் முடிந்த காரியத்தை, நீங்கள் ______. (செய் imp.)
3. அவர் ______, நீங்கள் பேசுவீர்களா? (வா cond.)
4. இங்கே ______, அங்கே வந்தால், பரவாயில்லை (நில் conv.)
5. நீங்கள் ______ சாதம், இதோ இருக்கிறது (சாப்பிடு past pa
6. ஒரு நிமிஷத்தில் நான் அங்கே ______. (ஓடு past)

EXERCISES

7. என் நாடு ________ .
8. அவர் மட்டும் அங்கே ________ ? (நில் middle)
9. நான் ________ வேண்டும். (பாடு)
10. அவருக்கு தமிழ் ________ ?

ENTERTAINMENTS

கச்சேரி
சினிமா (திரைப்படம்)
நாடகம்
நாட்டியம்

Village entertainments
கதாகாலட்சேபம்
கூத்து
வில்லுப்பாட்டு

IV. Translate into Tamil.

1. The man whom I saw (see, will see).
2. The road where (i.e. on which) I sat (sit, will sit).
3. The man who gave (gives, will give) me four rupees.
4. I, to whom the servant gave the money.
5. The pen with which I wrote (write, will write) the book.
6. I saw the lady (அம்மா) who asked (asks, will ask) me about the book.
8. I saw the lady whom I asked about the book.
9. The lady who asked me about the book saw me.

பாடம் 25 சென்னைக் கடற்கரை

"இந்தக் கடல் தண்ணீரில் வெகு நேரம் விளையாட ஆசை தான் உங்களுக்கு" – ஆனால் இங்கே பார்க்க மிகவும் இருக்கிறது. வாருங்கள், மேலே நடக்கலாம்"

"அங்கே என்ன கூட்டம்? அது என்ன பாட்டு?" என்கிறீர்களா? ஆமாம், அங்கே ஒரு ரேடியோ பாடுகிறது. எங்கள் நாட்டில் எல்லோருடைய வீட்டிலும் ரேடியோ இல்லை. அதனால் ஜனங்கள் சாயங்காலம் பீச்சுக்கு வந்து, இந்த ரேடியோவில் செய்தி, பாட்டு எல்லாம் கேட்பார்கள். இந்த ரேடியோவை அரசாங்கம் இங்கே வைத்திருக்கிறது. இதைப் போல, பல ரேடியோக்கள், பல பொது இடங்களில், பார்க்குகளில் இருக்கின்றன. இங்கே உட்கார்ந்து நாமும் ஒரு பாட்டு கேட்கலாமா? "என்ன இது, ஜிங்குடி, ஜிங்குடி ஜிங்" என்கிறீர்களா? ஆமாம், எங்கள் சினிமாப் பாட்டு எல்லாம் இப்படித் தான் இருக்கும். உங்களுக்குப் பிடிக்கவில்லையா? உங்களுக்குக் கர்நாடக சங்கீதம் தான் பிடிக்குமா? உங்கள் நாட்டில் கூட ராக் அன் ரோல் போல சங்கீதங்கள் இருக்கின்றன, இல்லையா? அது போலத் தான் இது. சரி, பரவாயில்லை. வாருங்கள், வேறு இடத்துக்குப் போகலாம்.

"அங்கே இருக்கிற படகுக்குக் கீழே ஒரு பையனும், பெண்ணும் உட்கார்ந்து ரகசியமாய்ப் பேசுகிறார்கள். ஏன்?" என்று கேட்கிறீர்களா? எங்கள் நாட்டில் ஒரு பையனும், பெண்ணும் சேர்ந்து வெளியே போகக்கூடாது. இப்படித் தான் சந்திக்க வேண்டும். இந்தியா எப்பொழுதும் மாறுது. என்ன செய்வது? வாருங்கள், அதோ, ஐஸ்கிரீம் கடை இருக்கிறது. அங்கே போகலாம்.

Basic Vocabulary

விழு	(2) fall
செய்தி	news
பல	many
பின், பின்னால்	after (after past part.); behind, after (after dative or obl.)
கூட	also, even; (after a noun in the oblique) along with
கீழே	under, beneath, downwards
மாமா	uncle (often used by young people to elder males)
சந்தி	(6) meet
மாறு	(3) change (intransitive)

Vocabulary for Story

வெகு	a lot, (here) a long
ஜனங்கள்	people
சாயங்காலம்	evening
அரசாங்கம்	government
கர்னாடக சங்கீதம்	Carnatic music
சங்கீதம்	music
படகு	boat
ரகசியம்	secret
என்ன செய்வது?	what to do? What can one do?

EXERCISES

I. Change to the negative.

பாடும், கேட்கும், வந்துகொண்டிருந்த, விற்ற, பேசிவிட்ட
நின்றிருந்த, சொல்லும், உட்கார்கிற, எடுக்கும், பார்த்த

II. Change to the positive.

1. மாறாத பெண்
2. பாடாத பாட்டு
3. குளிக்காத மனிதன்
4. தேடாத
5. விழாத
6. நினைக்காத காரியம்
7. கிழியாத சட்டை
8. தூங்காத நாய்
9. எழுதாத கடிதம்
10. பெய்யாத மழை

III. Expand the sentences by adding participial phrases.

1. அந்த மனிதன் என் அப்பா.
2. பெண் என் மகள்.
3. பையன் என் மகன்.
4. ஹோட்டலில் நீங்கள் சாப்பிட்டீர்களா?
5. பாட்டில் தப்பு இருந்ததா?

IV. Fill in the blanks.

1. எனக்கு காபி ________.
2. அவன் ஸினிமாவுக்கு என்னோடு ________. (வா potential)
3. அவர் இதைக் ________, நான் சந்தோஷப்படுவேன்.*
(தா cond.)

---

*be happy

EXERCISES

4. நான் ______ புஸ்தகம், தமிழ் புஸ்தகம். (படி part.)
5. எனக்குத் ______ அந்த சிநேகிதரை உங்களுக்குத் தெரியுமா? (தெரி)
6. நான் ______, நல்லது* இல்லை. (பய. cond.)
7. அவன் ஆறுமணிக்கு ______, இப்போது எழுந்தான். (தூங்கு)
8. இந்த அரசாங்கம்** எப்போதும்*** ______. (மாறு. neg. fut.)
9. அந்த சங்கீதம்**** ______ இருக்கிறதா? (adverb)
10. நீங்கள் அதிக நேரம்***** ______ பரவாயில்லை. (பேசு. cond.)

ORNAMENTS

நகை
தோடு
கம்மல்
மூக்கத்தி
சங்கிலி
நெக்லஸ்
வளையல்
கொலுசு
மோதிரம்

V. Translate into Tamil.

1. I saw the man who did not come here.
2. You should go on the road where Maṇi is not going.
3. If you study the lesson I did not study, tell me about it.
4. If you do not come, how will you see the book that has not been opened.
5. I will not read the letter that he did not write.
6. Did you hear the news about the man who talked in the meeting?

---

*a good thing

**government

***always

****music

*****for too much time

பாடம் 26 பாட்டு வாத்தியார்

இந்தியாவில் நீங்கள் ஒரு பிராமணப் பெண்ணாகப் பிறந்துவிட்டீர்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள்! கட்டாயம் பாட்டு கற்றுக்கொள்ளத் தான் வேண்டும். தினமும் காலையில் ஏழு மணிக்கு பாட்டு வாத்தியார் வந்துவிடுவார். ஜரிகைத் துண்டு, காதில் கடுக்கன், வாயில் வெற்றிலையின் சிவப்பு ---- "ஜானகி, வா, வா, வந்து உட்கார்; நேற்று சொல்லித் தந்த கீர்த்தனை ஞாபகம் இருக்கிறதா? அம்மாவும் கொஞ்சம் வந்து, உட்கார்ந்து கேட்கட்டும். சீக்கிரம் பாடத் தொடங்கு" என்பார். ஜானகி என்ன செய்து கொண்டிருந்தாலும் சரி - அவள் தாயோடு கொஞ்சிக்கொண்டிருக்கலாம். அன்றைக்கு பத்து மணிக்கு எழுத வேண்டிய கணக்குப் பரீட்சைக்குப் படித்துக்கொண்டிருக்கலாம். பாதி காபி, இன்னும் குடிக்காமல் இருக்கலாம். தம்பியோடு தலையணை சண்டை போட்டுக் கொண்டிருக்கலாம். எல்லாவற்றையும் விட்டுவிட்டு, வாத்தியார் முன்னால் வந்து, பாயில் உட்கார்ந்து, பாட வேண்டும்.

பாட்டில் ஏதாவது தவறு வந்தால், "ஜானகி, நாளைக்கு நான்கு பையன்கள் உன்னைப் பார்க்க வருவார்கள். நீ இப்படி தப்பும், தவறுமாகப் பாடினால், உன் மாமியார், 'இதுக்கு ஒன்றும் வராது போல் இருக்கிறது. எந்தப் பாட்டு வாத்தியார் இப்படி பாட்டு சொல்லிக் கொடுத்தார்?' என்று என் தலையை உருட்டுவாள்." என்று சொல்வார். பாட்டு வந்தாலும் சரி, வராவிட்டாலும் சரி, பெண்ணாகப் பிறந்தால், பாடித் தான் ஆக வேண்டும். இல்லையென்றால் யார் விட்டார்கள்?

Basic Vocabulary

பிற	(7) be born
வைத்துக்கொள்	(1b) keep; imagine
கல்	(5d) study, learn
தினமும்	every day
காது	ear
வாய்	mouth
சண்டை	fight, quarrel. (to quarrel or fight is , 4)
சொல்லிக்கொடு	(6) teach
சொல்லித்தா	(conjugated like தா) teach
ஞாபகம் இரு	(7) remember (the thing remembered is the subject)
தொடங்கு	(3) begin
சாமான்	article, goods, luggage
பாதி	half (not used with numbers)
விடு	(4) leave

Vocabulary for Story

வாத்தியார்	teacher
பிராமணன்	Brahmin (adjective, பிராமண)
ஜரிகை	fancy border; gold or silver thread used in sarees.
துண்டு	towel, kept over shoulder
கடுக்கன்	earring
வெற்றிலை	betel leaf
சிவப்பு	redness
ஜானகி	(a typical Brahmin girl's name)
கீர்த்தனை	a Carnatic music song

கெஞ்சு	(3) talk softly, caressingly
அன்றைக்கு	that day
வேண்டிய	(past positive participle of வேண்டு^{3})
கணக்குப் பரீட்சை	arithmetic test
தலையணை	pillow
சண்டை	(noun) fight
பாய்	mat
ஏதாவது	some, any
தவறு	mistake
மாமியார்	mother-in-law; maternal-uncle's wife
உருட்டு	(3) roll, make roll

converbial + ஆகவேண்டும் one must really ___.

EXERCISES

I. நீங்கள் வந்த போது என்ன நடந்தது?

வந்த உடனே (mostly past only)

வந்த அப்புறம் (past only).

Form Participle from the following and Substitute for வந்த போது, etc.

சொல்லித்தா சண்டைபோடு கொஞ்சு உருட்டு

பிற மற பாடு கேள் சமை உருள்

II Correct the mistake

1. நான் போய்விடுவீர்கள்.
2. அங்கே தண்ணீர் குடித்தான் போது, நீங்கள் நின்றீர்களா?
3. நீங்கள் சாமான் வைத்த அவன் என்ன செய்தான்?
4. அவர் தூங்கிக்கொண்டிருந்த ஏன் இவ்வளவு சத்தம்?
5. நீங்கள் சண்டை போடுவேன்.

III Fill in the blanks

1. பையன் வேலையை ______. (முடி)
2. எனக்கு அந்தப் படம் நன்றாக ______. (தெரி)
3. உங்கள் தங்கை ______?
4. அங்கே ______ அவனோடு விளையாடுங்கள். (போ. Conv.)
5. இந்த வேலையை என்னால் ______ முடியும். (செய்)
6. இங்கே பாட்டு ______. (கற்றுக்கொள் Imp.)
7. பிராமணர்கள் இந்தியாவில் ______. (இரு.)
8. ஆறு மணிக்கு இட்லி ______. (சாப்பிடு. past.)
9. நான் பேசினவுடனே, அவர் ______. (தூங்கு past. neg.)

IV. Translate into Tamil.

1. When I came into the house, he was studying.
2. As soon as I saw him, he asked what had happened.
3. Before I spoke, he went out and called mother.
4. After he came in, I told him that Poṉṉaiyā wanted to speak to him.
5. As soon as I told him, anger came to him. He said that he did not want to see Poṉṉaiyā and went out.
6. Because of that, when I am in Madras (சென்னை), I will not see him.

பாடம் 27 பால்காரர்

அதோ! அங்கே ஒருவர் வருகிறது, தெரிகிறதா? அவர் தான் பால்காரர் பெருமாள் கோனார். அவர் காலையில் ஒரு தரம், மாலையில் ஒரு தரம் மாட்டோடு வருவார். 'அவர் கையில் என்ன," என்று கேட்கிறீர்களா? அது பால் குவளை. அது அலுமினியமா? தகரமா? ஆண்டவனுக்குத் தான் தெரியும். அந்த அழுக்குப் பாத்திரத்தில் பால் கறப்பது தான் அவர் பழக்கம். அந்த பாலைக் குடித்துத் தான் நாங்கள் வளர்ந்தோம். எங்களுக்கு இன்பெக்ஷன் வருமோ என்று பயப்படுகிறீர்கள், இல்லையா? எங்கள் உடம்பில் ரெஸிஸ்டென்ஸ் ஒருவேளை மிகவும் அதிகமாக இருக்கலாம்.

பாருங்கள், அந்தக் குவளையை தினமும் எங்களிடம் கவிழ்த்துக் காண்பிப்பார், அதில் தண்ணீர் இல்லை என்று காட்டத் தான். ஆனால் அதில் கட்டாயம் தண்ணீர் இருக்கும். அவர் கவிழ்க்கும் வேகத்தில் தண்ணீர் கீழே விழாது. "பாருங்கள், அம்மா! பால் நன்றாக இருக்கும். ஒரு சொட்டுத் தண்ணீர் கூட சேர்க்கவில்லை" என்று சொல்வார். என்னவோ, போங்கள், அந்த மாடுகளைப் பார்த்தால், பரிதாபமாக இருக்கும். அவைகளுக்கு ஒரே பசி! வழியில் எதைப் பார்த்தாலும்.... எச்சிலை, கார்ட்போர்டு, பேப்பர், எதுவானாலும் சரி, சாப்பிடும். அந்த மாடுகளுக்காக பரிதாபப்பட்டு, பால் வாங்கிக் கொள்வோம். ஆனால் காலையிலும், மாலையிலும் காபி இல்லாவிட்டால், எங்களுக்கு வேலை ஓடாது. அதனால் பால்காரன் பாலில் தண்ணீரைக் கலந்தாலும் சரி, தண்ணீரில் பாலைக் கலந்தாலும் சரி, அவனைக் காலையிலும், மாலையிலும் எதிர் பார்த்துக் கொண்டிருப்போம். இது என்ன ஹாங்க்-அப் என்கிறீர்களா? என்ன செய்வது?

Basic Vocabulary

தரம்	kind, sort, suitability (for one's position, rank); also, used to mean "time" like .
மாலை	evening
பசு	cow
பாத்திரம்	dish
படு	(4) (after a noun) experience, undergo. Thus பயப்படு undergo fear, be afraid
கட்டு	(3) build, construct; bind, tie
எச்சில்	saliva, anything made unclean by contact with saliva. (here) remnants of food
கல	(7) mix
எதிர்பார்	(6) expect

Vocabulary for Story

வருகிறது	(a verbal noun -- see 27.1, 27.2)
பெருமாள் கோனார்	(a name)
குவளை	vessel
தகரம்	tin, metal sheet coated with tin
ஆண்டவன்	God
(பால்) கற	(7) milk, milk into
கவிழ்	(2) overturn, be turned over (6) overturn, turn over (trans.)
காட்டு	(6) show
சொட்டு	tiny bit, drop
என்னவோ, போங்கள்	whatever the case may be
பரிதாபம்	pity
எதைப் பார்த்தாலும்	whatever they see
எதுவானாலும் சரி	whatever it is, it's all right
என்ன செய்வது?	what can one do?

Grammar

27.1. The formation of the positive verbal noun. The past, present, and future verbal nouns are formed respectively by adding -அது to the past, present, and future stems. Class-3 verbs may make their past verbal nouns either in the regular manner or by changing the final -இன்- of the past stem to -இய்- and then adding -அது to that.

CLASS AND ROOT			PAST V. N.	PRESENT V. N.	FUTURE V.N.
1a.	செய்	do	செய்தது	செய்கிறது	செய்வது
1b.	கொள்	take	கொண்டது	கொள்கிறது	கொள்வது
1c.	வெல்	conquer	வென்றது	வெல்கிறது	வெல்வது
2.	உட்கார்	sit down	உட்கார்ந்தது	உட்கார்கிறது	உட்கார்வது
3.	வாங்கு	buy	வாங்கினது	வாங்குகிறது	வாங்குவது
4.	சாப்பிடு	eat	சாப்பிட்டது	சாப்பிடுகிறது	சாப்பிடுவது
5a.	உண்	eat	உண்டது	உண்கிறது	உண்பது
5b.	தின்	eat	தின்றது	தின்கிறது	தின்பது
5c.	கேள்	ask, hear	கேட்டது	கேட்கிறது	கேட்பது
5d.	வில்	sell	விற்றது	விற்கிறது	விற்பது
6.	பார்	see	பார்த்தது	பார்க்கிறது	பார்ப்பது
7.	நட	walk	நடந்தது	நடக்கிறது	நடப்பது

As with the positive adjectival participle, the future is generally used for both present and future actions in formal Tamil, while in spoken Tamil, the present is used for present action and the infinitive + போகிறது is used for future action (see 24.3).

27.2. The use of the verbal noun. The verbal noun can often be translated by an English gerund, that is, by a verb ending in -ing and used as a noun, as "your coming here is a good thing." The verbal noun is used, essentially, to make a sentence into a noun phrase that can be used in another sentence. For example, one might begin with the sentence, "I came into the house," that is,

நான் வீட்டுக்குள்ளே வந்தேன்.

If, then, one wishes to say, "He saw my coming into the house," that is logically, "He saw (I came into the house)," with "I came into the house" the direct object of "saw," then in Tamil it is necessary only to make the verb "came" into a past verbal noun and then put into the accusative as the object of "saw":

நான் வீட்டுக்குள்ளே வந்ததை, அவர் பார்த்தார்.

Other examples are as follows:

நீ இங்கே வருவது நல்லதில்லை.

Your coming here is not a good thing (good thing = நல்லது).

அந்த பஸ் அங்கே நின்றதை நான் பார்த்தேன்.

I saw the bus standing there.

நீ புஸ்தகம் கொடுத்ததற்கு, அவன் என்ன சொன்னான்?

What did he say to your giving the book? (Note that with the dative of verbal nouns, -அற்கு, from -அன் + -கு , is generally used).

The instrumental of the verbal noun is often used for "because" clauses. The sentence "Because I came, he did not come" might be rephrased, "By (I came) he did not come." "I came" is நான் வந்தேன். As a verbal-noun phrase, this becomes நான் வந்தது . In the instrumental, this is நான் வந்ததால் or நான் வந்ததனால் (-அனால் is often used for the instrumental of verbal nouns). Thus the sentence above can be rendered:

நான் வந்ததால், அவர் வரவில்லை.

27.3. The use of dative verbal nouns with postpositions. In the dative, the verbal noun takes -அற்கு (in formal Tamil) or - உக்கு (in informal Tamil). Several words can be placed after the dative verbal noun to mean "before," "after," and "in order to."

The words முன் , முன்பு , or முன்னால் , or the suffix -உள்(ளே), can be placed after a future verbal noun in the dative (or, in informal speech, a present verbal noun in the dative) to express a "before" clause in English.

Note that முன், முன்னால், and முன்பு all mean "before," "in front of." Of these, முன்னால் is generally used in informal Tamil, the other two in formal Tamil. The suffix -உள்ளே means "inside"; the construction using that word described here means "within (the time it takes to...)"

Before she came:

அவள் வருவதற்கு முன்

Before I saw mother:

நான் அம்மாவைப் பார்ப்பதற்கு முன்னால்

The words பிறகு, பின் (formal), பின்னால் or அப்புறம் (informal) may be used before a past verbal noun in the dative for an "after" clause.

After we went to the movie:

அவன் சினிமாவுக்கு போனதற்குப் பின்னால்

After mother called me: அம்மா என்னைக் கூப்பிட்டதற்குப் பின்னால்.

The suffix - ஆக may be added to a future verbal noun in the dative (or, in informal Tamil, to a present verbal noun in the dative) to express "in order to." Note that when suffixed to a normal noun, the dative + - ஆக means "for the sake of."

So that she could come: அவள் வருவதற்காக

27.4. The formation of the negative verbal noun. This form is made by adding - ஆதது or - ஆமை (a more formal ending) to the *infinitive stem*. It is used like its positive counterpart (but it does not take postpositions).

CLASS AND ROOT			INFINITIVE STEM	NEGATIVE VERBAL NOUN
1a.	செய்	do	செய்ய்	செய்யாதது
1b.	கொள்	take	கொள்ள்	கொள்ளாதது.

1c.	வெல்	conquer	வெல்ல் -	வெல்லாதது
2.	உட்கார்	sit down	உட்கார் -	உட்காராதது
3.	வாங்கு	buy	வாங்க் -	வாங்காதது
4.	சாப்பிடு	eat	சாப்பிட் -	சாப்பிடாதது
5a.	உண்	eat	உண்ண் -	உண்ணாதது
5b.	தின்	eat	தின்ன் -	தின்னாதது
5c.	கேள்	ask, hear	கேட்க் -	கேட்காதது
5d.	வில்	sell	விற்க் -	விற்காதது
6.	பார்	see	பார்க்க் -	பார்க்காதது
7.	நட	walk	நடக்க் -	நடக்காதது.

Like the negative participle, the negative verbal noun has no tense.

27.5. Negation/affirmation of act. The word இல்லை ("there is not") or the word உண்டு ("there is") may be attached to the *positive* verbal noun to, respectively, negate the action of the verb or affirm it. The negation of act, which is somewhat more common that its positive counterpart, gives the sense that the act never takes (took, will take) place; it is contrasted with the ordinary negative, which generally refer to only one time. The affirmation of act stresses that an act *does* take place on occasion.

நான் பள்ளிக்கூடத்திற்கு போவதில்லை.

I do not go to school.

நான் பள்ளிக்கூடத்திற்கு போகவில்லை.

I am not going to school (right now).

நான் மூன்று வருடத்திற்கு முன்னால் பள்ளிக்கூடத்திற்குப் போனது இல்லை.

I did not go to school three years ago.

நான் நேற்று பள்ளிக்கூடம் போகவில்லை.

I did not go to school yesterday.

அவர் அங்கே போவது உண்டு.

Yes, he *does* (sometimes) go there.

Grammar Summary

27.1S. The formation of the positive verbal noun.

Past: past stem + -அது

(Class-3 verbs may also change -இன் of the past stem to -இய் before adding -அ).

Present: present stem + -அது

Future: future stem + -அது

27.2S. The use of the verbal noun. Review 27.2.

27.3S. The use of dative verbal nouns with postpositions.

Before: dative future verbal noun (or, in informal speech, dative present verbal noun) + முன், முன்பு, முன்னே or முன்னால், or the suffix -உள்(ளே)

After: dative past verbal noun + பிறகு, பின், பின்னால், OR அப்புறம்

In order to: dative future verbal noun (or, in formal speech, dative present verbal noun) + -ஆக

27.4S. The formation of the negative verbal noun.

Infinitive stem + -ஆதது or (more formally) -ஆமை.

27.5S. Negation/affirmation of act.

Negation: verbal noun + இல்லை

Affirmation: verbal noun + உண்டு

EXERCISES

I. Change to past, future, and negative.

கொண்டுவருகிறது, குடிக்கிறது, வளர்கிறது,
சமைக்கிறது, காட்டுகிறது, கொண்டுவருகிறது.

II. Change to present, future, and negative.

விழுந்தது, கலந்தது, எதிர்பார்த்தது, சாப்பிட்டது,
காட்டியது

III. Change to past, present, and negative.

விளையாடுவது, தருவது, வருவது, அனுப்புவது, விற்பது

IV. Correct the following.

1. நான் அங்கே வந்த உங்களுக்கு இஷ்டமா?
2. அவன் படித்தால் நீங்கள் பார்த்தீர்களா?
3. நான் வந்த, அவருக்கு இஷ்டமா?
4. அவர் சாமான் வாங்கின நீங்கள் என்ன சொன்னீர்கள்?
5. அவர் தூங்கின எனக்குப் பிடிக்கவில்லை.

V Fill up the blanks.

1. நான் ____ போது, அவர் கேட்டார். (சொல்.)
2. நீங்கள் ________, ஆறு மணிக்கு எழுந்திருங்கள். (தூங்கு Res.
3. நீங்கள் இங்கே ______, எனக்கு சந்தோஷம்.
4. பாத்திரம் ______ வேலைக்காரி எங்கே? (கழுவு.)
5. அவர் ஏன் ______ சட்டை போட்டிருக்கிறார்? (கிழி)

6. பாலும், பழமும் ______ சாப்பிட வேண்டும். (கல^{7})
7. அவர் யாரை ______? (எதிர்பார் cont.)
8. கதவை ______. (மூடு. neg. Imp.)
9. அவர் இங்கே ______ எனக்குப் பிடிக்கும். (வா. V.N.)

VI. Translate into Tamil, using verbal nouns wherever underlined.

1. I know about his coming here.
2. I saw the boy study there. (Translate twice, once with a verbal noun and once with a participle.)
3. Having heard about your coming to the city, I sent the letter.
4. Because you came here (translate "by your coming here"), I was able to go home.
5. Because father gave money for building the school, now the children can study.
6. My expecting her coming was a mistake.

பாடம் 28 - பண்டிகை

பண்டிகை என்றால் பொதுவாக வீட்டில் ஒரு பூஜை நடக்கும் நாள் என்று அர்த்தம். தமிழ்நாட்டில் விநாயகர் சதுர்த்தி, கிருஷ்ண ஜயந்தி, கொலு, சரஸ்வதி பூஜை, தீபாவளி, கார்த்திகை, பொங்கல் என்று பல பண்டிகைகள் இருக்கின்றன. "பண்டிகை நாளில் விருந்து சாப்பாடு இருக்குமா?" என்று கேட்கிறீர்களா? ஆமாம், கட்டாயம் அன்றைக்கு வீட்டில் எல்லோரும் பாயசம், வடை, அப்பளத்தோடு சாப்பிடுவோம். பூஜையிலும் பலவிதமான பலகாரங்களை வைத்துத் தான் பூஜை செய்வோம். அதோடு, சொந்தக்காரர்கள் வீட்டிலிருந்து ஏதாவது 'லட்டு, கிட்டு' வரும். பல பண்டிகைகளில் காலையில் அல்லது இராத்திரியில் விரதம் இருப்பது எங்கள் வழக்கம். 'அது என்ன விரதம்? என்கிறீர்களா? விரதம் என்றால் பண்டிகை நாட்களில் ஒருவேளை சாப்பிடாமல் இருக்க வேண்டும். உங்களுக்கு நாங்கள் சாப்பிடமாட்டோம் என்றால் ஆச்சரியமாக இருக்கிறதா? பக்கத்தில் வாருங்கள், ஒரு இரகசியம் சொல்கிறேன். விரத நாட்களிலும், விரத வேளைகளில் சிலர் ஏதாவது டிபன் சாப்பிடுவார்கள். உப்புமா, பால், பழம், இப்படி ஏதாவது ...... நான் சாப்பாட்டைப் பற்றியே பேசுகிறேன். பூஜை பற்றி ஒன்றும் சொல்லவில்லையே என்று கேட்கிறீர்களா? பூஜையில் கடவுளை அலங்கரித்து, ஏதாவது சில மந்திரங்களாவது, பாடல்களாவது சொல்வோம். அப்புறம், கடவுளுக்கும் நைவேத்தியம் கொடுப்போம். அப்புறம் எங்களுக்கு முக்கியமானது சாப்பாடு தான்.

"சோற்றுக்குப் பின்னால் தான் சொக்கரும், மீனாட்சியும்" என்று எங்கள் ஊரில் ஒரு பழமொழி கூட இருக்கிறது. உங்கள் ஊரில் எப்படி? "வீட்டுக்கு வீடு வாசற்படி" என்கிறீர்களா? உண்மை தான்.

Basic Vocabulary

அர்த்தம்	meaning
கூட்டிக்கொள்	(1b) take along with, take along (often as a converbial)
அன்றைக்கு	on that day (cf. இன்றைக்கு, today. Also learn என்றைக்கு -- what day, when (interrog.))
ஏதாவது	some, any
அல்லது	or, if not
வழக்கம்	habit, custom (same as பழக்கம்)
	(duration of) time, occasion, (number of) times
ஆச்சரியம்	wonder, amazement
கடைசி	end, termination, conclusion; கடைசியில் : finally
தவறு	(noun) mistake; (3) make a mistake; be lost
கதவு	door

Vocabulary for Story

பண்டிகை	festival, periodic festival
பூஜை, பூசை	puja, a religious ritual invoking and propitiating a deity
கணேச சதுர்த்தி	a festival for Ganesha (who is also called Vinayaka)
ஸ்ரீ ஜயந்தி	a festival celebrating the birth of Kirshna
கொலு	a festival of dolls
சரஸ்வதி பூஜை	the goddess of learning festivals
பாயசம்	a sweet, something like rice pudding
வடை	dahl soaked, ground up, and fried in balls the size of dumplings
அப்பளம்	poppadum, a kind of fried accompaniment to meals
பலவிதமான	of many sorts
பலகாரம்	refreshments other than boiled rice

லட்டு	a kind of sweet, shaped like a ball. கிட்டு is a nonsense word rhyming with லட்டு . Cf. English "person shmerson."
விரதம்	a vow
இரகசியம்	secret
சிலர்	some people
	cream of wheat fried with onions and vegetables
அலங்காரம்	ornament
மந்திரம்	mantra
பாடல்	song
நைவேத்தியம்	offering made to a deity
முக்கியமானது	the important thing
சாதம்	cooked rice
மீனாட்சி, சொக்கர்	(names of gods)
	proverb "சோற்றுக்குப் பின்னால் தான் சொக்கரும், மீனாட்சியும்"

EXERCISES.

I Change to tenses not given and negative.

அனுப்புகிறது தொடங்குவது சாப்பிட்டது தூங்கியது
கேட்டது நினைப்பது சமைக்கிறது கொடுப்பது
சொன்னது பார்க்கிறது.

II Change to Positive.

பெய்யாதது பயப்படாதது கூட்டிக்கொண்டுபோகாதது
கற்காதது உதவாதது திரும்பாதது
கழுவாதது துவைக்காதது பாடாதது
நிற்காதது.

IV Fill in the blanks.

1. நாங்கள் அங்கே போய், அவரை ——. (பார். past. neg.)
2. அவர் ——, நான் அவரைக் கூப்பிடுவேன். (விளையாடு. cond.)
3. நீங்கள் அவனோடு ——. (பேசு. potential.)
4. அங்கே அந்த சாமான் அவருக்கு ——. ? (கிடை. past.)
5. அவன் பாடம் ——, நான் பார்க்கவில்லை (படி. v.n.).
6. அவர்கள் —— என்னிடம் கொடுத்தார்கள். (சமை. Conv.)
7. அவர் என்ன —— ? (செய். cont. pre.)
8. நீங்கள் வீட்டுக்கு ——, சாப்பிடுவீர்களா? (திரும்பிப்போ. conv.)
9. அங்கே யார் —— ? (பாடு.^{3})
10. நீங்கள் —— எனக்குப் புரியவில்லை. (பேசு^{3} V.N.)

IV. Translate into Tamil, using verbal nouns where underlined.

1. What is the cause for this tree's not growing?

2. Because he does not teach girls, I was not able to study.

3. Before we came home, we saw Jim playing outside.

4. Because she did not write to me about her father, we did not know about his new work.

5. After we saw him, we were amazed.

6. After we met our new teacher, we took younger brother along with (us) to the store and bought fruits.

பாடம் 29 கச்சேரி

நீங்கள் எங்கள் கர்நாடக சங்கீத (கர்னாடிக் மியூஸிக்) கச்சேரிக்குப் போயிருக்கிறீர்களா? இல்லையா? வாருங்கள். நான் ராஜா அண்ணாமலை ஹாலுக்குப் போய்க்கொண்டிருக்கிறேன். இன்றைக்கு சனிக்கிழமை. கட்டாயம் கச்சேரி இருக்கும். உள்ளே போகலாமா? இது என்ன, இவ்வளவு பெரிய வரிசை என்கிறீர்களா? ஆமாம், எங்கள் ஊரில் எல்லாவற்றிற்கும் இப்படித்தான் வரிசை இருக்கும். சும்மா நிற்கலாம், வாருங்கள்.

அங்கே உட்கார்ந்திருப்பவர் தான் பாகதவர். அவரைச் சுற்றி இருப்பவர்கள் எல்லோரும் பக்க வாத்தியம் வாசிக்கிறார்கள். ஒருவர் பிடில் வாசிப்பவர். ஒருவர் மிருதங்கம் வாசிப்பவர். அங்கே பின்னால் ஒருத்தர் உட்கார்ந்திருக்கிறார், பாருங்கள், அவர் சுருதிக்காரர்.

நீங்கள் என்ன சொல்கிறீர்கள், பாகவதர் கையை மிகவும் நீட்டுகிறார். அது பக்க வாத்தியக்காரரை அடிக்கப் போகிறது என்று, பயப்படாதீர்கள். பக்க வாத்தியக்காரர்களுக்கு பழக்கம் உண்டு. நன்றாகத் தள்ளி உட்கார்ந்துகொள்ளுவார்கள். பாகதவர் இருக்கட்டும்! நம்மைச் சுற்றி இருக்கிற ரசிகர்களைப் பாருங்கள். அவர்கள் கையும், தலையும் என்ன பாடு படுகிறது! இப்படித் தான் எங்கள் கச்சேரிகள் இருக்கும்.

உங்களுக்கு எங்கள் கச்சேரி பிடித்திருக்கிறதா? இங்கே ஜனவரியில் மியூஸிக் ஸீஸன். நான் அப்போது அடிக்கடி இங்கே வருவது வழக்கம். நீங்களும் என்னோடு வரலாம்.

Basic Vocabulary

வரிசை	line, row
சும்மா	just, just for fun, without any reason, just because
சுற்று	(3) go around
சுற்றி	(preceded by acc. of word it governs) around
வாசி	(6) read; play (an instrument)
உண்டு	= இருக்கிறது, (it) is, there is
தள்ளு	(3) push; be at a little distance from

Vocabulary for Story

கச்சேரி	concert
ராஜா அண்ணாமலை ஹால்	Raja Annamalai Hall
சனிக்கிழமை	Saturday
பாகவதர்	Bhagavatar, singer
பக்கவாத்தியம்	accompanying instruments
மிருதங்கம்	mrdangam, concert drum
ஒருத்தர்	= ஒருவர்
சுருதிக்காரர்	person who plays the drone
நீட்டு	(3) stretch out
ரசிகன்	a connoisseur
பாடுபடு	(4) undergo difficulty

Grammar

29.1. The formation and use of the participial noun. In Tamil, an adjective can almost always be made into a noun by adding the endings -வன், -வள், -வர், -வர்கள், -து, and -வை or -ன to it. Thus,

big	பெரிய
a big man	பெரியவன்
a big man (resp.)	பெரியவர்
a big lady	பெரியவள்
big people	பெரியவர்கள்
a big thing	பெரியது
big things.	பெரியன, பெரியவை.

In this respect, participles are no different from other adjectives: all, with the exception of the future participle, make nouns, called participial nouns, by adding the above endings to the participle. Thus

a man who does	செய்கிறவன்
a man who did	செய்தவன்
a man who does (did, will) not do	செய்யாதவன்.

The future participial noun is formed differently for classes 1-4 and classes 5-7. Verbs belonging to classes 1-4 add the noun endings to the future stem after changing -வ்- to -ப்- and then adding -அது. But these classes add the ending -து (irrational singular) to the unaltered future stem + -அ. Verbs belonging to classes 5-7 add all the endings to the unaltered future stem + -அ. Classes 5a and 5b use the future stem in -ப்-.

ROOT AND CLASS		FUT. MASC. SG. PART. NOUN	FUT. IRRAT. PART. NOUN
1a. செய்	do	செய்பவன்	செய்வது
1b. கொள்	take	கொள்பவன்	கொள்வது
1c. வெல்	conquer	வெல்பவன்	வெல்வது

2.	உட்கார்	sit down	உட்கார்பவன்	உட்கார்வது
3.	வாங்கு	buy	வாங்குபவன்	வாங்குவது
4.	சாப்பிடு	eat	சாப்பிடுபவன்	சாப்பிடுவது
5a.	உண்	eat	உண்பவன்	உண்பது
5b.	தின்	eat	தின்பவன்	தின்பது
5c.	கேள்	hear, ask	கேட்பவன்	கேட்பது
5d.	வில்	sell	விற்பவன்	விற்பது
6.	பார்	see	பார்ப்பவன்	பார்ப்பது
7.	நட	walk	நடப்பவன்	நடப்பது

In all cases, the future irrational participial noun is identical to the future verbal noun (as are the present and past). செய்வது could mean either "that thing which does (or is done)" as a participial noun, or "doing" as a verbal noun. As with the verbal nouns and participles, the future is generally used in formal Tamil for present and future action, while in spoken Tamil the present form and the infinitive + the requisite participial noun of போ are used for present and future action respectively.

The usage of the participial noun is straightforward. The rational forms are always active, meaning "he who ___s," "she who ___s," etc. These words may take objects: என்னைப் பார்த்தவன், he who saw me. The irrational participial nouns may be either active or passive in sense. Thus செய்வது could mean "that which makes" (generally of an animal or child, though in many dialects this can be used also for a man or woman), or "that which is made." Like the rational forms, the first of these may take objects, while the second may take a subject: நான் செய்தது means "that which I made." It is always necessary to remember that the same verb form could be either a verbal noun or an active participial noun or an passive verbal noun, as well as, in the present and past, the finite 3rd-person irrational singular. செய்கிறது could mean "making," "that which makes," "that which is made," and "it makes." .

The negative participial noun is formed quite simply by adding the nominalizing endings (- வன் etc.) to the negative participle. Thus உட்கார், sit down, forms உட்காராதவன், he who does not sit down. She who does not see would be பார்க்காதவள். As for the participle, the tense is not specified in the negative participial noun: பார்க்காதவள் could as well meen "she who did not see" or "she who will not see."

Grammar Summary

29.1S. The formation of the participial noun.

The endings that make nouns from adjectives are: -வன், - வள், - வர், - வர்கள், - அது, - வை and - ன.

Past participial noun: past stem + - அ + nominalizing endings.

Present participial noun: present stem + - அ + nominalizing endings.

Future participial noun:

Classes 1-4: future stem with - வ்- changed to - ப்- + - அ + nominalizing endings (except for - து).

Classes 1-4, irrational singular: unaltered future stem + - அ + - து

Classes 5-7: unaltered futures stem + - அ + nominalizing endings.

Negative participial noun: negative participle + nominalizing endings (i.e. infinitive stem + - ஆத + nominalizing endings).

EXERCISES.

I Change to the tenses not given.

அழைப்புகிறவன் சாற்றுகிறவர்கள் அடித்தவள் தள்ளுகிறவன்
கொடுத்தவர்கள் திறந்தது தள்ளுபவர் சமைத்தவள்
நினைக்கிறவன்.

II Change to the negative

வந்தவர் சாற்றுகிறவர்கள் வாசித்தவன் எழுதுபவர்
தொடங்கினவன் பாடுபவர் நின்றவர்.

III Correct the sentences.

1. அவன் வந்துபோது, நான் அங்கே இல்லை.
2. இவர் கச்சேரி* செய்த, நான் வருவேன்.
3. இந்த பஸ் நின்ற நான் பார்த்தேன்.
4. அங்கே தூங்கின உங்கள் தம்பியா?
5. அடிக்கடி இங்கே பேசினால், நல்லது.**

IV Fill in the blanks.

1. கச்சேரியில் ______ எனக்குத் தெரியும். (பாடு. P.N.)
2. அவருக்கு பிரெஞ்சு பேசி ______ உண்டு.
3. நீங்கள் இப்போது வேகமாக தமிழ் ______? (வாசி.)
4. அவன் இராத்திரியில் மிகவும் ______. (பயப்படு)
5. நான் ______, உங்கள் அம்மா தான். (பார்)
6. அவர்கள் கதவை ______, என்னால் வெளியே போக முடியாது. (மூடு. Cond.)
7. அது இங்கே ஓடி ______ (வா. fut. neg.)

---

*concert

**a good thing

8. அவள் அழகாக ______. (பாடு. P.N.)

9. நீங்கள் ____ போது, என்ன சோப் போட்டீர்கள்? (குளி.)

10. இவர் இங்கே ______ கஷ்டம். (தூங்கு.)

Names of Some Fruits.

மா

பலா

வாழை

ஆரஞ்சு

ஆப்பிள்

பேரிக்காய்

கொய்யா

திராட்சை.

V. Translate into Tamil, using participial nouns where underlined.

1. Who is the one who invited you here?

2. The (man) whom I met in the store will come tomorrow.

3. How should I speak with (people) whom I have not met before?

4. The (thing) I sold is not this book.

5. Because she did not hear what mother said, she came to school that day.

பாடம் 30 குழந்தை

குழந்தைகளைப் பற்றி நான் பேசினால் உங்களுக்குப் பிடிக்குமோ, என்னவோ? - ஆனால், உலகம் தோன்றின நாள் முதல் நாம் எல்லோரும் கல்யாணம் செய்து கொள்கிறோம். குழந்தைகளைப் பெறுகிறோம். அது ஆடத்துடைய (Adam's) குற்றம், என்கிறீர்களா? - ஆனால் அந்த குற்றத்தை நாமும் தொடர்ந்து செய்கிறோம். ஏன் என்று உங்களுக்குத் தெரியுமா? - தெரியாதா? - எனக்கும் தெரியாது, போங்கள், எத்தனையோ காரியங்கள் இந்த உலகத்தில் நாம் காரணம் தெரியாமல் செய்கிறோம். அவைகளில் இதுவும் ஒன்று.

ஆனால் குழந்தைகள் பெரும் தொல்லை கொடுக்கும் பிராணிகள். எங்கள் வீட்டில் ஒரு இரண்டு வயதுக் குழந்தை இருக்கிறது. அதைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுகிறேன், கேளுங்கள். காலையில் எழுந்ததும், "எந்த விதமான முட்டை உனக்கு வேண்டும், பாபு?" என்று கேட்பேன். "வேக வைத்த முட்டை" என்பான். முட்டை பாதி வெந்ததும், 'அம்மா, எனக்கு பொரித்த முட்டை தான் வேண்டும்" என்பான். 'சரி' என்று வேறு ஒரு முட்டையை எடுத்துப் பொரிக்க ஆரம்பிப்பேன். பொரித்து முடிக்கும் முன்னால், அவன் எண்ணம் மாறி விடும். "வேக வைத்த முட்டை தான் வேண்டும்" என்பான். என்ன போங்கள்! கடைசியில் இரண்டு முட்டைகளையும் அவன் முன்னால் வைப்பேன். இதில் பாதி, அதில் பாதி சாப்பிடுவான். மீதியெல்லாம் அவன் தலையில், சட்டையில், கால், கை, தரையில் ---- அதோடு, தட்டை எடுத்துக் கொண்டு, "பூனைக்கு, நாய்க்கு ...." என்று வெளியே ஓடுவான். - பொறுமை, பொறுமை, பொறுமை தான் பெற்றோருக்கு ஒரே துணை.

Basic Vocabulary

உலகம்	world
தோன்று	(3) appear
பெறு	(4) give birth to; get, obtain; receive
குற்றம்	fault, sin
வயசு	age; years that one is old
விதம்	kind, sort (n.). விதமான sort, kind of (adj.)
முட்டை	egg
பழைய	old
மீதி	remainder
சட்டை	shirt; blouse
தரை	floor, ground
பூனை	cat
கெட்ட	bad, spoiled

Vocabulary for Story

-ஓ -ஓ	(translate only the second -ஓ as "or" before the word to which it is attached)
எத்தனையோ	how many!
பெரும்	= பெரிய
பிராணி	creature
பாபு	(endearing term for a child)
வேக	(inf. of வே , immediately below)
வே	(2) heat, cook (past stem வெந் -). Note that the past வெந்தது verbal noun + உம் means "as soon as."
பொரி	(6) fry

அதோடு	what's more (அது + ஓடு)
தட்டு	plate
பொறுமை	patience
பெற்றோர்	parents
துணை	companion, companion in need, help

Grammar

30.1. Adjectives from nouns and phrases. Many Tamil abstract nouns can be turned into adjectives by adding to them the suffix - ஆன or (less commonly) the suffix - உள்ள . Ordinarily, a noun may take only one of these suffixes. Note that both of these suffixes are participles meaning "which is (are)." The suffix ஆன is the past participle of ஆகு , to be or become, while the suffix உள்ள is a participle of the irregular verb உள் , to be.

NOUN		ADJECTIVE	
Intelligence	புத்தி	Intelligent	புத்தியுள்ள
Beauty	அழகு	Beautiful	அழகான
Speed	வேகம்	Swift, fast	வேகமான
Danger	ஆபத்து	Dangerous	ஆபத்தான

Sometimes, the suffix - ஆன may be affixed to a phrase in such a way that the phrase must be translated by a relative clause ("which is ___") in English. The word பிடித்தம் means "liking," "desire."

எனக்கு பிடித்தமான புஸ்தகம்.

means "a book that I like."

The suffix - உள்ள is often found after a locative to make it into an adjective. "The tree (which is) in the forest" should be translated,

காட்டில் உள்ள மரம்.

30.2. Adjectival nouns. In 29.1, it was shown that most Tamil adjectives can be made into nouns by adding the suffixes - வன், - வள், etc. to them. This process can also be applied to the adjectives formed in 30.1 above. Thus,

a handsome man	அழகானவர்
a beautiful woman	அழகானவள்
a beautiful thing	அழகானது
beautiful people	அழகானவர்கள்.

the man in the forest	காட்டில் உள்ளவன்.
the thing that I like	எனக்கு பிடித்தமானது.

Tamil has no predicate adjective. To translate "He is good," it is necessary to change the English predicate adjective into a noun ("He is a good man"):

She is big.	அவள் பெரியவள்.
This tree is small.	இந்த மரம் சிறியது.
That place is lovely.	அந்த இடம் அழகானது.
They are intelligent.	அவர்கள் புத்தியுள்ளவர்கள்.

Genitive forms are actually adjectives (since they modify nouns.) Like other adjectives, they also can be made into nouns. Thus,

that which is of me (i.e. is mine) என்னுடையது.

In English sentences such as "That is mine," (where "mine" is a predicate adjective), this nominal of the genitive must be used.

That dog is mine.	அந்த நாய் என்னுடையது.
He is yours.	அவன் உங்களுடையவன்.
Those trees are the temple's.	அந்த மரங்கள் கோவிலினுடையவை.
Whose is this store?	இந்தக் கடை யாருடையது?

Grammar Summary

30.1S. Adjectives from nouns and phrases.

Noun + - ஆன

Phrase + - ஆன

Noun + - உள்ள

Locative phrase + - உள்ள

30.2S. Adjectival nouns.

Adjective + - வன், - வள், - வர், - வர்கள், - து, - வை, - ன.

Exercises

I make sentences with adjectival nouns, using the following Adjectives.

பெரிய, சின்ன, நல்ல, கெட்ட, புதிய, பழைய,
அழகான, அவருடைய, எங்களுடைய, உங்களுடைய.

II Match the following.

அவன்
நான் பேசியதை
நாங்கள் நேற்று போய்
இன்றைக்கு வீடு கட்டுபவர்
இங்கே ஓடின நாய்

அவர் கேட்டார்.
என்னுடையது.
உங்கள் மாமாவா?
அவரைப் பார்த்தோம்.
அழகானவர்.

IV Make sentences using the following particles.

அப்புறம், முன்னால், பின்னால், கீழே, மேலே,
உள்ளே வெளியே கடைசியில் முதலில் மட்டும்.

names of Lentils

துவரம்பருப்பு
பாசிப் பருப்பு
கடலைப்பருப்பு

உளுந்தம்பருப்பு
சுண்டல்
கடலை

IV. Translate into Tamil.

1. I think that your studying Tamil is a good thing.
2. The cat playing outside is mine.
3. Whose are these spoiled eggs?
4. If you say (something) good, everyone will be happy.
5. This shirt is father's, but I do not know whose that sari is.
6. The world in which we were born is large, but the family in which we grew (up) is small.

பாடம் 31

குழந்தை

நான் எங்கேயாவது வெளியே கிளம்பும்போது, பாபுவுக்கு அழகான டாவுசர், சட்டை எடுத்துப் போடுவேன். நான் டிரஸ் செய்துகொள்ள உள்ளே போவேன். வெளியே வரும் முன்னால், அவன் உடையெல்லாம் நனைந்திருக்கும். "என்னடா செய்தாய்?" என்றால், "தண்ணீர், தண்ணீர் குடித்தேன்" என்பான். நான் அவன் உடையை மாற்றிவிட்டு, உள்ளே போவேன். சில சமயம் நான் மறுபடியும் திரும்பி வரும்போது, அவன் உடை நனையாமல் இருக்கும். சில சமயம் மறுபடியும் நான் உடை மாற்ற வேண்டியிருக்கும்.

ஒரு நாள் பாபு டெலிபோனோடு விளையாடிக்கொண்டிருந்தான். நான் ஏதோ வேலையில் கவனமாக இருந்தேன். கொஞ்ச நேரம் கழித்து, நான் அவனைப் பார்த்தபோது, "ஹலோ, ஹலோ, எஸ், நோ" என்று ஏதோ உளறிக்கொண்டிருந்தான். உடனே நான் டெலிபோனைக் கையில் எடுத்தேன். யாரோ ஒருவர் மற்ற ஒரு ஊரிலிருந்து பேசினார். "இது மேஸிஸ், நியூயார்க், நான் உங்களுக்கு உதவலாமா?" என்று மறுபடி, மறுபடி கேட்டுக்கொண்டேயிருந்தார். அதை ஏன் கேட்கிறீர்கள்? இந்த வாண்டுப் பயல் எப்படியோ பல எண்களைத் திருப்பியிருக்கிறான். கடைசியில் அது மேஸிஸ் கடை நம்பர். நான் அவரிடம், "மன்னித்துக்கொள்ளுங்கள். எனக்கு ஒன்றும் வேண்டாம் என்று டெலிபோனைக் கீழே வைத்தேன். டெலிபோன் பில் தான் தண்டம். நீங்கள் எங்கே எழுந்து போகிறீர்கள்? உங்கள் வாண்டுப் பயல் என்ன செய்கிறான் என்பதைப் பார்க்கவா? போங்கள், சீக்கிரம்.

Basic Vocabulary

மாற்று	(3) change (transitive). (This is a causative of மாறு -- see 31.1).
கவனம்	attention, care, heed, consideration
கவனி	(6) notice, pay heed to
கழி	(6) spend (time). கழித்து : after.
மற்ற	other
உதவு	(3) help
உதவி	(noun) help
மன்னி	(6 -- usually in middle) excuse, pardon
பதில்	reply, answer; instead of (postposition + dative)

Vocabulary for Story

எங்கேயாவது	somewhere
பாபு	(endearing term for a child)
உடை	clothes
நனை	(2) be wet
-டா	(used in addressing male inferiors and children)
வேண்டியிருக்கும்	it will be necessary
ஏதோ	some
உளறு	(3) mutter, go on about something
யாரோ	someone
மறுபடி, மறுபடி	again and again
வாண்டுப்பயல்	rascal
எப்படியோ	somehow
எண்	number
திருப்பு	(causative of திரும்பு -- see 31.1)
தண்டம்	punishment
என்பது	(used like என்று sometimes when the clause that precedes it is used as a noun)

Grammar

31.1. **The causative**. A causative is a verb that means "to cause to ___." An English example (one of the few true English causatives) is the verb "to fell," which is the causative of "fall." There are three main ways to make causatives in Tamil.

In modern Tamil, the causative is generally formed by adding செய் (1), பண்ணு (3) or வை (6) after the infinitive (வை may sometimes be put after the converbial as well). This is analogous to the modern English causative, which is made by putting "make" or "cause to" before the verb.

I made him talk:

நான் அவனைப் பேசச்செய்தேன் / பேசப்பண்ணினேன் / பேசவைத்தேன்.

I made him come:

நான் அவனை வரச்செய்தேன் / வரப்பண்ணினேன் / வரவைத்தேன்.

In literary Tamil, causatives may be made by adding - வி - (classes 1-4), - பி (class 5, classes 1b, 1c), and - ப்பி (class 6-7) to the present stem minus - (க்) கிற் . The new causative root thus formed belongs to class 6. Some of these verbs are used in modern Tamil (e.g. காண்பி, show).

I made him see (i.e. showed him): நான் அவருக்குக் காண்பித்தேன்.

He had the temple built: அவன் அந்தக் கோவிலைக் கட்டுவித்தான்.

Some verbs make a causative by doubling a single final consonant, or, if the final consonant is preceded directly by a nasal, by dropping the nasal and doubling the consonant.

ascend	ஏறு	cause to ascend	ஏற்று
run	ஓடு	cause to run, drive	ஓட்டு
be troubled	கலங்கு	cause to be troubled	கலக்கு
turn back	திரும்பு	cause to turn back	திருப்பு
become	ஆகு	cause to become	ஆக்கு

The verb நட , walk or happen, besides its causal form நடப்பி forms a more common causative in - த்து : நடத்து (3), to manage.

31.2. The passive. The Tamil passive, which is not used as often as its English counterpart, is made by placing the verb படு , 4 (whose literal meaning is "experience") after the infinitive. In very formal Tamil, பெறு, 4 may be used instead of படு .

இந்தக் கட்டடம் அவருடைய பணத்தால் கட்டப்பட்டது.
This building was built with his money.

In some cases, the verb படு may be added directly after the root to form the passive. Thus from அடி (6), beat, is formed அடிபடு .

அடிபட்டவன் என் தம்பி.
The one who was beaten is my younger brother.

Note that படு^{4} (or, in very formal Tamil, பெறு 4) may be placed after an abstract noun X to make a verb meaning "to experience X," "to feel X."

to feel happiness, to be happy, to be glad: சந்தோஷப்படு^{4}

to feel upset: கஷ்டப்படு^{4}

Grammar Summary

31.1. The causative.

Inf. + செய் (1), பண்ணு (3), or வை (6).

Converbial + வை (6).

Class 1-4: root + - வி

Class 5, 1b, 1c: root as modified before the present stem marker - வி

Class 6, 7: root + - ப்பி

(C)V̆Cu --> (C)V̆CCu.

Grammar

31.1. **The causative**. A causative is a verb that means "to cause to ___." An English example (one of the few true English causatives) is the verb "to fell," which is the causative of "fall." There are three main ways to make causatives in Tamil.

In modern Tamil, the causative is generally formed by adding செய் (1), பண்ணு (3) or வை (6) after the infinitive (வை may sometimes be put after the converbial as well). This is analogous to the modern English causative, which is made by putting "make" or "cause to" before the verb.

I made him talk:

நான் அவனைப் பேசச் செய்தேன் / பேசப்பண்ணினேன் / பேசவைத்தேன்.

I made him come:

நான் அவனை வரச்செய்தேன் / வரப்பண்ணினேன் / வரவைத்தேன்.

In literary Tamil, causatives may be made by adding - வி - (classes 1-4), - பி (class 5, classes 1b, 1c), and - ப்பி (class 6-7) to the present stem minus - (க்) கிற் . The new causative root thus formed belongs to class 6. Some of these verbs are used in modern Tamil (e.g. காண்பி, show).

I made him see (i.e. showed him): நான் அவருக்குக் காண்பித்தேன்.

He had the temple built: அவன் அந்தக் கோவிலைக் கட்டுவித்தான்.

Some verbs make a causative by doubling a single final consonant, or, if the final consonant is preceded directly by a nasal, by dropping the nasal and doubling the consonant.

ascend	ஏறு	cause to ascend	ஏற்று
run	ஓடு	cause to run, drive	ஓட்டு
be troubled	கலங்கு	cause to be troubled	கலக்கு
turn back	திரும்பு	cause to turn back	திருப்பு
become	ஆகு	cause to become	ஆக்கு

பாடம் 32 இராமாயணம் எப்படி இருந்தது?

மணி பெரிய சோம்பேறி. எங்கே இருந்தாலும் தூங்கிக் கொண்டேயிருப்பான். அவனை எழுப்புவது மிகவும் கஷ்டம். இது அவனுடைய அம்மாவுக்கு மிகவும் கஷ்டமாயிருந்தது.

அந்த ஊரில் தினமும் ஒரு பாகவதர் இராமாயணக் கதையைக் கதாகாலட்சேபம் செய்வார். இராமாயணத்துக்குப் போய், விழித்திருந்து, கதை கேட்டால், ஒரு வேளை மணியின் தூங்கப் பழக்கம் போய்விடும் என்று மணியின் அம்மா நினைத்தாள். மணியிடம், "இராமாயணத்துக்குப் போ" என்று கெஞ்சிக் கேட்டாள். ஒரு நாள் அவன் இராமாயணத்துக்குப் போக ஒப்புக்கொண்டான்.

மணி இராமாயணத்துக்குப் போய், ஓரிடத்தில் வசதியாக உட்கார்ந்துகொண்டான். இராமாயணம் ஆரம்பித்தது. மணிக்கு எப்போதும் போல் தூக்கம் வந்தது. தூங்கிவிட்டான். மணியின் பக்கத்தில் இருந்த ஒருவனுக்கு பாகவதர் முகத்தைப் பார்க்க முடியவில்லை. அவன் மிகவும் குள்ளமான ஆசாமி. அதனால் மணி தூங்குவதைப் பார்த்ததும், அவன் மீது ஏறி உட்கார்ந்துகொண்டான். காலையில் சூரியன் வந்ததும், மணி எழுந்தான். அவன் உடல் எல்லாம் மிகவும் வலித்தது. வீட்டுக்குத் திரும்பிவந்தான். அம்மா, "இராமாயணம் எப்படிடா இருந்தது, கண்ணு?" என்று கேட்டாள். "போம்மா, நீ வேறு! இராமாயணம் ஒரு ஆள் கனம் இருந்தது. நான் இனிமேல் இராமாயணம் கேட்கப் போகமாட்டேன்" என்றான்.

Basic Vocabulary

சிரி	(6) laugh
சோம்பேறி	lazy person
கதை	story
ஒப்புக்கொள்	(1b) accept
வசதி	comfort, convenience
ஆசாமி	fellow
சூரியன்	(masculine) sun
வலி	(noun) pain; (6) hurt (intransitive)
ஆள்	man, person
எத்தனை	how many, how much

Vocabulary for Story

இராமாயணம்	*Rāmāyaṇa*, a Hindu epic about Rama, an Avatar of Vishnu
எழுப்பு	(3) (causative of எழு²)
பாகவதர்	Bhagavatar, a singer
கதாகாலட்சேபம்	recitation of a mythological story in the traditional way
விழி	(6) see, stay awake
கெஞ்சு	(3) beg, cajole
ஓர்	= ஒரு
குள்ளம்	shortness
Verbal noun + - உம்	"as soon as...."
மீது	on, on top of
-டா	(used in addressing male inferiors and children)
கண்ணு	(a term of endearment -- literally "eye")
– ம்மா	from அம்மா
நீ வேறு	(here) don't put me on!
கனம்	heaviness

Grammar

32.1. Interrogative + -um. An interrogative word + - உம் becomes universal. In James Lindholm's description, "The addition of the suffix - உம் 'inclusive' to an interrogative expression cancels its interrogative force and gives it the power of open-ended reference similar to the effect of 'any' in English declarative statements (i.e. as in 'I'll go anywhere,' but not as in questions like 'Did you go anywhere?')" He adds that in negative contexts, the interrogative + - உம் is used for open-ended exclusion. Such negative use can be translated by "any" with a negative verb, or by a negative universal (never, no one, nothing) with a positive English verb. In Tamil, the negative sense must be conveyed by the verb. Study the following examples taken from Lindholm:

எங்கேயும்	"any-where" = anywhere, everywhere; (with neg.) nowhere
எப்பொழுதும்	"any-when" = anytime, always; (with neg.) never
எப்படியும்	"any-how" = anyway, in any way; (with neg.) in no way, under no circumstances
எத்தனையும்	"any-how many" = any number; (with neg.) none at all
எவ்வளவும்	"any-how much" = any amount; (with neg.) to no extent
யாரும்	"any-who" = anyone, every single one; (with neg.) no one

Note that - உம் is attached after the case endings: எதையும் பார்க்காமல் "without seeing anything," "seeing nothing." When used with an interrogative adjective, the - உம் is attached to the modified noun: எந்த ஊரிலும் "not in any town," "in no town."

32.2. Interrogative + -ō. When - ஓ is added to an interrogative, the interrogative force is lost and is replaced by a sense of uncertainty. This can be rendered in English by the word "some," providing that there is a sense of uncertainty. The sense may also be one of indifference ("somewhere, I don't care where").

எங்கேயோ	somewhere (but I am not sure where)
எப்பொழுதோ	at some time (but I do not know when)

எப்படியோ	in some way (but I don't know how)
எத்தனையோ	some number (but I don't know how many)
எவ்வளவோ	to some extent (but I am not sure how much)
யாரோ	someone (but I don't know who).

Many of these words can be used in expressions of amazement at the extent of something, especially the words எத்தனையோ (how many!) and எவ்வளவோ (how much!). Thus, எவ்வளவோ சொன்னார், "How much he said!"

32.3. Interrogative + -āvatu. Like the preceding two suffixes, -ஆவது cancels the interrogative force of the word to which it is added, replacing it with the sense of "one out of several." This is generally conveyed by the English word "some," provided there is not a sense of uncertainty, in which -ஆவது must be used instead. In interrogative sentences, this construction may be translated by "any" in English ("Did you go anywhere?" i.e. any one of several places).

எங்கேயாவது	somewhere
எப்பொழுதாவது	at some time, sometimes
எப்படியாவது	somehow
எத்தனையாவது	some number
எவ்வளவாவது	to some extent
யாராவது	someone.

Grammar Summary

32.1S. Interrogative + -um. This gives the sense of "any" (except in an English question). In negative sentences, it may be translated by a negative universal.

32.2S. Interrogative + -ō. This gives the sense of "some" (I don't know or don't care exactly what).

32.3S. Interrogative + -āvatu. This gives the sense of "some," when there is no uncertainty or indifference implied.

Exercises.

I Form Universals and Indefinites.

யார் எங்கே எப்போது எவ்வளவு எப்படி
எத்தனை என்ன என்றைக்கு ஒருவர் ஒன்று

II Match the following.

1. யாரோ.	இங்கே சிரிக்கமாட்டார்கள்.
2. எங்கேயோ	பொய் பேசக்கூடாது.
3. என்னவும்	அவர் குளித்தார்.
4. என்றைக்கும்	அங்கே சமைத்தார்கள்.
5. ஒருவரும்	நீங்கள் வாங்கலாம்.

III Fill in the blanks with Universals or Indefinites.

1. நீங்கள் ______, டக்ஸியில் ஏறினீர்களா?
2. அவர் ______, காசியில் இருந்துவிடுவார்.
3. தினமும் ______ ஒரு பெரிய மனிதர் இங்கே வருவார்.
4. சூரியன் ______ இராத்திரியில் வராது.
5. அவர்களுக்கு ______ பாட்டும் தெரியாது.

Names of Some Spices.

மிளகாய்
உப்பு
புளி
இஞ்சி

சீரகம்
கொத்தமல்லி
மஞ்சள்

ஏலம்
பட்டை
கிராம்பு
சோம்பு

கடுகு

கருவேப்பிலை
கொத்தமல்லி

IV. Translate into Tamil.

1. If you never laugh, no one will listen to you.

2. When someone came back from the temple, everyone asked him to tell the story about Rāmaṉ. (Translate: "Everyone told....")

3. No one must speak. I am going to tell a story that no one has ever heard (before).

4. They heard the story without laughing, but no one thought it was the truth.

5. She took the clothes no one had washed and gave them to the person who had come.

6. This does not hurt even a little. Do not worry.

பாடம் 33 சாமியார்புரம் ரெயில்வே ஸ்டேஷன்

இது தான் எங்கள் ஊர் ரெயில்வே ஸ்டேஷன். இது என்ன, இவ்வளவு சிறிதாக இருக்கிறதே, என்று கேட்கிறீர்களா? ஆமாம், எங்கள் ஊர் என்ன, நியூயார்க்கா? சாமியார்புரம் தானே? இங்கே தினமும் ஒரு ரயில் நிற்கும் என்று நான் சொன்னால், உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கிறதா? அதோடு, ஒரு எக்ஸ்பிரஸ் வண்டி, தினமும் இரவில் இங்கே நிற்காமல் இந்த வழியாகப் போகும்.

அதோ, பாருங்கள்! அவர் தான் பாலகிருஷ்ண ஐயர். எங்கள் ஊர் ஸ்டேஷன் மாஸ்டர். அவர் தினமும் காலையில் ஸ்டேஷனுக்கு வந்துவிடுவார். நியூஸ் பேப்பர் படிப்பார். அப்புறம் அவருடைய சிநேகிதர் கோவிந்தராஜய்யர் அங்கே வருவார். அவர் ரிடயர்டு ஸ்டேஷன் மாஸ்டர். அப்புறம் இருவரும் சீட்டு விளையாடுவார்கள். பாலகிருஷ்ண ஐயருக்கு வேறு வேலை எதுவுமில்லை. எப்போதாவது ரெயில்வே இன்ஸ்பெக்டர் யாராவது வந்தால், அவருடைய போர்ட்டர் கந்தசாமி அவரிடம் ஓடிவந்து சொல்லிவிடுவான். உடனே அவர் தொப்பியையும், கோட்டையும் அணிந்து கொள்வார். கோவிந்தராஜய்யர் ஸ்டேஷன் பின்புறமாக மெதுவாக நழுவி விடுவார். பாலகிருஷ்ண ஐயர், இன்ஸ்பெக்டர் முன்னால் போய், ஸல்யூட் அடிப்பார். அது மட்டுமா? அவரை ஊருக்குள் கூட்டிக்கொண்டு போய், காபி, டிபன் வாங்கிக் கொடுப்பார். இன்ஸ்பெக்டர் அவருடைய ஹாஸ்பிடாலிடியை புகழ்ந்து கொண்டே அடுத்த ரயிலில் போய்விடுவார்.

Basic Vocabulary

வண்டி	cart, train, train car
இரவு	night
இருவர்	two people
விட	than, compared to (preceded by accusative of object of comparison
அணி	(noun) ornament; (2) put on
புகழ்	(noun) fame; (2) praise
ஆடு	(3) dance, move (in a rhythmical way); (after cards) play

Vocabulary for Story

சாமியார் புரம்	(name of a town)
சீட்டு	cards
பின்புறம்	back side
நழுவு	(3) slip-away
அடி	(translate this word here as "make")
தொப்பி	hat

Grammar

33.1. The comparative. Tamil adjectives have no comparative or superlative forms. Rather, these ideas are expressed by using the adjectives in special ways. For the comparative, the sense of comparison is expressed by translating the English "than." This may be done in two basic ways.

1. The word following English "than" may be put in the accusative before the Tamil word விட or காட்டிலும்.

அவன் என்னை விடப் பெரியவன்.

He is bigger than me.

இந்த வீடு அந்த வீட்டைக் காட்டிலும் சிறியது.

This house is smaller than that house.

2. In very formal Tamil, - இலும் or - இனும் may be added to the oblique form of the word that follows English "than."

அவன் இவனினும் பெரியவன்.

He is bigger than this person.

33.2. The superlative. This sense is rendered by using a locative (or the suffix - உள், "among") for the things that the superlative relates to. "He is the biggest of us" must be translated "among us, he is big," that is, எங்களுள் அவன் பெரியவன் or எங்களில் அவன் பெரியவன்.

This construction virtually always gives a superlative connotation in Tamil.

நான் படித்த புஸ்தகங்களில் இது நல்லது.

This is the best book I have ever read.

The locative may be expressed by an adverb sometimes:

அவன் இங்கே சின்ன பையன்.

He is the smallest boy here.

Grammar Summary

33.1S. The comparative. 1. The word after English "than" may be put in the accusative, followed by the word விட or காட்டிலும். 2. The suffix - இனும் or - இலும் may be added to the word following the English "than."

33.2S. The superlative. The things that the superlative relates to are placed in the locative (or take the suffix - உள்).

EXERCISES

I Change to Comparative and Superlative

1. அவர் என்னைப் போல நல்லவர்.
2. கம்பியூட்டர் எங்களைப் போல பேசாது
3. நீங்கள் அவரைப் போல பேசுவீர்களா?
4. அவள் உங்களைப் போல அழகானவளா?
5. அவர்கள் அதைப் போல பயப்படுவார்களா?

II Change to Superlative and Positive

1. நான் அவரை விட சாப்பிடுவேன்.
2. கமலா என்னை விட அதிகம் இளிப்பாள்.
3. அவர் உங்களை விட நன்றாகப் பாடுவார்.
4. ராஜா, **உங்களை** விட **சோம்பேறி**.
5. இந்த சட்டை, அந்த சட்டையை விட அழகானது.

IV Change to Positive and Comparative

1. இந்த கறி எல்லாவற்றையும் விட நல்லது.
2. நீங்கள் எல்லோரையும் விட, நன்றாகச் சாப்பிடுகிறீர்கள்.
3. அவர், எல்லோரையும் விட, வேகமாக ஓடுவார்.
4. அவள் எல்லோரையும் விட, அழகானவள்.

IV. Translate into Tamil.

1. He is bigger than me.
2. He is the smallest of (translate "among") all the students.
3. He knows how to read faster than the teacher.
4. Which of the two saris that you bought is better? (Translate like a superlative).
5. This is the biggest house I have ever seen.
6. Standing here for the bus is better than walking home.

பாடம் 34 சாமியார்புரம் ரெயில்வே ஸ்டேஷன்

நான் சாமியார்புரம் ரெயில்வே ஸ்டேஷனைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தேன், இல்லையா? அதோ, வருகிறான், பாருங்கள், அவன் தான் போர்ட்டர் கந்தசாமி. எப்பொழுது இஷ்டமோ அப்பொழுது வேலைக்கு வருவான். எப்பொழுது வீட்டுக்குப் போக இஷ்டமோ, அப்பொழுது போய்விடுவான். ஆனால் எப்பொழுதும் ரெயில் வரும் நேரத்தில் தவறாது ஆஜர் ஆகிவிடுவான். டிரெயின் வந்ததும், ஓடிப்போய் கடிதங்கள் நிறைந்த பையை வாங்கிக்கொண்டு வருவான். போஸ்ட்மேன் ரங்கன் அதை வாங்கிக் கொண்டு போய்விடுவான். டிரெயினிலிருந்து எத்தனை பேர் இறங்குவார்கள் என்று கேட்கிறீர்கள்? சில சமயம் இரண்டு, சில சமயம் மூன்று, சில சமயம் நான்கு பேர் கூட இறங்குவார்கள். பிறகு கந்தசாமி டிக்கட் செக் பண்ணும் போது, யாராவது தெரிந்தவர்கள் இறங்கினால், அவர்களோடு வளவள-வென்று பேச ஆரம்பித்துவிடுவான். சில சமயம் பின்னால் நிற்பவன் யாராவது டிக்கட் இல்லாமல் வந்திருந்தால், மெதுவாக நழுவி விடுவான். வேறு யாராவது ஸ்டேஷனுக்குள் போய், ஐயரிடம் கம்ப்ளெயின் பண்ணினால், "என்ன ஸார், அவசரம்? நீங்கள் என்ன விசேஷத்துக்குப் போகிறீர்கள்?" என்று ஐயர் சொல்வார். சில சமயம், "டிக்கட்டை என்னிடம் கொடுத்துவிட்டு, இப்படியே போய்விடுங்கள், ஸார்" என்பார். அவர் பேசுவது எல்லாம் அவர் சீட்டில் எவ்வளவு கவனம் செலுத்துகிறார் என்பதைப் பொறுத்திருக்கிறது. "சரி தான்! இது என்ன, இப்படி ஒரு ஸ்டேஷனே?" என்று நீங்கள் கேட்கிறீர்கள்! நான் தான் சொன்னேனே! நாம் சாமியார்புரத்தைப் பற்றிப் பேசுகிறோம். நியூயார்க் பற்றி அல்ல.

Basic Vocabulary

ஆகு, ஆ	(3) be, become. (ஆகு is regular, but is often replaced by ஆ , which takes the present stem ஆகிற்- the future stem ஆவ்-, and the past stem ஆன்-, with the converbial ஆய்).
நிறை	(2) be full; (6) fill
பை	bag, pocket
நம்பு	(3) believe
இறங்கு	(3) get down, get out (of a vehicle), descend
செல்	(1c) go
அல்ல	not (used attributionally in formal Tamil -- e.g. "He is not a tall person," not existentially, as "There is no book here," where one must use இல்லை.)

Vocabulary for Story

இஷ்டமோ	see for the construction, which is a relative
ஆஜர்	present
வளவளவென்று	(used to denote excessive and unbroken talking)
நழுவு	(3) slip away
விசேஷம்	special occasion
சீட்டு	cards
செலுத்து	(3) caus. of செல், go. கவனம் செலுத்து pay attention
பொறுத்திரு	(7) depend on

Grammar

34.1. Indirect discourse with -āka. The normal way to render indirect discourse is with என்று, as has been seen (17.3). It is, however, also possible to translate indirect discourse without making it direct by using a verbal noun for the verb in the indirect discourse and adding - ஆக to it. In such sentences, if the subject of the verb in indirect discourse is the same as the subject of the main sentence and if it is 3rd person, the iterative pronoun தான் is used as the subject of the verb in indirect discourse. Thus

தான் வருவதாக அவன் சொன்னான்.
He said that he (i.e. he himself) would come.

அவன் வருவதாக அவன் சொன்னான்.
He said that he (someone else) would come.

வருவேன் என்று அம்மா சொன்னதாக அவ எழுதினாள்.
She wrote that mother said she should come.

34.2. The immediative. This construction, used to translate "as soon as" clauses, is more formal than the past participle + - உடன் (24.5), which means the same thing. It is made by adding - உம் to the past verbal noun.

அவனைப் பார்த்ததும், நான் சிரித்தேன்
As soon as I saw him, I laughed.

நான் மரத்தில் ஏறினதும், பயப்பட்டேன்.
As soon as I climbed the tree, I was afraid.

Grammar Summary

34.1S. Indirect discourse with -āka. Use verbal noun + - ஆக for verb in indirect discourse.

34.2S. The immediative. Past verbal noun + - உம்.

EXERCISES

I Change the following Construction to Verbal N+ ஆக

1. அந்தக் கோவிலைச் சுற்றினான் என்று அவர்கள் சொன்னார்கள்.
2. அந்த மரம் அங்கே இருந்தது என்று நான் கேட்டேன்.
3. அங்கே மழை பெய்தது என்று ரேடியோ சொன்னது.
4. அவர்கள் கெட்டவர்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?
5. அவர்கள் சுவாமி கும்பிடுவார்கள் என்று அவர் சொன்னாரா?

II Form Immediative and make sentences.

செய் அடி இறங்கு பசி சமை

சாப்பிடு கொடு படி சுற்று எழுந்திரு

III Form sentences which gives meaning 'since'.

நம்பு ஓடு விழு தூங்கு கேள்

புறப்படு நுழை பார் போடு வாங்கு.

IV. Translate into Tamil.

1. As soon as she opened the door and entered the house, she saw the gardener standing there.
2. He said that the teacher had come and written a letter (use -ஆக construction).
3. Since younger brother is always studying, no one talks with him.
4. As soon as he knew the money was in his pocket (-ஆக construction), he happily went to class and wrote the lesson.
5. Mother writes that she went to the temple and bowed to the god. (Use -ஆக construction, and தான் for "she").
6. As soon as the food was ready, everyone sat down and began to eat rice and sambar.

பாடம் 35

காபி

யாராவது வெளிநாட்டார் (வட இந்தியரையும் சேர்த்துக் கொள்ளுங்களேன்) வீட்டுக்கு, தென்னிந்தியர்கள் யாராவது போனால், "டீ சாப்பிடுங்கள்! டீ தானே எல்லோரும் இந்தியாவில் சாப்பிடுவார்கள்" என்று சொல்வார்கள். "காபி தான் தென்னிந்தியர்களுக்கு உயிர் போல" - அது ஏன் அவர்களுக்குத் தெரியவில்லை. எங்கள் வீட்டில் எப்போதாவது நாங்கள் டீ குடித்தால், அன்றைக்குக் காபி போட பால் இல்லை என்று அர்த்தம். காலையில் ஆறு மணிக்கு பால்காரன் வந்து தான் அம்மாவை எழுப்புவான். அம்மா இராத்திரியே டிகாக்ஷன் போட்டு வைத்திருப்பாள். பால்காரன் வந்ததும், உடனே காபி போட்டு, குடித்து விடுவாள். நாங்கள் எல்லோரும் எழுந்ததும், முதலில் சமையலறைக்குப் போய், காபி தான் கேட்போம். காபி இல்லாவிட்டால் வீட்டில் ஒரே ரகளை! ஒரு நாள் பால்காரன் வராவிட்டால், அவ்வளவு தான்! ஆறு மணிக்கு அம்மாவுக்குத் தலைவலி வந்துவிடும். நானும், தம்பியும் எங்காவது அலைந்து, பால் வாங்கிக் கொண்டு வருவோம். அப்பா எழுவதற்குள் காபி தயாராக இல்லாவிட்டால், "பால்காரன் வந்தானா, இல்லையா? அவன் வராவிட்டால், கண்ணனாவது, மணியாவது, எங்கேயாவது போய், பால் வாங்கிக் கொண்டு வரக்கூடாதா?" என்று கடகட வென்று பேசிக் கொண்டே போவார். "ஒரு கப் காபிக்கா இவ்வளவு ரகளை?" என்று கேட்கிறீர்கள். ஆமா என்ன செய்வது? காபி என்றால் எங்களுக்கு உயிர். காருக்கு காஸ் எவ்வளவு அவசியமோ, அவ்வளவு அவசியம் காபி எங்களுக்கு.

Basic Vocabulary

வட	northern, north (adjective)
தென்	southern, south (adjective)
உயிர்	life
அறை	room
அலை	(2) wander
அவசியம்	necessity

Vocabulary for Story

வெளிநாட்டார்	someone from outside the country
எழுப்பு	(causative of எழு)
சமையலறை	kitchen
ரகளை	racket, chaos, fuss
கடகடவென்று	(used to denote rapid uninterrupted speech)

Grammar

35.1. Concessive of fact. This construction translates "though" or "even though" clauses when the action described by the verb in the clause *actually happened* (in which case you must use the concessive of supposition). Another way of putting this is that you use concessive of fact for an "although" clause unless the "although" can be replaced by "even if." This construction is made by adding - உம் to the converbial of the verb of the "although" clause.

அவன் வந்தும், நான் அவனோடு பேசவில்லை.
Although he came, I did not speak with him.

அவன் கடைக்குப் போயும், ஒன்றும் வாங்கவில்லை.
Although he went to the store, he bought nothing.

Be careful to differentiate this form from the immediative (which is the past verbal noun + - உம்).

35.2. Concessive of supposition. This form, which is far more common than the concessive of fact, translates English "even if" clauses. It is used when the actio the verb of the concessive clause is not a fact, but is conjectured. It is formed by adding - உம் to the conditional. Alternatively, the word may be placed after the conditional. Sometimes, கூட is placed after the conditional + - உம் to stress the suppositional nature of the clause.

அவன் இங்கே வராவிட்டாலும் பரவாயில்லை.
Even if he does not come here, it does not matter.

அவன் வராவிட்டாலும் கூட, அவன் தம்பி வருவான்.
Even if he does not come, his younger brother will come.

35.3. Concessive of supposition with an interrogative word. When an interrogative word is placed in a concessive-of-supposition clause, it takes on a sense of universality and the clause must be translated by a "...ever" clause in English rather than by an "even-if" clause.

யார் போனாலும், நான் போகமாட்டேன்.

Whoever goes there, I will not go.

நீங்கள் எப்போது வந்தாலும், நான் உங்களோடு பேசமாட்டேன்.

Whenever you come, I will not speak with you.

நீங்கள் எங்கே நடந்தாலும், நீங்கள் பூக்களைப் பார்ப்பீர்கள்.

Wherever you walk, you will see flowers.

நீங்கள் எவ்வளவு படித்தாலும், பாஸ் பண்ண மாட்டீர்கள்.

However much you study, you will not pass.

This usage has given rise to some idioms. எப்போது பார்த்தா or எப்பொழுது பார்த்தாலும் means literally "whenever you look," -லும் but it often means just "always." Similarly, எங்கே போனாலும் ("wherever you go") means "everywhere."

35.4. The conditional of conjecture. When the facts expressed by a conditional are conjectured, then the verb of the *if* clause must be expressed by a converbial plus இருந்தால் . The verb of the main clause is then expressed by a future resultive (converbial + the future of இரு).

நான் உங்களைப் பார்த்திருந்தால், வந்திருப்பேன்.

If I had seen you, I would have come.

அவன் என்னைப் பார்த்திருந்தால், வந்திருக்கமாட்டான்.

If he had seen me, he would not have come.

அவன் என்னைப் பார்த்திருக்காவிட்டால், வந்திருப்பான்.

If he had not seen me, he would have come.

அவன் அந்தக் கடிதத்தை அனுப்பியிருந்தால், நான் போயிருப்பேன்.

If she had sent the letter, I would have gone.

Grammar Summary

35.1S. Concessive of fact. Translates "although" clauses. Converbial + -உம்.

35.2S. Concessive of supposition. Translates "even though" clauses. Conditional + -உம்.

35.3S. Concessive of supposition with an interrogative word. Translates "...ever" clauses. Use an interrogative word + conditional + -உம்.

35.4S. Conditional of conjecture. Translates "if" clauses when the facts it expresses are conjectured. Converbial + இருந்தால் in the "if" clause; the future resultive (converbial + the future of இரு) for the main clause.

EXERCISES

I Form concessive of fact from the following and make sentences.

பேசு கேள் போ ஆடு நினை
பாடு நில் தூங்கு பார் பயப்படு.

II Form concessive of supposition and form sentences.

சாப்பிடு ஆடு அனுப்பு ஓடு பெய்
வாங்கு காட்டு உட்கார் ஆரம்பி கூப்பிடு.

III Match the following.

1. அவன் சட்டை கிழிந்தும்	நீங்கள் பாடுங்கள்.
2. அவர்கள் தமிழில் பேசினாலும்	நான் போவேன்
3. அவர் அங்கே போகாமலிருந்தாலும்	எனக்குப் புரியாது.
4. நான் நிறைய சாப்பிட்டும்	அதைப் போட்டுக்கொண்டிருக்கிறான்.
5. என் சிநேகிதர் பாடாவிட்டாலும்	எனக்கு இன்னும் பசிக்கிறது.

Fill in the blanks with concessives of fact and supposition.

IV 1. அவர் ________, நான் இராத்திரியில் அங்கே இருந்தேன். (பய^7)
2. அவர் கதவில் ______, உங்களால் நுழைய முடியாது. (நுழை)
3. அவன் அங்கே ______, நீங்கள் அவனோடு பேசவில்லை. (வா)
4. நான் கடிதம் ______, அவர் பதில் எழுதவில்லை. (எழுது)
5. அவன் இங்கே ______, நான் பார்க்கவில்லை. (நில்)

IV. Translate into Tamil.

1. Even if no one studies at night, I think that you should study now.
2. Though he was a teacher, he did not want to teach in that class.
3. If she had come to the house that day, we would have told her to come inside and spoken to her.
4. Whoever comes, I won't eat with him.
5. Wherever you look, shopkeepers are selling goods (சாமான்).
6. However much you wash this sari, it is still dirty.

This appendix includes most of the grammatical forms not given in the text above. It is suggested that you read through it to familiarize yourself with the forms; it is not necessary to memorize all of them. All are given in the index of grammatical forms below, so that you may find them should you encounter them in reading. Many forms in this appendix are followed by a number. This is a reference to the paragraph in which they are described (in much greater detail than here) in *A Standard Grammar of Modern and Classical Tamil* by M. Andronov (Madras, New Century Book House, 1969).

I. Personal endings. In the past, the 3rd-person rational endings - அனன், - அனள், and - அனர் may be substituted for - ஆன், - ஆள், - ஆர், and - ஆர்கள், with - அனர் replacing both - ஆர் and - ஆர்கள்.

He did	செய்தனன்
She did	செய்தனள்
He (resp.) did	செய்தனர்.
They did	செய்தனர்.

In classical Tamil, a number of various endings are encountered. These are simply listed here.

1st person singular: - என் (92), - அன் (93), - து (present -- 95), - கு (future -- 95).

1st person plural: - ஆம் (99), - அம் (100), - ஓம் (101), - எம் (101), - ஓங்கள் (102), - ஆங்கள் (102), - தும் (present -- 103), - கும் (future -- 103).

2nd person singular. - ஐ (107), - இ (present -- 108).

2nd person plural: - இர் (112).

3rd person plural rational: - அ (125).

3rd person singular irrational: - உந்து (132)

3rd person plural irrational: - அ (134).

II. The imperative and related forms.

1. Imperative endings.

Imperative singular: - ஆய் (143), added to stem; - இ (143).

Imperative plural: - ஈர் (147), - ஈர்கள் (147), - மின் (148), - மினீர் (148), - மின்கள் (148).

2. The general optative. This is used for the second person and has the same meaning as the imperative. For classes 1-5, - க is added to the present stem minus - கிற். For classes 6-7, the infinitive is used.

Come, come!	வருக, வருக!
Look at this!	இதைப் பார்க்க.
Long live India!	இந்தியா வாழ்க.

3. The personal optative. - ஆக is added to the finite verb form.

Look at this!	இதைப் பார்ப்பாயாக.
May he come!	அவர் வருவாராக.

A similar form is made by adding - உம் to the infinitive (with a 2nd-person meaning).

4. The negative imperative.

Negative imperative singular and plural: - அல் (206), - ஏல் (206), - ஆல் (206), - அற்க (209).

5. Forms meaning "in order to."

- இயர் (171), - இய (171), - ஆன் (added to future -- 172), - ஆக்கு (added to future -- 172). Note that future + - ஆனேன் means "why should...." (172).

6. "Why don't you..." form.

This is made by adding - ஏன் to the imperative.

"Why don't you sit down?" உட்காருங்களேன்.

III. The simultaneous infinitive. In form, this is identical to the regular infinitive. An infinitive may be used to express an action which occurs at the same time as the action of the main verb. The subject of the two verbs may be different. This is an extremely common usage.

அரசன் உள்ளே வர, அவள் எழுந்தாள்.

As the king came in, she stood up.

IV. The converbial.

1. The positive converbial: -ஐஇ (161), -ஈஇ (161), -ய் (161), -ஆ (163), -ஊ (163).

2. The negative converbial: -ஆ (204), -ஆமை (204), ஆமே (204).

V. The participle.

1. The positive participle: -ஐஇய (in past -- 157), -ஈஇய (in past -- 157), -உங்கு (in future -- 158). In addition, it is very common in classical Tamil to find the unaltered stem used as a present positive participle. Thus,

இமிழ் அலை "roaring waves."

2. The negative participle: -ஆ (201). *Note that the infinitive stem (or root) + -ஆ may have three possible meanings: 1. a positive converbial; 2. a negative converbial; 3. a negative participle.*

VI. The conditional. Endings found for the positive conditional include -இன் (174) and -இல் (174).

